விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 21 செவ்வாய்க்கிழமை (04.06.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 167



## அதிர்ச்சியில் அரசு; அதிர்ந்தனர் தேரர்கள்

# ஒற்றுமை என்னும் அஸ்திரத்தால் சாதித்த முஸ்லிம் அரசியல்வாதிகள்

(கொழும்பு)

முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் முஸ்லிம் ஆளுநர்கள் தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர். முஸ்லிம் அரசியல்வாதிகள் அனைவரும் ஒன்றுகூடி ஒற்றுமையாக எடுத்த மேற்படி அதிரடி நடவடிக்கையால் இலங்கை அரசும் பௌத்த தேரர்களும் அதிர்ச்சியடைந்துள்ளனர். (24ம் பக்கம் பார்க்க...)





## முஸ்லிம் அமைச்சர்கள், ஆளுநர்கள் 11 பேர் கூட்டாக நேற்று பதவி விலகினர்



(கொழும்பு)

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் இரு முஸ்லிம் ஆளுநர்களும் கூட்டாக இராஜினாமா செய்துள்ளனர்.

தங்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணை முடியும் வரை தாங்கள் பதவியில் இருக்க விரும்பவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு மிகக் கடுமையான அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளமை காரணமாக கிழக்கு மாகாண ஆளுநர் பதவியை தான் இராஜினாமா செய்துள்ளதாக எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார். 23

### தமிழர்களின் தீர்வு விடயத்தில் அரசின் அசமந்தம் தொடர்பில்
## கனேடிய உயர்ஸ்தானிகருடன் சிறீதரன் எம்.பி கலந்துரையாடல்



(கிளிநொச்சி)

கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மக்கினனுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவ. 24

### பின்வரிசையிலிருந்து அரசுக்கு ஆதரவு
## இரத்த ஆறு ஓடச்செய்ய சிலர் முயற்சி - கபீர் ஹாசிம்

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓடுவதற்கு வழிவகுக்கும் சில பிரிவுகளின் முயற்சிகள் தடுக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

முஸ்லிம் உறுப்பினர்கள் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஒரு மாதத்துக்குள் விசாரணை நடத்தி தீர்வு 24

### பயங்கரவாத தாக்குதல்
## 2,289 பேர் இதுவரை கைது

(கொழும்பு)

ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி நாட்டின் பல பகுதிகளில் நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக, இதுவரை 2ஆயிரத்து 289 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரி 24

## ரிஷாத், அசாத் சாலி, ஹிஸ்புல்லாவை கைது செய்யக்கோரி பாரிய போராட்டம்

(கொழும்பு)

ரிஷாத் பதியுதீன், அசாத் சாலி, ஹிஸ்புல்லா ஆகியோரை கைது செய்யுமாறு கோரி, கொழும்பில் நேற்று பாரிய போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் கொழும்பு புறக்கோட்டை. ரயில் 24



## நிலைமைகளை உணர்ந்து சுயாதீனமாக முடிவெடுங்கள்!
### பதவி துறக்குமுன் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் பிரதமர் ரணில் கூறியது

(கொழும்பு)

விசாரணைகளுக்கு அமைச்சுப் பதவிகள் தடையாக இருக்குமென கருதினால் முஸ்லிம் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் நிலைமைகளை உணர்ந்து சுயாதீனமாக முடிவெடுங்கள்.

உங்களின் தீர்மானத்தில் எனது தலையீடு இருக்காது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார். அத்துடன் அரசாங்கத்தில் பின்வரிசை உறுப்பினர் 23

# நீதிமன்ற உத்தரவு கிடைக்கும் பட்சத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்த தயார்

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

நீதிமன்றத்தால் உத்தரவு கிடைக்கும் பட்சத்தில் எல்லைநிர்ணய செயற்பாட்டை கருத்திற்கொள்ளாது மாகாண சபைத்தேர்தலை விரைவில் நடத்துவதற்குத் தயார் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு நேற்று அறிவித்தது.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி உதித இஹலஹேவா இவ்வாறு மன்றுரைத்தார்.

கலைக்கப்பட்டுள்ள வட மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளின் தேர்தல்களை விரைவில் நடத்த உத்தரவிடுமாறு கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய இந்த மனுவின் பிரதிவாதியாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

இதேவேளை, தற்போது கலைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துமாறு உத்தரவிடக்கோரி உண்மையை கண்டறிவதற்கான அமைப்பினால் தாக்கல் செய்யப்பட்ட மனு உயர் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

இந்த மனு எதிர்வரும் 17ஆம் திகதி மீள விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என நீதியரசர்கள் அமர்வு உத்தரவிட்டது. (ம-3)

# வவுனியா புதூர் பகுதியில் விபத்தில் மூவர் படுகாயம்

## ஆலயத்துக்கு செல்லும்போது விபரீதம்

(வவுனியா)

வவுனியா புதூரில் விபத்தில் சிக்கி மூவர் காயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சிக்கிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா புதூர் நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா நேற்று சிறப்பாக இடம்பெற்ற நிலையில் இரவு 7.40 மணியளவில் ஆலயத்திற்கு செல்லும் வீதியில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

முச்சக்கரவண்டியொன்றுடன் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதிலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த வயோதிபர் படுகாயமடைந்த நிலையிலும் முச்சக்கரவண்டியில் பயணித்த பெண்ணொருவர் உட்பட இருவரும் காயமடைந்த நிலையில் நோயாளர் காவு வண்டியின் ஊடாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.(ம-3,114,250)

# முஸ்லிம் மக்களோடு தொடர்ந்து தோழமையோடு துணை நிற்போம்

## பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்

"நேற்று தமிழர்கள், இன்று முஸ்லிம்கள், நாளை இன்னொரு 'மற்றவர்'. முஸ்லிம் மக்களோடு நாம் தொடர்ந்து தோழமையோடு நிற்போம்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

"முஸ்லிம் அமைச்சர்கள் இனவாதத்திற்கு இரையானது வருந்தத்தக்கது. நேற்று நாம், இன்று நீங்கள், நாளை இனனொரு 'மற்றவர்'. முஸ்லிம் மக்களோடு நாம் தொடர்ந்து தோழமையோடு நிற்போம். நேர்ச் சிந்தனையுள்ள அனைத்து இலங்கையரையும் அதையே செய்யுமாறு அழைக்கிறோம்" என்று அவர் தமிழ் தேசியக் கூட்டமைபபின் உத்தியோக பூர்வ கீச்சகத்தில் பதிவிட்டுள்ளார். (ம-3)


## துயர் பகிர்கின்றோம்



எமது வட மாகாண நெசவு போதனாசிரிய சங்கத்தின் கௌரவ செயலாளர்
T.கமலாதேவிஅவர்களின் அன்புக் கணவர்

**இளையதம்பி தனபாலசிங்கம்**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு நாமும் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு குடும்பத்தவர்க்கு ஆறுதல் கூறி நிற்கின்றோம்.

**வட மாகாண நெசவு போதனாசிரியர் சங்கம்** (9028)


# ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக பொலிஸ் விசாரணை அவசியம்

## ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் மீதான நம்பிக்கையில்லா பிரேரணையினைவிட பொலிஸாரின் விசாரணையே தற்போது அவசியம் என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற ரிஷாத் பதியுதீன் மீது பயங்கர வாதிகளுக்கு உதவுதல் மற்றும் உத்வேகப்படுத்துதல் போன்ற குற்றச்சாட்டுக்கள் உள்ளமையினால், பாராளுமன்றில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையான பிரேரணை அதற்கு தீர்வாக அமையாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

எனவே இந்த குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான ரிஷாத் பதியுதீன் நிரபராதியா அல்லது குற்றவாளியா என குற்றவியல் புலனாய்வு திணைக்களம் தீர்மானிக்கட்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் இந்த விசாரணைகளை நடத்த பாதுகாப்பு அமைச்சர்என்ற அடிப்படையில்ஜனாதிபதியே விசாரணையை உடனடியாக நடத்த வேண்டும் என்றும் அவர் கூறினார். (ம-3)


## வேலைக்கு ஆள் தேவை

முல்லைத்தீவு பகுதியில் தோட்ட வேலைக்கு ஆள் தேவை. வயதானவர்களும் ஊனமுற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
சம்பளம் மாதம் - 15000/= (C-6593)
தொ.பே:- 0771681697, 0766205322

## வீடு விற்பனைக்கு

வட்டு.கிழக்கு வட்டுக்கோட்டை, குளிப்பன் வீதியில் 1 3/4 பரப்புடைய வீடு சகல வசதிகளுடனும் விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம் (C 6592)
077 803 7876

# அகவை அறுபதில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



உயர்திரு

## சிவஞானசுந்தரம் சிவசேகரம்

**(உரிமையாளர் - ரூபின்ஸ் கட்டட நிர்மாணம், தலைவர், ரூபின்ஸ் மருத்துவமனை (பிறைவேட் லிமிற்ரட்) நெல்லியடி)**

03.06.2019 நேற்று அகவை அறுபதில் மணிவிழாக் கண்ட திரு.சி.சிவசேகரமும் அவர் தம் துணைவியார் திருமதி வசந்தி சிவசேகரமும் இன்னும் பல்லாண்டு சிறப்போடு வாழ்ந்து வளம் பெறுக.

அல்வை வேவிலந்தை ஸ்ரீமுத்துமாரியம்மன்
ஆலயத்தை அழகுற அமைத்துத் தந்த
சிவசேகரமும் அவரது துணைவியாரையும்
அன்போடு வாழ்த்தும்

(C-6591)

ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்

தலைவர், செயலாளர், பொருளாளர்

## UNIVERSITY OF JAFFNA
## FACULTY OF GRADUATE STUDIES
## WALK -IN - INTERVIEW

**Postgraduate Diploma in Library and Information Science Batch III**

Walk in interview for the Postgraduate Diploma in Library and Information Science will be held on **08.06.2019 at 9.00** a.m at the Board Room of the Faculty of Graduate Studies, University of Jaffna, palaly Road, Thirunelvely.

**Course duration** : One year

**Medium of instruction** : Tamil

**Course Fee** : Eighty five thousand rupees (Rs.85,000/-)

**Admission Requirements:**

a) A Bachelor's degree from a recognized University or Higher Educational Institution.
b) A satisfactory working knowledge in English.
c) A fair knowledge in Computer applications (preferred).

Preference will be given to applicants who presently associate with work in the Libraries.

Interested candidates with the required qualifications are expected to be present for the interview and bring **Fulfilled Application form (you can download the application form www.grad.jfn.ac.lk this website),Educational certificates& statements, Service certificate,National Identity card** etc.

**Note: - The Candidates those who registered for this course need not attend to the interview again.**

Registrar
University of Jaffna
03/06/2019. (C-6590)

## முஸ்லிம் தலைவர்கள் மூவரையும் பதவி நீக்கக்கோரும்

# ரத்ன தேரரின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு

# ஆதரவாக பதுளையில் நேற்று மாபெரும் பேரணி



(பதுளை)

**அத்துரலிய ரத்ன தேரரின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் ஆளுநர்களான அசாத் சாலி, ஹிஸ்புல்லா அமைச்சர் றிசாத் பதியுதீன் ஆகியோரை உடனடியாக பதவி நீக்கக் கோரி பதுளை நகரில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றது.**

இப்பேரணியை பொதுபல சேனா அமைப்பும் சமூக அமைப்புக்களும் இணைந்து மேற்கொண்டன.

இப்பேரணிக்கு ஆதரவளிக்கும் வகையில் பதுளை மாநகரின் அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன. இப்பேரணியில் எதிர்ப்புப் பதாகைகளைத் தாங்கிய வண்ணம் அரசை எதிர்க்கும் வகையில் கோஷங்களை எழுப்பிய வண்ணம்பெருந்திரளான மக்கள்கலந்து கொண்டனர். இந்நிலையில் குறித்த பேரணிக்கு பொலிஸ் பாதுகாப்பும் விடுத்தப்பட்டிருந்தது. (இ-7)

# தேரருக்கு தீர்வு; ஜனாதிபதி, பிரதமருக்கு மகாநாயக்க தேரர்கள் அவசரக்கடிதம்





(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு மகாநாயக்க தேரர்கள் அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தனர்.

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அத்துரலிய ரத்ன தேரரின் கோரிக்கைக்கு உடன் தீர்வு ஒன்றைப் பெற்றுத் தருமாறு வலியுறுத்தியே மகாநாயக்கர்கள் இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்தனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களைத் தொடர்ந்து அமைச்சர் றிசாத் பதியுதீன் மற்றும் ஆளுநர்களான அசாத் சாலி, ஹிஸ்புல்லா ஆகியோர் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் எனக் கோரிக்கை வலுப்பெற்று வருகின்றது.

குறித்த மூவரும் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தி கண்டியில் அத்துரலிய ரத்ன தேரர் நேற்று நான்காவது நாளாகவும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

அத்துடன், அத்துரலிய ரத்ன தேரருக்கு ஆதரவாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கடையடைப்பு, போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையிலேயே அத்துரலிய ரத்ன தேரரின் கோரிக்கைகளுக்குத் தீர்வு ஒன்றைப் பெற்றுத்தருமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் மகாநாயக்க தேரர்கள் கோரிக்கை விடுத்தனர். (இ-7)

### அலரிமாளிகையில்

# மகிந்த, ரணில், மங்கள முக்கிய கலந்துரையாடல்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் நிதியமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர் முக்கிய பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

கடந்த ஏப்ரல் மாதம் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் பின்னர் நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்தே பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் நிதி அமைச்சர் ஆகியோர் குறித்த கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இக் கலந்துரையாடல் நேற்று அலரிமாளிகையில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் நாட்டில் நிலவும் பொருளாதார நிலைமை குறித்தும் பொருளாதார ரீதியில் மக்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளமை குறித்தும் அரசாங்கம் இவ் விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தி மக்களுக்கு ஏதேனும் வகையில் உதவி வழங்குவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. (இ-7)




# மின்னலாய் மீண்டது பாகிஸ்தான்

## இங்கிலாந்தை வீழ்த்தி அபாரம்

உலகக் கிண்ணத் தொடரில் இங்கிலாந்துக்கு எதிரான லீக் போட்டியில் பாகிஸ்தான் அணி 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றி பெற்றது. இங்கிலாந்தின் ஜோ ரூட், பட்லர் சதம் வீணானது.


சதம் அடித்த இங்கிலாந்தின் ஜோ ரூட்

**அதிவேக சதம்**

உலக கிண்ண அரங்கில் அதிவேக சதம் அடித்த இங்கிலாந்து வீரர் ஆனார் பட்லர் (75 பந்து). இதற்கு முன் 2007 உலக கிண்ணத் தொடரில் பீற்றர்சன் 90 பந்துகளில் சதம் (எதிர் மே.தீவுகள்) அடித்து இருந்தார்.

இங்கிலாந்தில் 12வது உலகக் கிண்ணத் கிரிக்கெட் தொடர் நடக்கிறது. நேற்று நொட்டிங்காமில் நடந்த லீக் போட்டியில் பாகிஸ்தான், இங்கிலாந்து அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணித் தலை வர் மோர்கன், களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**ஹபீஸ் 'லக்கி'**

பாகிஸ்தான் அணிக்கு பகர் ஜமான், இமாம் உல் ஹக் ஜோடி சுப்பர் ஆரம்பம் கொடுத்தது. பாகிஸ்தான் அணியின் ஓட்டஎண்ணிக்கை வேகமாக உயர்ந்தது. முதல் விக்கெட்டுக்காக 82 ஓட்டங்கள் எடுத்த போது, பகர் ஜமான் (36), மொயீன் சுழலில் சிக்கினார். மீண்டும் மிரட்டிய இவர், இமாமை (44) வெளியேற்றினார்.

பாபர் ஆசம், மொஹமட் ஹபீஸ் இணைந்தனர். ரஷித் ஓவரில் 2 பவுண்டரி, ஒரு சிக்சர் அடித்த பாபர் ஆசம், 13வது அரைசதம் எட்டினார். ஹபீஸ் 14 ஓட்டங்களில் கொடுத்த எளிய 'பிடி' வாய்ப்பை ஜேசன் ரோய் கோட்டை விட்டார். வாய் ப்பை கெட்டியாக பிடித்துக் கொண்ட ஹபீஸ், 38வது அரைச் சதம் கடந்தார். பாபர் ஆசம் 63 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, ஹபீஸ் 84 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

**சர்பராஸ் அரைசதம்**

சர்பராஸ், 11வது அரைசதம். அடித்தார். இவர் 55 ஓட்டங்கள் எடுத்து வோக்சிடம் 'பிடி' கொடுத்தார். வகாப் ரியாஸ் (4), சோயப் மாலிக் (8) ஏமாற்றிய போதும், பாகிஸ்தான் அணி 50 ஓவரில் 8 விக்கெட்டுக்களை இழந்து 348 ஓட்டங்கள் குவித்தது. ஹசன் அலி, ஷதாப் கான் தலா 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இங்கிலாந்து சார்பில் வோக்ஸ் 3, மொயீன் அலி 3, மார்க் வூட் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

**ஜோ ரூட் கலக்கல்**

கடின இலக்கைத் துரத்திய இங்கிலாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது. ஜேசன் ரோய் (8), பேர்ஸ்டோவ் (32) ஏமாற்றினர். தடுமாறிய ஒய்ன் மோர்கனை (9), ஹபீஸ் போல்டாக்கினார். ஸ்ரோக்ஸ் 13 ஓட்டங்கள் எடுத்தார்.

மறுபக்கம் 9 ஓட்டங்களில் பாபர் அசம் தயவில் தப்பிய ஜோ ரூட், வேகமாக ஓட்டங்கள் சேர்த்தார்.

**சதம் வீண்**

அடுத்து ஜோ ரூட்டுடன் இணைந்தார் பட்லர். ஹபீஸ் வீசிய போட்டியின் 23வது ஓவரில் இருவரும் தலா ஒரு சிக்சர் அடித்தனர். மறுபக்கம் ஜோ ரூட், 15வது சதம் கடந்தார். இவர் 107 ஓட்டங்கள் எடுத்த போது, ஷதாப் சுழலில் வீழ்ந்தார். 75 பந்தில் சதம் அடித்த பட்லர் (103) அடுத்த பந்தில் வீழ்ந்தார். கடைசி நேரத்தில் மொயீன் அலி, வோக்ஸ் இணைந்து போராடினர். பாகிஸ்தான் களத்தடுப்பும் மோசமாக இருக்க, இங்கிலாந்து வெற்றியை நெருங்கியது.

**வகாப் திருப்பம்**

வகாப் வீசிய 48 வது ஓவரில் மொயீன் அலி (19), வோக்ஸ் (21) அடுத் தடுத்து ஆட்டமிழக்க, போட்டி பாகிஸ்தான் பக்கம் திரும்பியது.

கடைசியில் இங்கிலாந்து அணி 50 ஓவரில் 9 விக்கெட்டுக்களை இழந்து 334 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. வூட் (10), ரஷித் (3) ஆட்டமிழக்காமல் இருந்தனர். பாகிஸ்தான் 4 ஓட்டங்களால் 'திரில்' வெற்றி பெற்றது.


விக்கெட் ஒன்றை கொய்த மகிழ்ச்சியில் பாகிஸ்தானின் அமீர்

**முற்றுப்புள்ளி**

மே.தீவுகளுக்கு எதிரான முதல் போட்டியில் 105 ஓட்டங் களுக்கு சுருண்ட பாகிஸ்தான் அணி, இங்கிலாந் துக்கு எதிராக 348 ஓட்டங்கள் குவித்து மீண்டது. சமீபத்தில் 0-4 என, ஒருநாள் தொடரை இங்கிலாந்திடம் இழந்த பாகிஸ் தான் அணி, கடைசியாக பங்கேற்ற 11 ஒருநாள் போட்டிக ளிலும் வெற்றி பெறவில்லை (10 தோல்வி, ஒரு போட்டி ரத்து). நேற்று வென்ற இந்த அணி தொடர்ச்சியான தோல்விக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

# பயிற்சியில் இந்தியா

## நாளை தெ.ஆபி.,வுடன் முதல் முயற்சி


பயிற்சியின்போது இந்திய அணித் தலைவர் விராட் ஹோலி

உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணி, நாளை தனது முதல் போட்டியில் தென்னாபிரிக்காவை சந்திக்கிறது. உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்க கடந்த மே 22ஆம் திகதி இந்திய அணி வீரர்கள் இங்கிலாந்து சென்றனர். இதற்கான முதல் பயிற்சி போட்டியில் நியூசிலாந்திடம் தோற்ற போதும், அடுத்து பங்களாதேஷை வீழ்த்தினர்.

இன்று ஆப்கானிஸ்தான், இலங்கை அணிகள் இரண்டாவது போட்டியில் மோதுகின்றன. ஆனால் இந்திய அணி நாளை தான் தனது முதல் போட்டியில் களமிறங்குகிறது. இதற்கு முன் இந்திய வீரர்கள் சவுத்தாம்ப்டனில் தங்கியுள்ளது இங்குள்ள சூழல், வானிலை குறித்து அறிய நன்கு உதவியாக இருக்கும் என நம்பப்படுகிறது.

தவிர தோள்பட்டை காயத்தில் இருந்து மீண்டாலும், கேதர் ஜாதவ் இரண்டு பயிற்சி போட்டியில் விளையாடவில்லை. வரும் போட்டிகளில் இவர் களமிறங்குவது சந்தேகமாக இருந்தது. இதேபோல முதுகு வலியால் அவ திப்பட்ட 'சகலதுறை வீரர்' ஹர்திக் பாண்ட்யா, விஜய் சங்கர் உள்ளிட்டோருக்கு இந்த ஓய்வு பெரும் உதவியாக அமைந்தது எனலாம்.

தவிர ஐ.பி.எல்., தொடரில் தொடர்ந்து விளையாடிய இந்திய வீரர்கள் எல்லோரும் புத்துணர்ச்சி பெற இந்த நாட்கள் உதவியாக இருந்திருக்கும் எனத் தெரிகிறது.

**தீவிர பயிற்சி**

இதனிடையே நாளை முதல் போட்டியில் களமிறங்க உள்ள நிலையில், நேற்று இந்திய அணி வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர். வலது கட்டை விரலில் காயமடைந்த அணித் தலைவர் ஹோலி, 'சீனியர்' தோனி உள்ளிட்டோர் பேட்டிங் பயிற்சி செய்தனர். விஜய் சங்கர், குல்தீப் யாதவ் உள்ளிட்டோர் பந்துவீச்சுப் பயிற்சியில் ஈடுபட்டனர். கேதர் ஜாதவ், ஹர்திக் பாண்ட்யாவும் பயிற்சி செய்தனர்.




# இந்தியாவை சமாளிக்க புதிய உக்தி

## டு பிளசி உறுதி

அடுத்தடுத்த போட்டிகளில் தோற்றாலும், இந்திய அணியை சமாளிக்க புதிய திட்டத்துடன் வருவோம்." என தென்னாபிரிக்க அணித் தலைவர் டு பிளசி தெரிவித்தார்.

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் நடக்கிறது. தென்னாபிரிக்க அணி தனது முதல் இரண்டு லீக் போட்டியில் இங்கிலாந்து மற்றும் பங்களாதேஷுடன் வீழ்ந்தது. அடுத்து நாளை இந்தியாவை சந்திக்கவுள்ளது.

இதுகுறித்து தென்னாபிரிக்க அணித் தலைவர் டு பிளசி கூறியதாவது.

உலக கிண்ணத் தொடரில் முதல் இரு போட்டியில் தோற்றதால் எழுச்சி பெற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதிலிருந்து மீண்டு வர முயற்சிப்போம். பங்களாதேஷுதுக்கு எதிராக தோற்றது மிக ஏமாற்றமாக உள்ளது. இதில் அதிர்ஷ்டம் இல்லை என்று கூற மாட்டேன். இன்னும் சிறப்பாக விளையாடி இருக்க வேண்டும்.

அடுத்து வலிமையான இந்திய அணியை சந்திக்கவுள்ளோம். தற்போதைய நிலையில் ஒரு அணியாக மோசமாக உள்ளோம். எனினும் இந்திய அணியை சமாளிக்க புதிய திட்டத்துடன் வருவோம். இவ்வாறு டு பிளசி கூறினார்.


டு பிளசி

# பதவி பகட்டு எல்லாம் எங்களுக்குத் தூசு, யாரோ சொல்வதற்கெல்லாம் நான் ஓடமுடியாது-றிசாத்

## நான் ரணிலின் முகவரும் அல்லன்; மைத்திரியின் முகவரும் அல்லன்; நாங்கள் ஒன்றும் அவர்களின் அடியாட்களும் அல்லர்



(கொழும்பு)

**என் மீது சுமத்தப்பட்டுள்ள பத்து குற்றச்சாட்டுக்களும் எந்தவிதமான அடிப்படைகளும் அற்றவை. இது நியாயத்துக்கும் இனவாதத்துக்கும் இடையிலான போட்டி. இதில் எது வெல்கிறது என்று பார்ப்போம். இந்தப் பதவி பகட்டு எல்லாம் எங்களுக்கு தூசு. ஆனால் யாரோ சொல்கிறார்கள் என்று ஓட நாங்கள் தயாரில்லை என்று அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.**

அமைச்சர் றிசாத் பதியுதீன் பதவி விலக வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது. இது குறித்து கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

என்னிடம் ஜனாதிபதியோ அல்லது வேறு யாருமோ அழுத்தங்கள் வழங்கவில்லை. பதவி விலகும் அளவுக்கு நான் என்ன தவறு செய்தேன் என்று கேட்கிறேன். என்மீது வைக்கப்பட்டுள்ள பத்து குற்றச்சாட்டுக்கள் எந்த அடிப்படையும் அற்றவை. நம்பிக்கையில்லாப் பிரேரணை நியாயத்துக்கும் இனவாதத்துக்கும் இடையிலான போட்டி அதில் எது வெல்கிறது என்று பார்ப்போம்.

இன்று எனது சமூகத்தின் மீது அடக்குமுறை மேற்கொள்ளப்படும் போது என்மீது வன்மங்கள் பிரயோகிக்கப்படும் போது இந்தப் பதவி பட்டங்கள் எங்களுக்கு பெரிதல்ல. அதைத்தூக்கி வீசிவிட்டு செல்வதும் எங்களுக்கு பெரிதல்ல. ஆனால் யாரோ சொல்கிறார்கள் என்று நான் ஏன் பதவி விலக வேண்டும். நான் ரணிலின் முகவரும் அல்லன். மைத்திரியின் முகவரும் அல்லன். அவர்கள் வரச்சொல்லும் போது வரவும் போகச் சொல்லும்போது போகவும் நாங்கள் ஒன்றும் அவர்களின் அடியாட்கள் அல்லர்.

இன்று அடிமைப்பட்ட நிலையிலுள்ள மக்களின் குரலான எம்மை எந்தவொரு காரணமும் இல்லாமல் போகச்சொல்வது தார்மீகமானதா என்று நான் கேட்கிறேன் என அவர் கேள்வியெழுப்பியுள்ளார். (இ-7)

# மக்களின் கருத்துக்கு மதிப்பளித்து றிசாத் பதவி துறக்க வேண்டும்



## மகிந்த வலியுறுத்து

(கொழும்பு)

மக்களின் கருத்துக்கு மதிப்பளித்து அமைச்சர் றிசாத் பதியுதீன் உடன் பதவி துறக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்தினார்.

அத்துடன், அத்துரலிய ரத்ன தேரரால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துரலிய ரத்ன தேரரால் முன்னெடுக்கப்பட்டு வரும் உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பில் பிரதான எதிர்க்கட்சியின் நிலைப்பாடு என்னவென சிங்கள நாளிதழொன்று வினவிய போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த அரசாங்கத்தை அமைப்பதற்கு 2015ஆம் ஆண்டில் முன்னின்று செயற்பட்டவர்களில் மிக முக்கியமானவர் தான் அத்துரலிய ரத்ன தேரர்.

எனவே, இந்த அரசாங்கத்தின் தவறுகளை சுட்டிக்காட்டி நல்வழிப்படுத்துவதற்கான தார்மீக உரிமை அவருக்கு இருக்கின்றது. அதேபோல் தேரரின் கோரிக்கைகளுக்கு செவிமடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பும்கூட என்று மகிந்த சுட்டிக்காட்டினார். (இ-7)


## ஏல விற்பனை

எமது கல்லூரியில் வருடாந்த பொருட்களைக் கொடுப்பின் போது விற்பனைக்கு அனுமதிக்கப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 14.06.2019 (வெள்ளிக்கிழமை) காலை 11.00 மணிக்கு தென்பகுதி பழைய நூலக கட்டடத்தில் ஏலம் விடத் தீர்மானித்திருப்பதால் பொருட்களைப் பெற விரும்புவோர் குறித்த நேரத்தில் சமுகமளித்து ஏலத்தில் பங்குகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ஏல விற்பனைக்கு விடப்படும் பொருட்கள்

| பொருட்கள் |
|---|
| Speaker - 01 |
| Computer Chairs - 01 |
| Computer Table - 02 |
| Benches Dual - 20 |
| 4x4 Steel Cupboard - 02 |
| Dual Desk - 10 |
| Students Single Desk - 20 |
| White Board With Stand - (6x4)-01 |
| Metal Chairs - 50 |
| Balance Spring (100g) - 01 |
| Balance Spring (5n) - 01 |
| Multi Meter - 01 |
| Ammeter Milli - 03 |

(C-6588)

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி, அதிபர்.



## துயர் பகிர்கின்றோம்

அமரர் நவரத்தினம் குமாரசாமி



கிளிநொச்சி ஜெயந்தி நகர் மகாதேவ ஆச்சிரம உப செயலாளர் கு.வேணுகோபன் அவர்களின் அன்புத் தந்தை நவரத்தினம் குமாரசாமி அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு நாமும் துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து அன்னாரின் ஆத்மா தில்லை கூத்தன் திருவடியில் சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அறங்காவலர் - நிர்வாக உறுப்பினர்கள், மகாதேவ ஆச்சிரமம், கிளிநொச்சி.

(9084)


## இராசி பலன்

**மீனம்:** தொலை தூரத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், பெற்றோர் மீது பிரியம் கூடும்.

**மேடம்:** நீண்ட நாளைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிக்க முற்படுவீர்கள்.

**இடபம்:** அலங்காரப் பொருட்களை வாங்க முற்படுவீர்கள், பொதுவாழ்வில் புகழ் கூடும், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, குடும்பத்தில் குதூகலம் கூடும்.

**மிதுனம்:** குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கும்பம்:** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், பிறருக்கு உதவும் எண்ணம் தோன்றும்.

**கடகம்:** எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வீர்கள், தூரத்து உறவினர்களின் வருகையுண்டு, தொழில் நலன்கருதி பயணமொன்று இடம்பெறலாம்.

**இராசி பலன்**

கிரகநிலை: சூரி, சுக் | ராகு, புத, செவ், சந் | சனி, கேது | குரு

சந்திராஷ்டமம்: அனுசம், கேட்டை

04.06.2019

வைகாசி 21, செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு

பிரதமை பிற்பகல் 3.07 மணிவரை

மிருகசீரிடம் பின்னிரவு 12.35 மணிவரை

சுபநேரம் 10.22 - 11.52 மணிவரை

இராகுகாலம் 2.52 - 4.22 மணிவரை

வளவன்

**மகரம்:** உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், மறைமுக எதிர்ப்புகள் மாறும், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**சிம்மம்:** பொன்னான நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய பொருட்சேர்க்கையுண்டு, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

**தனுசு:** குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அரசு வழியில் அனுகூலமுண்டு, இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், வருமானம் திருப்தி தரும்.

**விருச்சிகம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும் நாள், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

**துலாம்:** பொருளாதார நிலை உயர என்ன வழியென்று யோசிப்பீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி:** அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், கனவு பலிதமுண்டு, தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபாடு காட்டுவீர்கள்.

# மதுவன் சனசமூக நிலையம் மீண்டும் திறக்கப்பட்டது

(சாவகச்சேரி)

விஷமிகளின் அநாகரிகமான செயற்பாடு காரணமாக 15 தினங்களாக மூடப்பட்டிருந்த சங்கத்தானை- மதுவன் சனசமூக நிலையம் மீண்டும் சனசமூக நிலைய நிர்வாகத்தினரால் மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டுள்ளதாக நிலையத் தலைவர் நா. சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

கடந்த பதினைந்து தினங்களுக்கு முன்னர் குறித்த சனசமூக நிலையத்தில் காணப்பட்ட பத்துக்கும் மேற்பட்ட புதினப் பத்திரிகைகளை விஷமிகள் சிலர் கிழித்தெறிந்தமையால் சனசமூக நிலைய நிர்வாகம் சனசமூக நிலையத்தை மூடியது குறிப்பிடத்தக்கது.

இதன் காரணமாக வாசகர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டமையால் மீண்டும் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது. (5-30)




# வடமாகாண மருந்தகங்களுக்கான சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல்கள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் இயங்கும் மருந்தகங்கள் யாவும் பின்வரும் நடைமுறைகளை கடுமையாகப் பின்பற்ற வேண்டுமென மாகாண சுகாதார அமைச்சினால் மருந்தக உரிமையாளர்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

- மருந்துகள் கொள்வனவு செய்யப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பற்றுச்சீட்டுகள் வழங்கப்பட வேண்டும்.
- மருந்தகத்தின் அனுமதிப் பத்திரம் மற்றும் மருந்தாளரின் பெயர் விபரமும் வாடிக்கையாளர் பார்க்கக்கூடிய வகையில் காட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- கடமையிலுள்ள மருந்தாளர் பெயர்க்குறி (Name Tag) அணிந்திருத்தல் வேண்டும்.
- தகைமை பெற்ற மருந்தாளர் கடமையில் இல்லாதபோது மருந்து விநியோகப் பகுதி மூடப்பட்டிருத்தல் வேண்டும் என வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார். பொதுமக்களின் நலன்கருதி மேற்படி கட்டுப்பாடுகள் மீள அறிவுறுத்தப்பட்டுள்ளன. (5)

# இனக்கலவரத்தை ஏற்படுத்த மகிந்த அணியினர் கங்கணம்

## மங்கள குற்றச்சாட்டு





(யாழ்ப்பாணம்)

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான தாமரைமொட்டு சின்னப் பொதுஎதிரணி 1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரத்தைப் போன்று பாரிய இனக்கலவரத்தை ஏற்படுத்த கங்கணம் கட்டுவதாக நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ்.மாநகரசபை மைதானத்தில் இடம்பெற்ற சமுர்த்திப் பயனாளிகளுக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் கடந்த வருடம் ஏற்பட்ட ஆட்சிக்கவிழ்ப்பு தோல்வியடைந்த நிலையில் இனங்களுக்கிடையில் மோதல்களை உருவாக்குவதன் மூலம் ஆட்சியைக் கைப்பற்றிவிடலாம் என்ற நம்பிக்கையுடன் அரசாங்கத்திற்கு எதிராகத் தாமரை மொட்டுச் சின்னத்தினர் பல வழிகளிலும் காய் நகர்த்தி வருகின்றனர்.

இப்படியான சூழ்நிலையில் கடந்த அரசாங்கத்தால் பெறப்பட்ட கடன் சுமையைத் தாங்கிக் கொண்டு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் நாட்டு மக்களுக்காகப் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது.

கடந்த (2018) வருட இறுதியில் நாட்டில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தம் மற்றும் அரசியல் நெருக்கடிகள் எமது பொருளாதாரத்தில் தாக்கத்தைச் செலுத்தின.


அதுமட்டுமல்லாமல் இவ்வருடம் உயிர்த்த ஞாயிறு தினத்தில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவமும் எமது பொருளாதாரத்தைச் சற்று நிலைகுலைய வைத்தது.

ஆனாலும் எமது நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சிறப்பான அயலுறவுக் கொள்கையால் உலக நாடுகளிடமிருந்து கடன் அடிப்படையிலும் திருப்பிக் கொடுக்கும் கடன் அடிப்படையிலும் பாரிய நிதிகளைப் பெற்று எமது மக்களின் வளமான எதிர்காலத்திற்காகச் சேவையாற்றி வருகிறோம்.

எனவே எமது அரசாங்கத்தை தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஆதரிப்பதன் மூலம் பல வகையான நன்மைகள் கிடைக்கப்பெறுவதோடு அடக்கு முறையற்ற சமுதாயத்தை கட்டியெழுப்ப அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# பொருளாதார அபிவிருத்தி மூலமே சமூகம் அபிவிருத்தியடைய முடியும்

## ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவிப்பு






(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுற்றுலா பணியகத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் வடக்கின் உயிர்நாடியாக திகழும் சுற்றுலா விடுதி உரிமையாளர்களுக்கான சந்தைப்படுத்தல் உபாயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கும் கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். ரில்கோ விடுதியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஆளுநர் கருத்து தெரிவிக்கையில்,

சுயாதீனமாக இயங்கக் கூடிய ஒரே ஒரு மாகாணமாக வட மாகாணம் காணப்படுகின்றது. பொருளாதார ரீதியில் அதனை நாங்கள் அபிவிருத்தி அடையச் செய்வதன் ஊடாகவே எதிர்காலத்தில் எமது சமூகத்தினையும் அபிவிருத்தி அடையச் செய்ய முடியும் எனத் தெரிவித்தார்.

மேலும் வட மாகாணத்தின் உயிர் நாடியாகவும் இரத்த நாளங்களாகவும் முதலீடு செய்யும் ஹோட்டல் நிர்வாகிகளை நான் வரவேற்பதோடு பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இலங்கை ஒரு சிறப்பு வாய்ந்த சுற்றுலாத்தளமாக காணப்படுகின்றது. குறிப்பாக ஒவ்வொரு இரண்டு மணி நேர போக்குவரத்துக்கு பின்னர் புதுமைகளை உணரக் கூடியதாகவும் ஒரு உல்லாசப் பயணி குளிரில் இருந்து வெப்பத்திற்கும் வெப்பத்திலிருந்து குளிர்ப் பிரதேசத்திற்கும், கடல் வளம், இயற்கை வளம், காடுகள், மலைகள், ஏரிகள், இயற்கை உற்பத்தி நிலையங்கள் போன்றவற்றினை இரண்டு மணித்தியால இடைவெளிகளில் உணரக்கூடியதாக இருப்பது எமது நாட்டின் சிறப்பம்சமாகும் எனவும் குறிப்பிட்டார்.

எமது பிரதேசத்தில் சுற்றுலா துறையினை விருத்தி செய்து அதனூடாக தொழில் வாய்ப்பினை உருவாக்கி பல இளைஞர், யுவதிகளுக்கு எதிர்காலத்தில் தொழில்வாய்ப்பினை வழங்கக் கூடிய விதத்தில் சுற்றுலாத்துறை வழிகாட்டிகள் பலருக்கு சிறப்பு பயிற்சி அளிக்கும் வகையில் திட்டமிடப்படுகின்றது.

இந்த நிகழ்வில் வடமாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் க.தேவராஜா, பணிப்பாளர் ஜெயராஜா உள்ளிட்ட வடக்கின் சுற்றுலா விடுதி உரிமையாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். (5)

# வீதிச் சுற்றுவட்டத்தில் வாகனப்பெட்டி உடைந்ததில் பெருமளவு ஓடுகள் சேதம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரப்பகுதியில் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை வேளையில் ஓடுகளை ஏற்றி வந்த பாரிய ஹன்டர் ரக வாகனத்தின் பெட்டி ஒரு பக்கமாக பிளந்ததால் பெருமளவான ஓடுகள் வீதியில் விழுந்து சேதமாகியுள்ளன.

இதனால் சாவகச்சேரி சுற்றுவட்டத்தில் இருந்து பேருந்து நிலையம் வரை ஏ-9 வீதியின் ஒரு பக்க வீதி தடைப்பட்டுக் காணப்பட்டது. கொழும்பு பகுதியில் இருந்து யாழ்.நோக்கி வந்த வாகனம் சாவகச்சேரி சுற்றுவட்டத்தில் திருப்பும் போது ஏற்பட்ட அழுத்தம் காரணமாக வாகனப் பெட்டி பிளந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் மூன்று மணி நேரத்தின் பின்னர் வீதிகளில் சிதறிக் கிடந்த ஓட்டுத் துண்டுகள் அகற்றப்பட்டு போக்குவரத்து சீரானது. இதன்போது எவருக்கும் உயிராபத்துக்கள் எவையும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-30)

# நிர்வாகத்தெரிவு

(யாழ்ப்பாணம்)

வரணி வடக்கு சிமிழ் அம்மன் ஆலயத்தின் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் சைவ மகாசபையின் பொதுச் செயலாளர் ப.நந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிர்வாகத் தெரிவில் தலைவராக மா.பாஸ்கரன், செயலாளராக க.சுரேஸ்குமார், பொருளாளராக பொ.மதியழகன், கணக்காய்வாளராக க.ராஜதுரை, பூசகராக க.தியாகராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (5-114)

# சிங்கங்கள் சீறிப் பாய்ந்தால் ஒட்டகங்களுக்கு ஓடி ஒளிய வேண்டிய நிலையே ஏற்படும்!

## ரத்ன தேரரை சந்தித்த பின் அரசிற்கு கம்மன்பில எச்சரிக்கை



(கண்டி)

**சிங்கங்கள் சீறிப் பாய்ந்தால் ஒட்டகங்களுக்கு ஓடி ஒளிய வேண்டிய நிலையே ஏற்படும் என மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கடும் எச்சரிக்கை விடுத்தார். நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அத்துரலிய ரத்ன தேரரைச் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு எச்சரிக்கையை விடுத்தார்.**

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் 253 பேர் கொல்லப் பட்டனர். 500 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

எனினும், இஸ்லாமிய அடிப்படைவாதிகளை இந்த அரசாங்கம் பாதுகாத்து வருகின்றது. இதனால் இன்னும் எத்தனை உயிர்களைப் பலிகொடுக்க வேண்டி வருமோ தெரியவில்லை.


எனவே, அடிப்படைவாதிகளை பாதுகாக்கும் முயற்சியை அரசாங்கம் கைவிட வேண்டும்.

குறிப்பாக சிங்கங்கள் எழுச்சி கொண்டால் ஒட்டகங்களுக்கும், அவற்றை பாதுகாக்கும் குள்ளநரிகளுக்கும் ஓடி ஒளிவதற்கு இடம் தேட வேண்டிய நிலை ஏற்படும் என்ற எச்சரிக்கையை விடுக்க விரும்புகின்றோம் எனத் தெரிவித்தார். (இ-7)

## இனியும் பொறுமையாக இருக்க முடியாது

## நாட்டைப் பாதுகாக்க சிங்கள மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்!

### ஞானசார தேரர் ஆர்ப்பாட்டத்தில் அழைப்பு



(கண்டி)

கண்டியில் நேற்று பெருமளவு பிக்குமார் ஒன்றுகூடியமையால் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

நான்கு நாட்களாக உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அத்துரலிய ரத்ன தேரருக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது டயர்களை எரித்து பொது மக்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு வந்த ஞானசார தேரர், அசாத் சாலி, ஹிஸ் புல்லா மற்றும் அமைச்சர் றிசாத் பதியுதீனை பதவி விலக்கவில்லை என்றால் பாரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என எச்சரிக்கை விடுத்தார்.

காலக்கெடு நிறைவடையவுள்ள நிலையில் இனியும் பொறுமையாக இருக்க முடியாது.

நாட்டை பாதுகாக்க சிங்கள மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என தேரர் அழைப்பு விடுத்தார். (இ-7)


பழமை வாய்ந்த

ஆதி சக்தி வாய்ந்த பாலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (வரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும், (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

ரெங்கசாமி

கண்டி, அம்பத்தன்ன -077 939 5222

Viber:076 466 4153,

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்



# திருத்தம்

25.05.2019 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சியின் சுகாதார தொழிலாளி, வேலை வெளிக்களத்தொழிலாளி ஆகிய பதவிகளின் ஆட்சேர்ப்பு 2019 தொடர்பான விளம்பரத்தில்
சம்பள அளவுத்திட்டம் PL-1 -Rs.24,250- 250x10 - 270x10 - 300x10 - 330x12 - 36,410 /=
என்பதற்கு பதிலாக,
சம்பள அளவுத்திட்டம் PL-1 -Rs. 24,250- 10 x250– 10x270-10x300- 12x330 - 36,410 /=
என திருத்தியமைக்கப்படுகின்றது.

திரு.கா. சண்முகதாசன், செயலாளர். (C-6586) கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 3
கி.பா:23 ¾ செவ் 2 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L, Canada
எதிர்பார்ப்பு:A/L,உள்நாடு
தொ.இ: B/9725

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: மகம் 3
கி.பா: செவ் 4 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில் :B.Engineering, Fibre optic Telecommunication Technician Newzealand
எதிர்பார்ப்பு: பட்டதாரி,ஆங்கில தகமை,(உள்நாடு)
தொ.இ: B/9726

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ரோகிணி 4
கி.பா: 58
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:College, Canada
எதிர்பார்ப்பு: A/L,பட்டதாரி (உள்நாடு,வெளிநாடு)
தொ.இ: B/9727

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்:ரோகிணி 4
கி.பா: 58
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:O/L,கடை ஊழியர்
எதிர்பார்ப்பு: A/L,தொழில் புரிபவர் (உள்நாடு,வெளிநாடு)
தொ.இ: B/9728

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்:பூசம் 4
கி.பா: 10
உயரம்: 5"1"
தகைமை/தொழில் :BBA, MBA, AAT, வங்கிஉத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரசஉத்தியோகம் (உள்நாடு)
தொ.இ: G/9737

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்:ரேவதி 3
உயரம்: 5'2"
தகைமை/தொழில் :B.Sc, Charted Accounting, MBA Reading, Accountant
எதிர்பார்ப்பு: பட்டதாரி,வங்கி(உள்நாடு)
தொ.இ: G/9743

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: சுவாதி 4
கி.பா: 36 செவ் 1 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L,காசாளர்,
எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு
தொ.இ: G/9744

பிறப்பு: 1989கிறிஸ்தவம்
உயரம்: 153cm
தகைமை/தொழில்:கல்வியியற் கல்லூரி ,BA Following,ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரசதொழில்
தொ.இ: G/9745

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களை தடுத்து வைக்கக் கூடாது

## பிரதமர் மோடி முன்மொழிவு–ஒஸ்ரின் தகவல்

இந்தியச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களின் விடுதலை தொடர்பான கோரிக்கைகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் முன்வைத்துள்ளதாக இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இரண்டு நாடுகளிலும் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களைத் தடுத்து வைக்கக்கூடாதென்ற முன்மொழிவை இந்தியப் பிரதமர் முன்வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்பதற்காக கடந்த 30ஆம் திகதி டில்லி சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இரண்டு நாட்கள் டில்லியில் தங்கியிருந்தார். இதன்போது இந்தியப் பிரதமர் உட்பட பல முக்கியஸ்தர்களுடன் ஜனாதிபதி கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்தியப் பயணம் மூன்று காரணங்களுக்காக, வெற்றிகரமானதாக இருந்தது.

பிரதமர் மோடியுடனான சந்திப்பு சிநேகபூர்வமாகவும், ஆக்கபூர்வமானதாகவும் நடைபெற்றது.

இந்தப் பேச்சுக்களில், இந்தியப் பிரதமருடன், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், வெளிவிவகாரச் செயலாளர் விஜய் கோக்ஹலே, இலங்கைக்கான இந்திய தூதுவர் தரன்ஜித் சிங் சந்து, இந்திய வெளிவிவகார அமைச்சின், இந்திய பெருங்கடல் பிராந்தியத்துக்கான மேலதிக செயலாளர் தினேஸ் பட்நாயக் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

குழுநிலைப் பேச்சுக்களுக்குப் பின்னர், இரண்டு நாடுகளின் தலைவர்களும் தனித் தனியாக பேச்சுக்களிலும் ஈடுபட்டனர். இந்தப் பேச்சுக்களின் போது இந்தியச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களின் விடுதலை குறித்து ஜனாதிபதி பேசினார்.

அப்போது இரண்டு நாடுகளும் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களைத் தடுத்து வைக்கக்கூடாது என்ற முன்மொழிவை இந்தியப் பிரதமர் முன்வைத்தார். அதனை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற இலங்கை அவசர வைத்திய நிபுணர்கள் கல்லூரியின் அங்குரார்ப்பண நிகழ்வு



(கொழும்பு)

நோய் தடுப்பு மற்றும் சிகிச்சைகளுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். சிகிச்சை பிரிவுகளைப் பலப்படுத்துவதற்காக வருடாந்தம் வரவு- செலவு திட்டத்தின் மூலம் பாரிய நிதி ஒதுக்கப்பட்டு அத்துறை பலப்படுத்தப்பட்டபோதும் நோய் தடுப்பு மற்றும் சிகிச்சைகளுடன் தொடர்புடைய நிகழ்ச்சித்திட்டங்கள் போதுமானதாக இல்லை என ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் முற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இலங்கை அவசர மருத்துவ நிபுணர்கள் கல்லூரியின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவசர சிகிச்சைக்கான விசேட மருத்துவர்களின் ஒன்றியமொன்று உருவாகியிருப்பது மிகவும் முக்கியமானதும் காலத்திற்கேற்ற நடவடிக்கையுமாகும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

மருத்துவ மற்றும் தாதிச் சேவைகளிலுள்ள பெரும் எண்ணிக்கையானோர் வருடாந்தம் வெளிநாடுகளுக்கு சென்று விடுவதன் காரணமாக நாட்டின் மருத்துவர்கள் மற்றும் தாதியர்களின் எண்ணிக்கையானது தேசிய தேவையை பூர்த்தி செய்து கொள்வதற்கு போதுமானதாக இல்லை என்பதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி இந்தப் பிரச்சினை குறித்து அனைவரும் துரிதமாக கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார்.

இலங்கை அவசர மருத்துவ நிபுணர்கள் கல்லூரி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுகாதார அமைச்சராக இருந்த போது 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன் இந்த கல்லூரியின் மூலம் சுகாதார அமைச்சின் ஒருங்கிணைப்புடன் சிங்கப்பூர், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளின் வைத்தியசாலைகளுடன் இணைந்து தற்போது சுமார் 300 செயலமர்வுகள் நடத்தப்பட்டு மருத்துவர்கள் மற்றும் தாதியர்களுக்கு பல்வேறு வெளிநாட்டுப் பயிற்சிகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இச்சங்கத்தின் தலையீட்டில் 2016ஆம் ஆண்டு திடீர் விபத்துகள் அவசர சிகிச்சைக்கான தேசிய கொள்கை தயாரிக்கப்பட்டது. மேலும் சிகரெட், மதுபான சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததன் மூலம் அவசர சிகிச்சைப் பிரிவுகளுக்கு வரும் இருதய நோய்கள், திடீர் விபத்துக்கள் போன்றவற்றிற்கு காரணமாக அமையும் சிகரெட் மற்றும் போதைப்பொருட்களை தவிர்ப்பதற்கு பங்களிப்பு செய்துள்ளது.

அவசர சிகிச்சை விசேட வைத்தியர்களின் சேவையை பாராட்டி 11 பேருக்கு ஜனாதிபதி விருது வழங்கி வைத்ததுடன் இலங்கை அவசர மருத்துவ நிபுணர்கள் கல்லூரியின் புதிய இணையத் தளத்தையும் ஆரம்பித்து வைத்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட பிரதி நிதி ஹெனா சிங்கர், சுற்றாடல் போசணை சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளர் வசந்தா பெரேரா, கொழும்பு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் சந்திரிகா விஜேவர்தன, பேராசிரியர் காலோ பொன்சேகா, விசேட மருத்துவ நிபுணர் அனுருத்த பாதனிய, விசேட மருத்துவ நிபுணர் இந்திக லெனரோல், இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-7)

# கேள்வி அறிவித்தல்

## பருத்தித்துறை பிரதேச சபை, சபைநிதி

01. பருத்தித்துறை பிரதேச சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் தற்போது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.
02. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
03. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA)வீதி நிர்மாணத்திற்கு கீழ்க் குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு,பொது நிதி சுற்றறிக்கை, இல.04/2016(i)இற்குஅமைவாக இவ்விலை மனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black list)சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
04. தேவையான தகைமைகள்,கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule)கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ளகேள்விதாரர்கள் தவிசாளர், பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி (தொலைபேசி இ.ல - 021 226 3276, 021 226 2785) என்னும் முகவரியிலிருந்துமேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன் வேலைநாட்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 2.00 மணி வரை 04.06.2019-25.06.2019 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் பூரணப்படுத்தி தவிசாளர், பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி என்னும் முகவரியிலிருந்து 04.06.2019 - 25.06.2019 வரை காலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00ஐ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர்,பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி என்னும் முகவரிக்கு 26.06.2019ஆம் திகதிமாலை 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக இடதுபக்கமேல் மூலையில் வேலையின் பெயர் மற்றும் மூலப்பிரதி/ இணைப்பிரதி என்பவற்றைக் குறிப்பிட்டு தனித்தனி கடித உறைகளில் இட்டுச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கீழ்க்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து63 (அறுபத்து மூன்று) நாட்களுக்கு (28.08.2019வரை) செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானதுகீழேஅட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
10. கேள்வி தொடர்பான முன் கேள்விச் சபைக்கூட்டம் தலைமை அலுவலகம், பிரதேச சபை, பருத்தித்துறை என்னும் முகவரியில் 19.06.2019 அன்று காலை 10.30 மணிக்கு இடம்பெறும்.
11. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பாதுகாப்புப் பிணை தொகை | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/14/41(11)/2/7/CF(A)/2019/01 | பேச்சியம்மன் -வேதக் கோவில் இணைப்பு வீதி அமைப்பு | 0.435 | 02 மாதங்கள் | C9 & C8 வீதி | 4,400.00 | 25.09.2019 |
| 02 | NP/14/41(11)/2/7/CF(D)/2019/02 | இலகடி வீதி புனரமைப்பு | 1.108 | 02 மாதங்கள் | C9 & C8 வீதி | 11,100.00 | 25.09.2019 |
| 03 | NP/14/41(11)/2/7/CF(S)/2019/03 | குடாரப்பு வீதி அமைப்பு - மீதிவேலை | 2.340 | 02 மாதங்கள் | C8 & C7 வீதி | 23,500.00 | 25.09.2019 |
| 04 | NP/14/41(11)/2/7/CF(D)/2019/04 | சுண்டங்கி வீதி புனரமைப்பு | 0.664 | 02 மாதங்கள் | C9 & C8 வீதி | 6,700.00 | 25.09.2019 |
| 05 | NP/14/41(11)/2/7/CF(D)/2019/05 | சேவரம்பற்றை வீதி அமைப்பு | 1.568 | 02 மாதங்கள் | C9 & C8 வீதி | 16,000.00 | 25.09.2019 |
| 06 | NP/14/41(11)/2/7/CF(A)/2019/06 | தோட்ட வீதி (ஆழ்வா தனை வீதி) அமைப்பு | 0.440 | 02 மாதங்கள் | C9 & C8 வீதி | 4,500.00 | 25.09.2019 |
| 07 | NP/14/41(11)/2/7/CF(D)/2019/07 | வீட்டம்மன் வீதி புனரமைப்பு | 1.139 | 02 மாதங்கள் | C9 & C8 வீதி | 11,400.00 | 25.09.2019 |

தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக் குழு,
பிரதேச சபை, பருத்தித்துறை.

(C-6587)

திரு.அ.சா.அரியகுமார்,

# ஞானசார தேரர் அடிப்படை மதவாதி ; அவரின் விடுதலையை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது

## மைத்திரியின் நடவடிக்கைக்கு யாழில் திஸ்ஸ எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியால் பொதுமன்னிப்பின் பேரில் விடுதலை செய்யப்பட்ட பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரின் விடுதலையை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாதென முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.




யாழ்.நல்லூரில் அமைந்துள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் வாழும் மூவின மக்களும் ஒற்றுமையாக ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு அவர்களின் மத சம்பிரதாயங்களின் அடிப்படையில் வாழ இடமளிக்க வேண்டும்.

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் கடந்த காலங்களில் இன முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்ட விதம் வேதனையை ஏற்படுத்து கிறது.

தேரரின் அத்தகைய செயற்பாடுகள் சிறை செல்ல வேண்டிய நிலைக்குக் காரணமாக அமைந்தது. சட்டம் யாவருக்கும் சமம். மதத்தின் பேரால் சட்டத்தையாரும் கையிலெடுக்க முடியாது. இந்நிலையில் ஆட்சி அதிகாரங்களைத் தக்க வைப்பதற்காக ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தேரரை விடுதலை செய்தாரா? என எண்ணத் தோன்றுவதாகத் தெரிவித்தார்.




இலங்கையில் உயித்த ஞாயிறு அன்று இடம்பெற்ற மிக மோசமான தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் ஞானசார தேரர் வெளியிட்ட கருத்தை நான் வரவேற்கிறேன்.

அதாவது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சூத்திரதாரியென எல்லோரும் சஹ்ரானைத் தேடிய போது அவருக்கு மேலான தலைவர் தொடர்பில் தேரரே கருத்து வெளியிட்டார்.

நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் ஆபத்து ஏற்படும் போது தேரர்களின் செயற்பாடுகள் முன்னுதாரணமாகவும், வழிமை வாய்ந்ததாகவும் அமைய வேண்டுமே தவிர நாட்டுக்குள் மற்றும் இனங்களுக்கிடையில் குழப்பத்தை ஏற்படுத்தக் கூடிய செயற்பாடுகளாக அமையக் கூடாது எனப் பேராசிரியர் திஸ்ஸ விதாரண மேலும் தெரிவித்தார். (இ-10)

# அத்துரலிய ரத்ன தேரருக்கு ஆதரவு தெரிவித்து வவுனியாவிலும் உணவு தவிர்ப்புப்போராட்டம்




(குருமன்காடு)

அத்துரலிய ரத்ன தேரரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற உணவு தவிர்ப்புப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் அமைச்சர் றிசாத் பதியுதீன் மற்றும் ஆளுநர்களான ஹிஸ்புல்லா, அசாத் சாலி ஆகியோரை பதவி விலகுமாறு கோரியும் வவுனியாவில் உணவு தவிர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா, ஏ-9 வீதியில் புதிய பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள குடியிருப்பு முத்துமாரி அம்மன் ஆலய முன்றலில் இவ் உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்றுக் காலை 9 மணிமுதல் இடம்பெற்றுள்ளது.

நாட்டில் இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதலில் அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்களே. இந்நிலையில் அத்துரலிய ரத்ன தேரரின் கோரிக்கை நியாயமானது. அதனால் அவரது கோரிக்கைக்கு ஆதரவாக நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் தமது போராட்டமும் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இதன்போது தெரிவித்தனர். (7-250)



## சிவசிதம்பரத்தின் 17 ஆவது நினைவு தினம்

உடுப்பிட்டிசிங்கம் என அனைத்துதரப்பினராலும் மிடுக்காக அழைக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமரர் மு.சிவசிதம்பரத்தின் 17 ஆவது நினைவு தினம் நாளை 5 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமைச் செயலகத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதே தினத்தன்று தான், 1998 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட உப தலைவர் அமரர் சி. நமசிவாயமும் படுகொலை செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (5)

## வவுனியாவில் வெடிபொருட்கள் மீட்பு

(குருமன்காடு)

வவுனியா - அட்டமஸ்கட பகுதியிலிருந்து வெடிபொருட்கள் சிலவற்றை மீட்டுள்ளதாக மாமடு பொலிஸார் நேற்றுக் காலை தெரிவித்துள்ளனர்.

வவுனியா - அட்டமஸ்கட பகுதியிலுள்ள குளத்திற்கு அருகிலுள்ள மரப் பொந்தில் பொதி ஒன்று காணப்படுவதாக நேற்று முன்தினம் மாலை கிடைத்த தகவலின் அடிப்படையில் சென்ற பொலிஸார் அங்கு காணப்பட்ட பொதியை சோதனை செய்த போது அப்பொதியில் பல வெடி பொருட்கள் காணப்பட்டுள்ளன.

இதன்போது எஸ்.எல்.ஆர். மகசீன் 2, எஸ்.எல்.எல். தோட்டாக்கள் 08, ரி. 56 ரக தோட்டாக்கள் 02 என்பன மீட்கப்பட்டுள்ளன.

அப்பகுதியில் எவ்வாறு குறித்த வெடிபொருட்கள் கொண்டு வந்து வைக்கப்பட்டுள்ளன, இதை யார் கொண்டு வந்து வைத்துள்ளார்கள் என்பது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (7-250)

## மினுவாங்கொடையில் வன்முறை; 7 பேர் மீண்டும் விளக்கமறியலில்

மினுவாங்கொடை வன்முறைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 7 பேர் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

அவர்கள் நேற்று மினுவாங்கொடை நீதவான் கேசர சமரதிவாகர முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சந்தேக நபர்கள் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (இ-7)

# சிரியாவில் கார்க்குண்டுத் தாக்குதல்! 4 குழந்தைகள் உட்பட 17பேர் உயிரிழப்பு

(டமாஸ்கஸ்)

சிரியாவின் சந்தை மற்றும் மசூதி அருகில் நடந்த கார்க்குண்டு தாக்குதலில் 4 குழந்தைகள் உட்பட 17 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர்.

சிரியாவில் ரம்ழான் பண்டிகைக்கான ஆயத்த ஏற்பாடுகளில் மக்கள் ஈடுபாடு காட்டிவரும் நிலையில் பிரபல வணிக வளாகங்கள் மற்றும் சந்தைப் பகுதிகள் களைகட்ட ஆரம்பமாகியுள்ளன.

இந்நிலையில், அலெப்போ மாகாணத்திலுள்ள அஜாஸ் நகரில் உள்ள ஒரு மசூதியில் நேற்று முன்தினம் மாலை நோன்பு திறந்துவிட்டு, தொழுகைக்கு பின்னர் நூற்றுக்கணக்கானவர்கள் வெளியே வந்து கொண்டிருந்தனர்.



அருகாமையில் உள்ள சந்தைப் பகுதியில் ஏராளமானவர்கள் புது ஆடைகள் மற்றும் வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்க குவிந்தனர்.

அப்போது அங்கு பயங்கர சத்தத்துடன் ஒரு கார் வெடித்து சிதறியது. இதில் சம்பவ இடத்திலேயே 4 குழந்தைகள் உட்பட 17 பேர் உடல்சிதறி உயிரிழந்தனர்.

படுகாயமடைந்த 20இற்கும் அதிக மானவர்கள் அருகாமையில் உள்ள வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (7)

# உலக சுற்றுச்சூழல் தினமும் யாழ்ப்பாணக் குடாநாடும்



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

ஜூன் 5 ஆம் திகதி சர்வதேச ரீதியாக உலக சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இத்தினத்தைக் கொண்டாடுவதன் முக்கிய நோக்கம் உலகளாவிய நிலையில் மக்களை சுற்றுச்சூழல் விடயங்களில் அறிவூட்டி வலுப்படுத்துவதற்கேயாகும். 1972 ஆம் ஆண்டிலிருந்து சுவீடன் நாட்டில் இடம்பெற்ற சுற்றுச்சூழல் மேம்பாட்டு மகாநாட்டில் இருந்து கடந்த 47 ஆண்டுகளாக உலக சுற்றுச்சூழல் விடயங்களை மேம்படுத்த சர்வதேச நிலையிலும் தேசிய நிலைகளிலும் உள்ளூர் நிலைகளிலும் பல்வேறு நடவடிக்கைகள் அரசுகளாலும் உள்ளூராட்சி நிறுவனங்களாலும் முன்னெடுக்கப்பட்டு வருவதைக் காணலாம்.

மேலும் 1992 ஆம் ஆண்டில் பிரேசிலின் ரியோடிஜெனிரோவில் நடைபெற்ற புவிச் சூழல் உச்சி மாநாட்டைத் தொடர்ந்து சர்வதேச ரீதியில் பல தொடர் மாநாடுகளும் சூழல் சார் செயற்பாட்டு ஒப்பந்தங்களும் சட்டங்களும் ஏற்படுத்தப்பட்டன. இவைகளுள் முக்கியமானவை ஜப்பான் கயோட்டோ ஒப்பந்தம் , பாரிஸ் ஒப் பந்தங்களாகும். சூழல்சார் சர்வதேச நிலைப் பாடுகளில் உலக நாடுகளுக்கிடையே ஒருமித்த கருத்துக்கள் இல்லாமல் இருந்தாலும் உலகச் சூழல் மேம்பாட்டு விடயங்களில் ஒவ்வொரு நாடும் தங்கள் தங்கள் நாட்டுக்குள் சூழலை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றன.

உலக காலநிலை தொடர்பான பாரிஸ் ஒப்பந்தத்தில் முதலில் ஐக்கிய அமெரிக்கா கைச்சாத்திட்ட பொழுதும் பின்னர் இவ் ஒப்பந்தம் அமெரிக்காவின் நலனுக்கு சாதகமற்றது என்று இவ் ஒப்பந்தத்தில் இருந்து விலகிவிட்டது. இதுபோல சர்வதேச சுற்றுச்சூழல் நியமங்கள் குறித்து அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கிடையே பெருமளவு வேறுபாடுகளும் முரண்பாடுகளும் காணப்படுகின்றன. சூழல் விடயங்களில் நாடுகளுக்கிடையே வேறுபாடுகள் இருப்பினும் உலகின் மாண், இடை, நுண் நிலைகளில் சூழலை மேம்படுத்த வேண்டுமென்ற நிலைப்பாடுகள் உலகின் எல்லாப் பகுதிகளிலும் பெரும்பான்மையான மக்களிடம் காணப்படுவது மிகவும் உற்சாகம் தருவதாக இருப்பதுடன் பல நாடுகளில் (Green Parties) பசுமைக் கட்சிகளின் வளர்ச்சியும் இச்செயற்பாடுகளை முன்னெடுக்க உதவியாகவுள்ளன.

இன்று புவி வெப்பமடைதல், பனிப் பாறைகள் உருகுதல், காற்று மாசடைதல், கடல் நீர் மட்டம் உயர்வடைதல், வறட்சி அதிகரித்தல், பாலைவனப் பகுதிகள் விரிவடைதல், காடு அழிப்பால் காட்டு பரப்புகள் குறைவடைந்து மண்ணரிப்பு, மண்வளம் இழப்பு, நிலவமுக்குகை ஏற்படுவது, நீரோட்டப் பகுதிகளில் மண்படிவுகளால் நீரோட்ட வழிகள் தடைப்பட்டு வெள்ளப்பெருக்கு ஏற்படுதல், நீர் உவர் தன்மையடைதல் போன்ற பல சுற்றுச்சூழல் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

மேலும் திண்மக் கழிவுகள், திரவக் கழிவுகள், சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கக்கூடிய கழிவுகள் சரியாக முகாமைப்படுத்தாததால் சுற்றுச்சூழல் பெரிதும் பாதிக்கப்படுகிறது. மேலும் அளவுக்கதிகமான கடல்வாழ் உயிரினங்களை , கட்டுப்பாடற்ற, ஒழுங்கற்ற முறைகளில் பிடிப்பதால் கடல்வாழ் உயிரினங்கள் பெரும் அழிவை எதிர்நோக்கியுள்ளன. இதேபோல பல்வேறு உயிரினங்கள், தாவரங்கள் இன்று அழிவு நிலைக்கு உட்பட்டுள்ளன. காட்டுப் பரப்புகள் குறைந்து செல்வதும் பொருத்தமான அபய பூமிகள், இயற்கைக் காட்டு ஒதுக்குப் பரப்புகள் பேணப்படாததால் அவ்வப் பிரதேசத்திற்குரிய தாவர உயிரினங்கள் அழிவுக்குட்பட்டு வருகின்றன.

இச்சூழ்நிலையில் உலகச் சுற்றுச்சூழல் நிலைகளை மாண், இடை, நுண்நிலைகளில் மேம்படுத்த வேண்டும். இச்செயற்பாடுகள் மேலிருந்து செய்யவும் வேண்டும், கீழிருந்து மேல்நோக்கிச் செல்லவும் வேண்டும். சர்வதேச நிறுவனங்கள், தேசிய அரசுகள், உள்ளூராட்சி சபைகள், சிவில் சமூக அமைப்புக்கள், மக்கள் வெவ்வேறு மட்டங்களில் சூழல்சார் நல்ல கருத்துக்களை, செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

இக்கட்டுரையில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் சுற்றுச்சூழல் சார்பான பிரச்சினைகள் மேம்பாடு குறித்து சில விடயங்களை குறிப்பிட விரும்புகிறேன். யாழ்ப்பாணக் குடாநாடு சுண்ணாம்புக் கல்லால் ஆன அடையல் பாறையால் ஆக்கப்பட்டது. இப்பகுதியின் வாழ்வும் வளமும் தரைகீழ் நீரையும் தரை மேல் தேக்கப்படும் நீரையும் அடிப்படையாகக் கொண்டது. இன்று குடாநாட்டில் தரைகீழ் நீர் குறிப்பாக மக்கள் நெருக்கமாக வாழும் வலிகாமம் பகுதிகள், பெரிய யாழ்ப்பாணம் மற்றும் பல இடங்களில் மாசுற்று பருகுவதற்கு ஏற்றதாக இல்லை என்பது பல ஆய்வுகளில் இருந்து கிடைக்கும் உண்மையாகும். இந்நிலை ஏற்பட்டதற்கு முக்கிய காரணம் இப்பிரதேசத்தில் தரைகீழ் நீர் அகற்றும் திட்டம் செயற்படுத்தப்படாமையே (Under ground Sewerage Scheme). மேலும் மூடாத கிணறுகளில் தூசிகள், கழிவுகள் காற்றால் வந்து சேருவதாலும் மாசடைகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் 1000 சிறு குளங்கள், குட்டைகள் இருப்பதாக குறிப்பிடுகின்றன. சிறு குளங்களின் எண்ணிக்கை குறித்து புள்ளிவிபரங்கள் 700 முதல் 1000 என வேறுபடுகின்றன. பழைய புள்ளி விபரங்கள் கூடிய எண்ணிக்கையையும் அண்மைக்கால புள்ளிவிபரங்கள் குறைவான புள்ளிவிபரங்களையும் காட்டுகின்றன. பெரும் எண்ணிக்கையிலான குளங்கள் இன்று மூடப்பட்டு வேறு தேவைக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

இன்று காணப்படும் இச்சிறு குளங்களில் பெரும் எண்ணிக்கையானவைகள் சேறும் சதுப்புப் பகுதிகளாகவும் நீர்மாசுபட்டும் இவைகளால் சுற்றுச்சூழல் மிகவும் பாதிக்கப்பட்டும் அசுத்தமாகவும் பாதுகாப்பற்று இருப்பதையும் காணலாம். யாழ்ப்பாணக். குடாநாட்டில் இருக்கும் சிறு குளங்கள் யாவும் நன்னீரைக் கொண்டவை. இக்குளங்கள் முறையாக தூர்வாரப்பட்டு சுற்றுச்சூழல் மேம்படுத்தப்பட்டு இக்குளங்களில் மேமாதம் தொடக்கம் ஒக்டோபர் மாதம் வரை தண்ணீர் இருக்கக்கூடியதாக செய்தால் இதன்மூலம் பல்வேறு நன்மைகள் கிட்டும்.

இன்றுள்ள தொழில்நுட்ப வசதியால் ஒவ்வொரு குளங்களைச் சூழ்ந்து ஏற்று நீர்ப்பாசனத்தைப் பயன்படுத்தி வறட்சிக் காலத்தில் காய்கறிப் பயிர்ச்செய்கை செய்ய முடியும். யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மே மாதம் தொடக்கம் ஒக்டோபர் மாதம் வரையில் இன்று காய்கறி உற்பத்தி குறைவு. இப்பிரச்சினைக்கு இதன்மூலம் தீர்வு கிட்ட முடியும். சிறு குளங்கள் மேம்பாட்டினால் கிராம, உள்ளூர் காலநிலை மேம்படுவதுடன் தரைகீழ் நீரும் மேம்படக்கூடிய நிலை ஏற்படும். நகர்ப்புறங்களில் உள்ள குளங்கள் மேம்பாடு செய்யப்பட்டால் பொழுதுபோக்கு வசதி வாய்ப்புக்கள் ஏற்படுவதுடன் குளங்களைச் சூழவுள்ள பகுதிகள் மேம்பாடு அடையும்.

உதாரணமாக யாழ்ப்பாண நகரில் உள்ள டொன் பொஸ்கோ வித்தியாலயத்துக்கு அருகில் இருக்கும் குளம் அப்பிரதேசத்திற்கு எத்தகைய ரம்மியத்தைக் கொடுக்கின்றதென்பதை பாடசாலைப் பிள்ளைகளைக் கூட்டிச் செல்ல அங்கு வந்து நிற்கும் பெற்றோரைக் கேட்டால் தெரியும். அதற்குமாறான யாழ். நகரில் இருக்கும் ஆரியகுளம், வின்சர் தியேட்டர் முன்னுள்ள குளங்களின் நிலை என்ன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நீர் மேம்பாட்டிற்கு கடந்த காலங்களில் அரசாங்கத்தாலும் சர்வதேச சமூகத்தாலும் பல திட்டங்களுக்குப் பெருமளவு நிதி கொடுக்கப்பட்டிருந்தபோதும் திட்டங்களை முன்னெடுத்தவர்கள் சரியான முறையில் செயற்படுத்தாததால் இத்திட்டங்களால் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளைப் பெற முடியாது போயிற்று. வருங்காலத்தில் இக்குறைபாடுகள் நீக்கப்படவேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு கட்டுமானப் பணிக்குத் தேவையான மணல், மண், கல் பெறுவதில் மக்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். முன்பு சுண்ணாம்புக் கல் கட்ட தெருவேலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. ஆனால் இன்று தெற்கில் இருந்து கொண்டு வரப்படும் கருங்கல் பாவனை அதிகரித்ததால் சுண்ணாம்புக்கல் அகழ்வு ஓரளவு குறைந்துள்ளது. ஆனால் கட்டுமானப் பணிகளுக்கு தேவையான மண், மணல் ஆகியன சந்தையில் பெறமுடியாததால் பல்வேறு சட்டபூர்வமற்ற சூழல் கேடுவிளைவிக்கும் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. பள்ளக் காணிகளின் உயரத்தை அதிகரிக்கவும் பத்திரிப்பு பகுதியை நிறைவு செய்ய மண் தேவையாகும். இதனால் மண் எடுக்கக்கூடிய பிரதேசங்களை இனங்கண்டு மண் எடுக்கக்கூடிய வசதிகளை மக்களுக்கு செய்து கொடுக்கவேண்டும்.

இப்பிரச்சினையைத் தீர்க்க சில பல நோக்குத் திட்டங்களை முன்னெடுக்கலாம். உதாரணமாக யாழ்ப்பாண நகருக்கு குறிப்பாக பொம்மைவெளிப் பகுதிக்குத் தேவையான மண்ணைப் பெற அல்லைப்பிட்டியில் பெரிய குளம் அமைக்கலாம். அல்லைப்பிட்டியில் மண் எடுப்பதால் புதிய ஒரு குளம் உருவாகும். அங்கு எடுக்கும் மண் யாழ்ப்பாண நகர பள்ளப் பகுதிகளை உயர்த்தப் பயன்படும். மேலும் அல்லைப்பிட்டியில் தரவையில் நீரைச் சேகரிப்பதால் ஒரு பயனும் இல்லை. மாரியில் தரவையில் தேங்கும் நீர் பங்குனிக்குள் வற்றிவிடும். அங்கு மே மாதத்தில் இருந்து ஒக்டோபர் வரையும் குளத்தில் நீர் இருந்தால் தான் கால்நடைகளுக்கும் ஏனைய தேவைகளுக்கும் பயனுடையதாக இருக்கும்.

வலிகாமத்தில் விவசாய மேம்பாட்டிற்கு கற்தரைகளில் மண்ணின் அளவை உயர்த்த கொட்டு மண் தேவை. மண் எடுக்க முடியாது விட்டால் கற்தரைகளை விவசாயச் செயற்பாட்டுக்குக் கொண்டுவர முடியாது. கற்தரைகளில் தரைநீர் நல்லதாக இருந்தும் மண்படிவு குறைவு. இதனால் வலிகாமம் பகுதியில் உயரமான கனத்த மண்படிவுகள் சிலவற்றை இனங்கண்டு இப்பகுதி மண் மற்றைய பகுதி விவசாய நிலத்தை மேம்படுத்த உதவியாக இருக்கக்கூடிய வாய்ப்புக்களைக் கொடுக்க வேண்டும்.

கட்டுமானப் பணிகளுக்கு தேவையான மணலை ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் உள்ளூரில் அகழ வாய்ப்புக் கொடுக்கவேண்டும். சில மணல் குன்றுகள் முழுமையாக எடுக்கப்பட்டு நீர்த்தேக்கமாக மாற்றலாம். கண்டபடி மணலை அங்கும் இங்கும் ஒழுங்கற்று கழிவாக எடுப்பின் அப்பிரதேசங்கள் பாழ்நிலங்களாக மாறிவிடும். உள்ளூரில் கட்டுமானப் பணிகளுக்கு மணல் இல்லையென்றால் சவுதி அரேபியா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இருந்து சீமெந்து இறக்குமதி போல மணலை இறக்குமதி செய்ய வேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த காலம் இருந்த பனைவளம் யுத்தகாலத்தில் பெரிதும் அழிக்கப்பட்டது. ஆனால் யுத்தம் முடிந்த பின்னரும் இன்றும் பனை வளம் பெரிதும் அழிக்கப்படுவது மிகவும் கவலை தருவதாகவுள்ளது. பனைமரம் கூடுதலாக வளம் குறைந்த எல்லை (Marginal Land) நிலங்களிலேயே காணப்படுகின்றன. யாழ்ப்பாணக்குடாநாட்டிலும் வடக்கு – கிழக்கு மாகாணங்களில் குறிப்பாக வளம் குறைந்த நிலங்களில் பனை செய்கை பெரிய எடுப்பில் முன்னெடுக்க முடியும். பனை அபிவிருத்திச் சபை சில செயற்பாடுகளைச் செய்தாலும் அவர்களது பனைமர மீள் நடுகைத்திட்டம் வேகமாக முன்னெடுக்கப்படவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் முள்முருங்கை மக்களின் வாழ்வில் முன்னர் முக்கிய இடம்பெற்றிருந்தது. கன்னிக்கால், ஆடுகால், வேலிமரம், வெற்றிலை மற்றும் பூங்கொடிகள் படரும் தாவரங்களுக்கு உதவியாக இருந்தது. மேலும் ஆடு, மாடு வளர்ப்பதற்கு முக்கிய உணவாக இருந்தது. இன்று முள்முருங்கை யாழ்ப்பாணக் குடாநாட்டில் முற்றுமுழுதாக அழிந்துவிட்டது. இதற்குக் காரணமான நோயைக் கண்டு தீர்வு கண்டால் இம்மரத்தை மீண்டும் அதிகரித்த பயன்பாட்டுக்குக் கீழ் கொண்டு வரலாம். இது வறட்சியை தாங்கக்கூடிய மரமாக இருப்பதுடன் பசுமையானதாகவும் பொருளாதாரப் பயன்தரும் மரமாகவும் இருக்கின்றது.

அண்மைக்காலத்தில் கற்றாழைக்குப் (Aloevera) புது பெறுமானமும் மவுசும் கிட்டியுள்ளது. இதனால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல்வேறு பகுதிகளில் இயற்கையாக வளர்ந்திருந்த கற்றாழையை சமூக விரோத சக்திகள் பெருமளவு பிடுங்கி விற்று விட்டார்கள். இச்செயற்பாடுகள் முற்றாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவராவிட்டால் இப்பிரதேசத்திற்குரிய இயற்கைத் தாவரம் அழிந்துவிடும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் குறிப்பாக செம்மண் பிரதேசத்தில் விவசாய நிலங்கள் குடியிருப்பு மற்றும் வர்த்தகச் செயற்பாட்டு நிலங்களாக மாறுதல், இயற்கை வளம் வியயமானதுடன் சுற்றுச்சூழலுக்கும் பெரும் தீங்கு ஏற்படுகின்றது. இன்றைய நிலப்பயன்பாட்டுச் சட்டங்களின்படி நெற் செய்கை நிலங்களை மாற்றி நிலப்பயன்பாட்டுக்கு மாற்றமுடியாதல்லாமல் தோட்டக் காணிகளை குடியிருப்புக் காணிகளாக மாற்ற இடமுண்டு. இதனைத் தவிர்ப்பதற்கு மாகாண சபை இதுதொடர்பான சட்டங்களை இயற்றி வலிகாமம் செம்பாட்டு விவசாயப் பிரதேசங்களைக் காப்பாற்ற வேண்டும். இச்செம்பாட்டுப் பிரதேசங்கள் காப்பாற்றப்படாவிட்டால் குடாநாட்டுக்குத் தேவையான பசுமையான காய்கறிகளை (Fresh Vegetables) உள்ளூரில் பெறமுடியாது போகும் நிலை ஏற்படும்.

யாழ்ப்பாணக் கடல்நீர் ஏரி ஒரு பக்கம் கடல் நீர் மாசுபடுவதும் அளவுக்கு அதிகமான மீன்பிடித்தொழில் நடவடிக்கைகளால் இக்கடல் நீரேரியில் மீன்வளம் முற்றாகக் குறைந்தது மாத்திரமல்லாமல் பல மீனினங்கள் அழிவு நிலை எல்லைக்கு வந்துவிட்டன. 1960, 1970 களில் ஒருசில களம்கட்டிகள் இருந்த யாழ்ப்பாணக் கடல் நீர் ஏரியில் இன்று நூற்றுக் கணக்கில் களம்கட்டிக் கூடுகள் அமைத்து மீன்பிடித்தொழில் வருடம் முழுவதும் நடைபெறுகின்றது. இந்தியாவில் தமிழ்நாட்டில் மீனவர்கள் வருடத்திற்கு 45 நாட்கள் மீன் சினை தள்ளும் காலத்தில் மீன்பிடிக்கத் தடையுண்டு. இதேபோல் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் வருடத்தில் சில நாட்கள் மீன்பிடித் தடையை அமுல்படுத்தி அழியும் மீனினங்களின் பெருக்கத்தை ஊக்குவிக்க முடியம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் குறிப்பாக பெரிய யாழ்ப்பாணம் மற்றும் சாவகச்சேரி, சுன்னாகம், பருத்தித்துறை, நெல்லியடி போன்ற நகர்களில் திண்மக்கழிவு அகற்றுதல், முகாமைப்படுத்தல், பயன்படுத்தல் முக்கிய பிரச்சினையாக இருக்கின்றது. மேலும் குடாநாடு முழுவதும் அதிக பொலித்தீன் பாவனை, பிளாஸ்டிக் பொருட்கள் பாவனையும் இவைகளை சரியாக அப்புறப்படுத்தாமையும் மக்களின் ஒத்துழைப்பின்மையும் புதிய சுற்றுச்சூழல் பிரச்சினையைக் கொடுத்துள்ளது. வயல்வெளிகளில் பொலித்தீன்களும் வாய்க்கால்கள், குளங்கள் மற்றும் நீர் நிலைகளில் பொலித்தீன் அடைந்து நிலத்தையும் நீரையும் மாசுபடுத்துகின்றன. பொலித்தீன் உக்காத பொருட்களாக இருப்பதால் விவசாய நிலங்கள் பாதிப்படைகின்றன. கால்நடைகள்-- நாய்கள் பொலித்தீனை உண்பதால் நோய்வாய்ப்படுகின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருக்கும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் பலவற்றை இங்கு குறிப்பிட்டேன். இப்பிரச்சினைகளை மத்திய அரசு, மாகாணசபை, உள்ளூராட்சி மன்றங்கள், சிவில் சமூக அமைப்புக்கள், பாடசாலைகள், பொதுமக்கள் ஆகியோர் இணைந்து செயற்பட்டால் குறுகிய காலத்துக்குள் சூழல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் கண்டுவிடலாம்.

யாழ்ப்பாணக் குடாநாடு இலங்கையில் தனித்த, தனித்துவமான சிறப்பான புவியியல் பிரதேசம். சிறந்த இயற்கைச் சூழலைக்கொண்ட 27 நிலத்திணிவுகளால் உருவானது. காய்கறி, பழச்செய்கைக்கு ஏற்ற (Psuedeo Mediteran Climate) மத்திய தரைக்கடல் காலநிலையைப் போல உள்ளது. இதனைச் சூழவுள்ள கரையோரம் கல்லுக்கரை, மணல் கரை, சேற்றுக்கரை ஆகிய வேறுபாடான கடல் வளங்களையும் கடல்வாழ் உயிரினங்களையும் கொண்ட கடற்பிரதேசம். யாழ்ப்பாணத்து மக்கள் மிகவும் கடின உழைப்பாளிகள். இன்று குடாநாட்டில் 6 இலட்சம் பேரும் யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட 10 இலட்சம் பேர் உலகில் பலநாடுகளிலும் யாழ்ப்பாண உணர்வுடன் வாழ்கின்றார்கள். இத்தகைய வரலாற்றுப் பாரம்பரியமும் பெருமையும் கொண்ட பிரதேசத்தின் சூழலை பாதுகாப்பது எமது கடமை.

## மூசலி கல்லாறு ஹூனைஸ் பகுதியில்

# இராணுவத்தால் இடைநிறுத்தப்பட்ட வீட்டுத்திட்டம் அனைத்தும் அரச காணிகள்

## மன்னார் மாவட்ட அரச அதிபர் சுட்டிக்காட்டு

(மன்னார்)

முசலி பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்லாறு ஹூனைஸ் நகர் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் வீட்டுத்திட்டம் இராணுவம் மற்றும் வனவளத்திணைக்களம் ஆகியவற்றினால் இடை நிறுத்தப் பட்டுள்ள நிலையில், குறித்த வீடு கள் அமைக்கப்பட்டு வரும் காணி யானது அரச காணி என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோக ன்றாஸ் தெரிவித்தார்.

குறித்த வீட்டுத்திட்டம் தொடர் பிலும், வீட்டுத்திட்டம் இடை நிறு த்தப்பட்டமை தொடர்பாகவும் ஊட கங்களுக்கு கருத்து தெரிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று திங்கட்கிழமை காலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம் பெற் றது. மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் தலை மையில் இடம்பெற்ற குறித்த ஊடக சந்திப்பில் முசலி பிரதேசச் செய லாளர் கே.எஸ்.வசந்தகுமார், மன்னார் தேசிய வீடமைப்பு அபி விருத்தி அதிகாரசபையின் மாவ ட்ட முகாமையாளர் ஜே.நோயல் ஜெயச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது கருத்து தெரிவி த்த மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ. மோகன்றாஸ், வீடமைப்பு நிர்மா ணத்துறை அமைச்சர் சஜித் பிரேம தாச முசலி வீட்டுத்திட்டம் தொடர் பில் என்னுடன் உரையாடியுள்ளார்.



என்னுடைய அமைச்சின் அனு மதியை பெற்று குறித்த ஊடகவிய லாளர் சந்திப்பை மேற்கொள்ளு கின்றேன். முசலி பிரதேசச் செய லாளர் பிரிவில் ஹூனைஸ் நகர் பகு தியில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள வீட்டுத்திட்டத்தில் 87 வீடுகள் அமைப்பது தொடர்பாக நடவடிக் கைகள் இடம் பெற்று வருகின்றன.

குறித்த வீட்டுத்திட்டம் தற்காலி கமாக இடைநிறுத்தப்பட்டுள் ளது. 87 வீடுகள் அமைப்பதற்கான காணிகளில் 65 வீடுகளுக்கான, காணிகளுக்கான அனும திப் பத்திரமும் (போமீட்) வழங்கப் பட்டுள்ளது.


மிகுதி 22 வீடுகளுக்கான அனுமதிப்பத்திரமும் இருக்கின் றது. குறித்த காணிகள் அனைத் தும் அரசுக்குச் சொந்தமானது. வனவளத்திணைக்களத்திற்கு சொந்தமான எக்காணியும் அப் பகுதியில் இல்லை.

குறித்த அரச காணியிலே குறித்த வீடுகள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் அமைக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையிலே குறித்த வீட்டுத்திட்டம் இராணுவத்தால் இடை நிறுத்தப் பட்டுள்ளதாக அறிகின்றேன் எனத் தெரிவித்தார்.

இராணுவத்தினருடனும் இவ் விடயம் தொடர்பில் கலந்துரை யாடி உள்ளோம். மக்கள் இல்லாத வீடுகளில் மக்களை வந்து குடியமர இரண்டுவார காலஅவகாசம் வழங்கவுள்ளதாகவும், குறித்த காலத்தினுள் வந்து குடியமராது விட்டால் குறித்த வீடுகளை பறி முதல் செய்து வீடு இல்லாதவர் களுக்கு வழங்கவுள்ளதாக இரா ணுவம் தெரிவித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித் தார். (7-285)



## வவுனியாவில் இப்தார் நிகழ்வு



(குருமன்காடு)

வவுனியா பொலிஸாரின் ஏற்பாட்டில் பட்டானிச்சூர் பகுதி யில் அமைந்துள்ள முஹியியித் தீன் ஜும்மா பள்ளிவாசலில் நேற்று முன்தினம் மாலை இப் தார் நிகழ்வு இடம்பெற்றது.

மதத்தலைவர்களின் ஆசியு டன் வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மகிந்த வில்லு வாராட்சி தலைமையில் ஆரம்ப மான இவ் இப்தார் நிகழ்வில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.பி.மல்வலகே, வவுனியா நகர சபை உப நகரபிதா சு.குமார சாமி, நகரசபை உறுப்பினர்கள் மற்றும் வவுனியா வர்த்தக சங்க செயலாளர் ஆ.அம்பிகைபா லன், வர்த்தகர்கள், கடற்படை யினர், பொலிஸார், பொதுமக் கள் எனப் பலரும் கலந்து கொண் டனர். (7-250)

## சமுர்த்தி நிவாரண உரித்துப் பழவம் வழங்கும் ஆரம்ப நிகழ்வு கிளிநொச்சியில்







கிளிநொச்சியில் 13073 பேரு க்கு சமுர்த்தி நிவாரண உரித்துப் படிவம் வழங்கும் ஆரம்ப நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் கிளிநொ ச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கட ந்த 2018 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட 13073 சமுர்த்தி பய னாளிகளுக்கு சமுர்த்தி நிவா ரண உரித்துப் படிவம் வழங்கும் ஆரம்ப நிகழ்வில் முதல் கட்டமாக 4500 பேருக்கு வழங்கி வைக்கப்பட் டுள்ளது.

குறித்த நிகழ்வில் ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலு வூட்டல் அமைச்சர் தயா கமகே, கல்வி இராஜாங்க அமைச்சர் விஜ யகலா மகேஸ்வரன், பாராளும ன்ற உறுப்பினர் சி.சிறீதரன், கிளி நொச்சி மாவட்ட அரச அதிபர் சுந் தரம் அருமைநாயகம், கிளிநொச்சி படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ரவிப்பிரிய, கிளிநொச்சி சமுர்த்தி பணிப் பாளர் ஆரணி தவபாலன் மற்றும் பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், பிரதேச சபைகளின் உறுப்பினர் கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண் டனர். (7-312-315)

## 'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' குடிநீர்த்திட்டம் ஆரம்பித்து வைப்பு





முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைமுறைப்படுத் தப்படுகின்ற நாட்டுக்காக ஒன்றிணைவோம் வேலைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வுகள் நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளில் இடம்பெற்றன.

அந்தவகையில் மாங்குளம் மகா வித்தியாலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் தொகுதி திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்றது. மாங்குளம் மகா வித்தியாலய அதிபர் த.யோகானந்தராஜா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் ஜனாதிபதி செயலகத்தின் உதவிச் செயலா ளர் லலித் பண்டார, முல்லைத்தீவு மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளரும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினருமான ச.சத்தியசுதர்சன், புதுக்குடியி ருப்பு பிரதேச சபை உறுப்பினர் முகுந்தகஜன், வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (7-28)

## பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் உறுதிப்பூசுதல் வழங்கும் நிகழ்வு

பொலிஸாரின் பலத்த பாதுகா ப்புக்கு மத்தியில் வவுனியா புதிய சின்னப்புதுக்குளம் பற்றிமாதா தேவாலயத்தில் உறுதிப்பூசுதல் வழங்கும் நிகழ்வு மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட் கலா நிதி இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை தலைமையில் இடம் பெற்றது.

நேற்று முன்தினம் காலை 8மணியளவில் இடம்பெற்ற உறு திப் பூசுதல் நிகழ்வில் ஆயரினால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட துடன் விசேட ஆராதனைகளும் இடம்பெற்றன.

இதன்போது பங்கை சேர்ந்த சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கு உறுதிப் பூசுதல் அருட்சாதனம் வழங்கி யமை குறிப்பிடத்தக்கது. (7-9)

## பாரதம்

# டில்லியில் ராகுல் காந்தி வீட்டின் முன் சென்னை காங்கிரஸார் உண்ணாவிரதம்




(சென்னை)

தலைவர் பதவியில் நீடிக்க வலியுறுத்தி டில்லியில் ராகுல் காந்தி வீடு முன்பு அமர்ந்து சென்னை காங்கிரஸார் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பாராளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி நாடு முழுவதும் படுதோல்வி அடைந்தது. 53 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது. இதில் தமிழ்நாட்டில் மட்டும் 9 தொகுதிகளை கைப்பற்றியது. வட மாநிலங்களில் எதிர்பார்த்த அளவு ஆதரவு கிடைக்கவில்லை.

இந்தநிலையில் தேர்தல் தோல்விக்கு பொறுப்பேற்று தலைவர் பதவியில் இருந்து விலக ராகுல் முடிவு செய்தார். ஆனால் ராகுலின் இந்த முடிவை கட்சி ஏற்கவில்லை.

அனைத்து மாநில காங்கிரஸாரும் ராகுலுக்கு ஆதரவாக தீர்மானம் போட்டு கட்சி தலைமைக்கு அனுப்பி வைத்தனர்.

இருப்பினும் ராகுல்காந்தி இதுவரை தனது முடிவை அறிவிக்கவில்லை.

காலை டில்லி துக்ளக் லேனில் அமைந்துள்ள ராகுல் காந்தி வீடு முன்பு திரண்டனர். ராகுல்காந்தி பதவி விலகக்கூடாது என்று வலியுறுத்தி திடீரென்று உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர். தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ். அழகிரி உண்ணாவிரதத்தை தொடங்கி வைத்தார்.

ஆனால் அவர்கள் அனைவரும் ராகுல் வீட்டின் எதிரில் வீதியோரமாக அமர்ந்து உண்ணாவிரதத்தை தொடர்ந்தனர்.

ராகுலின் பாட்டி இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது ஒருமுறை இதேபோல் காங்கிரஸ் படுதோல்வியை சந்தித்தது.

அப்போது இந்திரா காந்தியும் பதவியை ராஜினாமா செய்யப்போவதாக அறிவித்தார். அதை கேட்டதும் நாடுமுழுவதிலும் இருந்து 60 ஆயிரம் தொண்டர்கள் இந்திரா காந்தி வீடு முன்பு திரண்டு முடிவை மாற்றும் படி வற்புறுத்தினார்கள். தொண்டர்களின் எழுச்சியையும், உணர்வையும் மதித்து 2 நாட்களில் தனது முடிவை மாற்றிக் கொண்டார். (7)

# துவிச்சக்கர வண்டியில் சென்று பொறுப்பை ஏற்ற சுகாதார அமைச்சர்





(டில்லி)

மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தன் தனது வீட்டில் இருந்து நேற்று துவிச்சக்கர வண்டியில் வந்து அலுவலகப் பணிகளை ஆரம்பித்தார்.

பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை கடந்த 30ஆம் திகதி இரண்டாவது முறையாக பதவியேற்றது.

இந்த அமைச்சரவையில் சுகாதாரத்துறை மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சராக ஹர்ஷ் வர்தன் நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில், பதவியேற்ற பின்னர் முதல்முறையாக தனது பணிகளை ஆரம்பிக்க செல்வதற்கு தயாரான ஹர்ஷ் வர்தன், வீட்டில் தயாராக நின்றிருந்த காரை புறக்கணித்துவிட்டு துவிச்சக்கர வண்டியில் சென்று தன் பணிகளை ஆரம்பித்தார். (7)

# 'சேர் வேண்டாம் சகோதரர் என்றே அழையுங்கள்' கர்நாடக முதல்வருக்கு ராகுல் அன்புக்கட்டளை

(பெங்களூர்)

சேர் என அழைத்த கர்நாடக முதல்வர் குமாரசாமிக்கு காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, என்னை இப்படி அழைத்தால் போதும் என்று அன்பு கட்டளை யிட்டுள்ளார்.

கர்நாடக முதல்வர் குமாரசாமி அனைவரையும் பிரதர் (சகோதரர்) என்று அழைப்பது வழக்கம். அவர் அழைக்கும் இந்த வார்த்தை கர்நாடகாவில் பிரபலமாகவும் உள்ளது.



ஆனால் ராகுல்காந்தியை அவர் சேர் என்று அழைத்து வந்தார். குமாரசாமி சகோதரர் என்று எல்லோரையும் அழைப்பதை கேள்விப்பட்ட ராகுல்காந்தி தன்னையும் அதேபோல அழைக்க வேண்டும் என்று குமாரசாமிக்கு அன்பு கட்டளையிட்டுள்ளார்.

பாராளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வியை சந்தித்ததால் அதற்கு பொறுப்பேற்று தனது தலைவர் பதவியை இராஜினாமா செய்வதாக ராகுல் காந்தி அறிவித்தார். இதன்பிறகு ஒரு வாரமாக யாரையும் சந்திக்காமல் தனிமையில் இருந்தார்.

இந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை டில்லி சென்றிருந்த குமாரசாமி ராகுலை சந்தித்து பேசினார். சுமார் அரை மணி நேரம் அவர்கள் அரசியல் சூழ்நிலை குறித்து கலந்துரையாடினர்.

அப்போது குமாரசாமி ராகுலை பார்த்து சேர்... சேர்... என்று அழைத்தார். அதற்கு ராகுல்காந்தி நீங்கள் எல்லோரையுமே சகோதரர் என்று தான் அழைப்பீர்கள்.

என்னையும் அதேபோல சகோதரர் என்று கூப்பிடுங்கள். சேர் என சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார். அதன் பின்னர் குமாரசாமி அவரை சகோதரர் என்று அழைத்தார். (7)

# சிரியா... அப்பாவி...


## ரஷ்யா, சிர...

**(வோஷிங்டன்) — சிரியாவின் இட்ல... குண்டுமழை பொழிந்து... கொல்வதை நிறுத்து... சிரியா, ஈரான் அரசு... ஜனாதிபதி டொனால்... தியுள்ளார்.**

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்தின் ஆட்சிக்கு எதிராக போராடி வரும் பல்வேறு குழுவினரை இராணுவத்தினர் வேட்டையாடி வருகின்றனர்.

இருதரப்பினரிடையே நடைபெற்று வரும் சமரில் பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். உயிர் பயத்தில் சுமார் 3 லட்சம் மக்கள் அருகாமையில் உள்ள துருக்கி நாட்டின் எல்லைப்பகுதியில் அகதிகளாக தஞ்சம்

# ஆப்கானில்... 8 பொலிஸ் அ...



# வெளிநாடு

# …ாவில் குண்டு மழை பொழிந்து …விகளைக் கொல்வதை நிறுத்துங்கள்

## …சிரியா, ஈரான் அரசுகளிடம் அமெரிக்கா வலியுறுத்து

**…இட்லிப் மாகாணத்தில் …ழிந்து அப்பாவி மக்களை …த்துங்கள் என ரஷ்யா, …அரசுகளை அமெரிக்க …ால்ட் ட்ரம்ப் வலியுறுத்…**





அடைந்துள்ளனர்.

இதுதவிர, சிரியாவில் இருந்து அடித்து விரட்டப்பட்ட ஐ.எஸ். பயங்கரவாதிகளில் சிலர் சிரியா-ஈரான்-துருக்கி எல்லைப்பகுதிகளில் பதுங்கி இருந்துகொண்டு அவ்வப்போது சிரியா ராணுவத்தினர் மீது அதிரடியாகத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.


குறிப்பாக, சிரியாவின் இட்லிப் மாகாணத்தில் போராளிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையில் உச்சக்கட்ட மோதல் நடைபெற்று வருகிறது.

இப்பகுதியில் ஆதிக்கம் செலுத்தி வரும் அல்-கொய்தா அமைப்பின் ஆதரவுபெற்ற ஹயாத்-தாஹிர் அல்-ஷாம் குழுவினரை குறி வைத்து நடத்தப்படும் இந்த தாக்குதலில் ரஷ்யா நாட்டின் விமானப்படைகளும் இணைந்துள்ளன.

மேலும், ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்தின் ஆட்சிக்கு ஆதரவாக ஈரான் நாட்டு விமானப்படைகளும் இட்லிப் மாகாணத்தின் மீது தொடர்ந்து குண்டுகளை வீசி வருகின்றன. இந்த முத்தரப்பு தாக்குதலில் சிக்கி கடந்த ஒருவாரத்தில் மட்டும் அப்பாவி பொதுமக்களில் சுமார் ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், சிரியாவின் இட்லிப் மாகாணத்தில் குண்டு மழை பொழிந்து அப்பாவி மக்களை கொல்வதை நிறுத்துங்கள் என ரஷ்யா, சிரியா, ஈரான் அரசுகளை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார். (7)

# …கார்க்குண்டு வெடிப்பு …அதிகாரிகள் உயிரிழப்பு





(காபூல்)

ஆப்கானிஸ்தான் நாட்டின் கஸ்னி மாகாணத்தில் பயங்கரவாதிகளின் கார்க் குண்டு வெடிப்பில் 8 பொலிஸ் அதிகாரிகள் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டு மேற்கு பகுதியில் தலிபான் தீவிரவாதிகள் மற்றும் பல்வேறு சிறிய தீவிரவாத குழுக்களின் ஆதிக்கம் அண்மைக்காலமாக மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளது.

தீவிரவாதிகள் மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்குமாறு அந்நாட்டின் ராணுவம் மற்றும் பொலிஸாரைக் கொண்ட கூட்டுப்படைகளுக்கு ஜனாதிபதி அஷ்ரப் கானி உத்தரவிட்டுள்ளார்.

இந்த படைகளுக்கு உதவியாக அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையினரும் வான் வழியாக சென்று தீவிரவாதிகளை தாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், ஆப்கானிஸ்தான் நாட்டின் கஸ்னி மாகாணத்தில் நேற்று அதிகாலை தீவிரவாதிகளின் கார்க் குண்டு தாக்குதலில் 8 பொலிஸ் அதிகாரிகள் உயிரிழந்தனர்.

இராணுவத்துக்கு சொந்தமான காரை கடத்திச் சென்ற தீவிரவாதிகள் அதில் ஏராளமான வெடி குண்டுகளை நிரப்பி கஸ்னி நகரில் உள்ள பொலிஸ் தலைமையம் மீது மோத வைத்து இந்த தாக்குதலை நிகழ்த்தியதாக உள்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (7)

# காஷ்மீர் மக்களின் உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும்

## இஸ்லாமிய கூட்டுறவு கூட்டமைப்பு வலியுறுத்து



(மெக்கா)

ஜம்மு-காஷ்மீரில் வாழும் மக்களின் சட்ட பூர்வமான உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும் என மெக்காவில் நடந்த இஸ்லாமிய கூட்டுறவு கூட்டமைப்பின் உச்சி மாநாடு வலியுறுத்தியுள்ளது.

உலகம் முழுவதும் வாழும் இஸ்லாமியர்களின் நலனை பாதுகாக்க 1969ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இஸ்லாமிய கூட்டுறவு கூட்டமைப்பின் (Organisation of Islamic Cooperation (OIC) அமைப்பில் ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா, தென் அமெரிக்கா ஆகிய கண்டங்களை சேர்ந்த 57 முஸ்லிம் நாடுகள் இடம்பெற்றுள்ளன.

கடந்த 2008ஆம் ஆண்டு இந்நாடுகளில் வாழும் சுமார் 160 கோடி இஸ்லாமியர்களின் நலன்களை பாதுகாப்பதற்காகவும், சர்வதேச அமைதி மற்றும் ஒருமைப்பாட்டுக்காகவும் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது.

இந்நிலையில், இந்த இஸ்லாமிய நாடுகளின் கூட்டுறவு அமைப்பின் 14ஆவது உச்சி மாநாடு சவுதி அரேபியாவிலுள்ள மெக்கா நகரில் கடந்த மாதம் 31ஆம் திகதி ஆரம்பமானது. நேற்று முன்தினம் வரை நடைபெற்ற இந்த மாநாட்டில் தங்களுக்கு இடையிலான பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக இந்த அமைப்பில் இடம் பெற்றுள்ள நாடுகளின் தலைவர்கள் விவாதித்தனர்.

இந்த மாநாட்டின்போது 'ஐக்கிய நாடுகள் சபை முன்னர் நிறைவேற்றிய தீர்மானத்தின்படி ஜம்மு-காஷ்மீரில் வாழும் மக்களின் சட்டபூர்வமான உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும்" என வலியுறுத்தப்பட்டதாக பாகிஸ்தான் அரசின் வெளியுறவுத்துறை அமைச்சகம் நேற்று தெரிவித்துள்ளது.

மேலும், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் நடைபெறும் அரசியல் மற்றும் சமூக நிலவரங்களை கண்காணிக்க சவுதி அரேபியாவை சேர்ந்த யூசுப் அல்டோபே என்பவரை இஸ்லாமிய கூட்டுறவு கூட்டமைப்பு நியமித்துள்ளது.

காஷ்மீர் விவகாரத்தில் மூன்றாம் நபரின் சமரசத்தை ஒருநாளும் அனுமதிக்க மாட்டோம் என்ற நிலைப்பாட்டில் இந்தியா தொடர்ந்து உறுதியாக இருக்கும் நிலையில், இஸ்லாமிய கூட்டுறவு கூட்டமைப்பின் கருத்தும் சிறப்பு தூதர் நியமனமும் இந்திய மக்களால் சற்று அத்துமீறலாகவே பார்க்கப்படுகிறது. (7)

# இனவாதத்துடன் அரசியல் விளையாட்டு வேண்டாம்

## நவீன் எச்சரிக்கை



(கொழும்பு)

இனவாதத்துடன் விளையாடினால் அது முழுச் சமூகத்தையும் அழிக்கும். இனவாதத்தின் அழிவுகளை எமது நாடு இதற்கு முன்னரும் சந்தித்தது. அரசியல் பிரச்சினைகளுக்கு தேர்தல் காலத்திலேயே தீர்வுகாண வேண்டும். இன்னும் ஆறு மாதங்களில் அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வை மக்களே வழங்குவார்கள். எனவே தற்போதைய நிலைமையில் எஞ்சியுள்ள அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதும் நாட்டின் உறுதியைப்பேணுவதற்கும் இடமளிக்க வேண்டியது அவசியமாகும் என்று பெருந்தோட்டக்கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

"மதுரட குடிநீர்" வேலைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மதுரட பிரதேசத்தில் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தலைமையில் இடம்பெற்றது.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

குண்டுத்தாக்குதல்கள், பிரச்சினைகள், அரசியல் சேறு பூசல்களுக்காக அபிவிருத்தி வேலைத் திட்டங்களை ஒருபோதும் இடைநிறுத்தப்போவதில்லை. அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களை எவராலும் தடுத்து நிறுத்தவும் முடியாது. அரசியல் பிரச்சினைகளைக் கண்டு பயங்கொள்ளப் போவதுமில்லை. சகல மக்களுக்கும் சம அந்தஸ்தை வழங்குவதே எமது எதிர்பார்ப்பாகும்.

இனவாதம் மிகவும் பயங்கரமானது. முழுச் சமுதாயத்தையும் அழிக்கும் தன்மை இனவாதத்துக்கு உள்ளது. இனவாதத்துடன் விளையாடினால் அது முழு நாட்டையும் அழிக்கும்.

இதற்கு முன்னரும் இனவாத வன்முறைகள் இடம்பெற்றன. அதனால் பாரதூரமான அழிவுகள் ஏற்பட்டன. இனவாதத்தால் ஏற்படக்கூடிய அழிவுகளை நாம் இதற்கு முன்னரும் அனுபவித்துள்ளோம். இன்னும் ஆறு மாதங்களில் நாட்டின் புதிய ஜனாதிபதியை மக்கள் தெரிவு செய்வார்கள். அதற்கான ஆயத்தங்களும் இடம்பெற்று வருகின்றன.

எனவே தேர்தல் காலத்தில் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணலாம். வேட்பாளர் யார்? எந்தக்கட்சி வெற்றிபெறும்? யார் ஆட்சியை கைப்பற்றப் போகிறார்கள்? என்ற கேள்விகளுக்கு பதில் இன்னும் கிடைக்கவில்லை. இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின்போது இந்தக் கேள்விகளுக்கான பதிலை மக்கள் வழங்குவார்கள். இதன்போது அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொள்ள முடியும்.

குறித்த காலம் வரும்வரை எஞ்சியுள்ள அபிவிருத்திப்பணிகளை முன்னெடுக்கவும் நாட்டின் உறுதித்தன்மையை நிலைநாட்டுவதற்கும் இடமளிக்க வேண்டும். இதற்கு முன்னரும் 30 வருடகால யுத்த சூழ்நிலையை நமது மக்கள் சந்தித்துள்ளனர். அது நிறைவடைந்து 10 வருடங்களில் மீண்டும் பயங்கரவாதத் தாக்குதலை சந்தித்துள்ளோம். முஸ்லிம் மக்களே இந்தத் தாக்குதலை மேற்கொண்டார்கள் என அனைத்து முஸ்லிம் இன மக்கள் மீதும் குற்றம்சுமத்த முடியாது. இது முஸ்லிம் மக்களை கேடயமாக கொண்டு முன்னெடுக்கப்பட்டவை என்பது அனைவரும் அறிந்ததே.

என்னை மக்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்து 19 வருடங்கள் நிறைவடைகின்றன. எதிர்வரும் தேர்தல்களில் மக்கள் என்னை தோற்கடிப்பார்களாக இருந்தால் அதனால் எனக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படப் போவதில்லை. காரணம் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்த திருப்தி எனக்கு உள்ளது. அதேபோன்று ஊழல் செய்யவும் இல்லை. மக்கள் சேவை செய்யக்கூடியவர்களை எதிர்காலங்களில் தமது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்ய வேண்டும். எந்தப் பிரச்சினைகள் ஏற்பட்டாலும் மக்களின் எதிர்கால தலைவர்களை அவர்களே தேர்ந்தெடுக்க வேண்டும் என நவீன் மேலும் தெரிவித்தார். (இ-7)

# எக்காரணம் கொண்டும் றிசாத் இராஜினாமா செய்யமாட்டார்

## அப்துல்லா உறுதி



(திருகோணமலை)

அமைச்சர் றிசாத் பதியுதீன் எக் காரணங்களுக்காகவும் தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்ய மாட்டாரென பிரதியமைச்சர் அப்துல்லா மஃறூப் உறுதிபடத் தெரிவித்தார்.

திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் மீது வீண் பழி சுமத்துவதும் பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கும் அவர் மீது கொண்ட காழ்ப்புணர்ச்சியே காரணம். 22 இலட்சம் முஸ்லிம்களும் இந்த நாட்டில் பயங்கரவாதிகளோ ஐ.எஸ்.ஐ.எஸ்.இயக்கமோ இல்லை. இதனால் நாட்டை சீர்குலைக்க முற்படுவதும் எமக்கு மனவேதனையளிக்கிறது.

இன ஐக்கியத்தை செயற்பாட்டில் காட்ட வேண்டும். கட்சி பேதமற்ற முறையில் இன, நல்லிணக்கத்தை உருவாக்க வேண்டும் அதுவே நாட்டிலுள்ள சகல இனங்களுக்கும் ஒற்றுமைக்கான வழியாகும்.

சில ஊடகங்கள் காலை வேளையிலேயே இனவாதத்தை கக்குகின்றன. ஒரு முறை வாசிக்க வேண்டிய செய்தியை ஏழு முறை வாசித்துக் காட்டுகிறது.

இங்கு காணப்படும் ஏழு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இன, மத பேதமற்ற முறையில் எனது நிதிகளை ஒதுக்கி வருகிறேன். சிலர் முஸ்லிம் தலைமைகளை குறிப்பாக அமைச்சர் றிசாத் போன்றவர்களை பிழையாக சித்திரித்து சகோதர மொழி பேசுகின்ற மக்களை போலிப் பிரசாரங்கள் ஊடாக நம்ப வைக்கின்றனர்.

திருகோணமலை மாவட்டம் மூவின மக்களையும் உள்ளடக்கியுள்ளது. இன ஐக்கியம் இங்கிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும்.

வாங்குரோத்து அரசியல் நடத்தி முஸ்லிம்களின் மனதை புண்படுத்த நினைப்பதும் இன ஐக்கியத்தை சீர்குலைக்கிறது.

ஒவ்வொரு மதமும் மார்க்கமும் நல்ல விடயங்களையே போதிக்கின்றன. அதனை சிலர் தவற விட்டு ஒற்றுமையை சீர்குலைக்கின்றனர். இவ்வாறான இனவாத, மதவாத சிந்தனைகளைத் தகர்த்தெறிந்து ஒற்றுமைக்கான பயணத்தில் எம்மையும் ஈடுபடுத்திக் கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பூமியின் சொர்க்கம்

ஒருநாள் ஒரு பெரியவர் வந்தார். ஆழ்நிலை தியானம் எல்லாம் செய்பவர் அவர். ஒரு பெரிய மகானுடன் தொடர்புள்ளவர். அவருடன் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தேன். என்ன சேர் உலகம் முழுதும் எங்கே பார்த்தாலும் சண்டை சச்சரவாகவே இருக்கு. வருங்காலத்திலே மனிதன் நிம்மதியாகவே வாழ முடியாது போல இருக்கே! என்றேன்.

அதற்கு யார் காரணம் என்று நினைக்கின்றீர்கள் என்றார். மனிதன் மனது வைத்தால் இந்த பூமியையே சொர்க்கமா மாற்ற முடியும் சேர்! இது ஏதோ பேச்சுக்காக சொல்கின்ற வார்த்தை இல்லை, நிஜம் என்றார். ஆர்வமாக அவர் சொல்லுவதை காது கொடுத்து கேட்க ஆரம்பித்துவிட்டேன். அவர் சில விஞ்ஞான உண்மைகளைச் சொன்னார்.

ஒரு சோதனை நடந்தது. ஒரே மாதிரியான இரண்டு தோட்டம். அதில் ஒரு தோட்டத்திலே அந்தத் தோட்டக்காரர் அங்கேயிருந்த செடி கொடிகளை மிகவும் அன்பாகவும் கனிவாகவும் கவனித்துக் கொண்டாராம். இன்னொரு தோட்டத்தில் உள்ள செடி கொடிகளை மிகவும் வெறுப்பாகவும் எரிச்சலாகவும் கவனித்துக் கொண்டார். அன்பாகவும் கனிவாகவும் கவனித்துக் கொண்டு வந்த செடி, கொடிகள் விரைவாகவும் வலுவாகவும் வளருதாம். வெறுப்பாக கவனித்துக் கொண்டு வந்த தோட்டம் அந்த அளவுக்கு வளரவில்லையாம்! ஆச்சரியமாத்தான் இருக்கு!

இன்னொரு சோதனை, ஒரு தோட்டத்திலே இருந்த தோட்டக்காரருக்கு பெரிய கத்தரிக்கோலை இரண்டு கைகளாலும் பிடித்துக் கொண்டு தேவையில்லாத கிளைகளை வெட்டி ஒழுங்கு செய்வது மட்டும் தான் வேலை! இந்தத்தோட்டக்காரர் ஒருநாள் இன்னொரு தோட்டத்துக்குப் போனார் – அங்கே இருந்த தன்னுடைய நண்பரைப் பார்ப்பதற்காக! இவர் அங்கே போன உடனே அங்கேயிருந்த சில நுட்பமான செடிகள் இலைகளைச் சுருக்கிக் கொள்ள ஆரம்பித்ததாம். வெட்டுவதற்குத்தான் வாறார் என்பது போல.

இதில் இருந்து என்ன தெரிகிறது என்றால் மனிதனுடைய எண்ண அலைகள் இன்னொரு பொருளையும் பாதிக்கிறது என்பது தான். ஒரு தனி மனிதனுடைய எண்ணம் – சொல் – செயல் இந்தப் பிரபஞ்சத்தில் ஒரு பாதிப்பை ஏற்படுத்த முடியும் என்பது உண்மை. எல்லாரும் நல்ல விடயங்களை நினைத்தால் உலகத்தில் நல்லது பெருகும். கெட்டது குறையும். சரி! நல்ல எண்ணம் என்பது என்ன? இயற்கையின் விதிகளைப் புரிந்து கொண்டு அதை மீறாமல் அதோடு ஒத்துப்போகிற எண்ணம் தான் நல்ல எண்ணம்! நமது வாழ்க்கை ஒரு சங்கிலித்தொடர் போல உணர்வுபூர்வமாக இணைக்கப்பட்டிருக்கிறது.

ஒருத்தருடைய உடலுக்கோ – மனதுக்கோ ஒரு அதிர்ச்சியால் பாதிப்பு ஏற்படுகிறது என்றால், அது அவனுக்கு இரத்த சம்பந்தமுள்ள அல்லது கடமை சம்பந்தமுள்ள மற்றவர்களுடைய உடலிலும் மனசிலும் ஓரளவு பாதிப்பை ஏற்படுத்தும்.

இயற்கையின் இந்த விதிப்படி தான் எண்ண அலைகள் அடுத்தவர்களைப் பாதிக்கிறது. இப்போது உலகம் முழுவதும் அங்கங்கே குழப்பங்கள், அழிவுகள் அடிக்கடி நடக்கிறது.

இது எதனால் என்று நினைக்கிறீர்கள்? மனிதர்களுடைய ஒட்டுமொத்தமான எண்ண அலைகள் – பதற்றம் – வெளியே விடப்படுவதால் தான்! "இந்த அண்டவெளி ஒரு குறிப்பிட்ட அளவுக்குத் தான் கெட்ட எண்ணங்களை தாங்கிக்கொள்ள முடியும். அளவுக்கு மீறிப் போனால் நெருக்கடி– கலவரம்–சண்டை!" 'வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்பது வெறும் திண்ணைப் பேச்சுக்காக இல்லை! அது விஞ்ஞான பூர்வமான உண்மை! இப்படி இவ்வளவு விடயத்தையும் என்னைப் பார்க்க வந்த அந்தப் பெரியவர் விபரமாக எடுத்துச் சொன்னார். இருந்தாலும் எனக்கு அதை அப்படியே ஏற்றுக்கொள்வதற்கு கஷ்டமாகத்தான் இருந்தது. இன்னொன்றும் சொன்னார்.

இந்த விஞ்ஞான உண்மைகளையெல்லாம் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் குறைந்தது மூன்றாவது வகுப்பில் இருந்தாவது போதித்தால் வருங்காலத்தில் நல்ல விதமான எண்ண அலைகள் இந்தப் பிரபஞ்சத்திலே பரவும். அதற்குப் பிறகு இந்தப் பூமியே சொர்க்கமயமாகும் என்றார்.

இது சிந்திக்க வேண்டிய ஒரு விடயம்தான்.

உலக சமாதானத்துக்காக அணு ஆயுதங்களை குறைக்கிறோம் என்று ஒரு பக்கம் முடிவு பண்ணினாலும், குழந்தைகளை நல்லவிதமாக வளர்க்கனும் என்பது முக்கியமான விடயம். அதை யாரும் மறுக்க முடியாது!


இந்தப் பூமியை சொர்க்க மயமாக்கனும்னு கடவுளே ஒரு தடவை நினைத்தாராம். உடனே புறப்பட்டு பூமிக்கு வந்து சேர்ந்தார். மனிதனுக்குள்ள குறைகள் முழுவதையும் நிவர்த்தி செய்வோம் என்று ஆரம்பித்தார். முதலில் ஒரு மனிதனைப் பார்த்தார். அவன் அழுது கொண்டிருந்தான். "ஏனப்பா அழுகிறாய்" என்றார். "10 ரூபாவை தொலைத்துவிட்டேன். அதனால் தான் அழுகிறேன்" என்றான். "பரவாயில்லை! அதற்காக கவலைப்படாதே! நான் பத்து ரூபாய் தருகிறேன்! வைத்துக் கொள்" என்றார்.

அதை வாங்கினவுடனே இன்னும் பலமா அழ ஆரம்பித்தான்! "மறுபடியும் ஏனப்பா அழுகிறாய்" என்றார். "நான் தொலைத்த பத்து ரூபாயும் இருந்தா இப்ப என் கையில் 20 ரூபாயாக இருக்குமே!" என்று சொல்லிவிட்டு தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான்.

### உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு உண்மையாக உதவிய அரசியல்வாதிகள் யார்?

# ரத்ன தேரர் நியாயமான கோரிக்கைகளுடன் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்

## பேராயர் கர்தினால் மல்கம் ஆண்டகை ஆதரவு



(கண்டி)

கண்டியில் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள அத்துரலிய ரத்ன தேரரை, கத்தோலிக்க பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சந்தித்தார்.

தொடர்ந்து நான்காவது நாளான நேற்றும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட ரத்ன தேரரின் உடலில் நீர்த்தன்மை அற்றுப்போயுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் நேற்றுக் காலை கண்டி தலதா மாளிகைக்கு முன்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தேரரின் நலம் விசாரித்த பேராயர் கர்தினால் ஊடகங்களுக்குக் கருத்துவெளியிடுகையில்,

ரத்ன தேரர் நியாயமான கோரிக்கையுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளார். அவருக்கு உரிய தீர்வு கிடைக்க வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு உண்மையாக உதவிய அரசியல்வாதிகள் யார்? என இன்னமும் விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை.

அவர்கள் தொடர்பில் தீவிரமாக ஆராய வேண்டும். கொல்லப்பட்ட மக்களுக்காக தேரர் இவ்வாறு உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுப்பட்டுள்ளார். அவர் விடயங்கள் அறிந்தே ஆர்ப்பாட்டம் செய்கின்றார். அவரது கோரிக்கைகள் நியாயமானவையாகும்.

இது மக்களின் நாடு. அவர்களது பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டு மீண்டும் அவ்வாறான ஒன்று நடைபெறாத வகையில் பார்த்துக் கொள்ள வேண்டும் என பேராயர் கர்தினால் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ரத்ன தேரருக்கு ஆதரவாக ஹற்றனிலும் நேற்றுப் பேரணி













அரசுப் பதவி வகிக்கும் 3 இஸ்லாமியர்களை பதவி நீக்கக் கோரி கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு முன்பாக அத்துரலிய ரத்ன தேரர் ஆரம்பித்துள்ள உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் ஹற்றன் நீக்ரோதாராம விகாரையின் தலைமை விகாராதிபதி தலைமையில் நேற்றுக் காலை ஆதரவுப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

இந்தப் பேரணியில் ஹற்றன் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் மத வேறுபாடுகளின்றி பங்குபற்றியதுடன் மதச் சார்பற்று மதகுருமார்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது முற்பகல் 10 மணியளவில் ஹற்றன் நகரிலுள்ள நீக்ரோதாராம விகாரையிலிருந்து பேரணி ஆரம்பமாகி ஹற்றன் பேருந்து நிலையம் வரை சென்று பின்னர் விகாரையை நோக்கிப் பயணித்த மக்கள் ஹற்றன் மத்திய மணிக் கூட்டுக்கு அருகிலுள்ள புத்தரின் உருவச்சிலைக்கு மலர்கள் வைத்து உண்ணாவிரதத்தை மேற்கொள்ளும் அத்துரலிய ரத்ன தேரருக்கு ஆசிவேண்டி விசேட வழிபாட்டையும் மேற்கொண்டனர். அத்துடன், இப்பேரணிக்கு வலுச்சேர்க்கும் வகையில் ஹற்றன் நகரில் சிலர் தமது வியாபார நிலையங்களை மூடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிறந்தவுடன் தேசிய அடையாள அட்டை இலக்கம் வழங்க அரசாங்கம் தீர்மானம்

(மாத்தளை)

ஒருவர் பிறப்பின் போதே அவருக்கான தேசிய அடையாள அட்டை இலக்கத்தைப் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக உள்ளூராட்சி சபைகள், மாகாண சபைகள் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார். மாத்தளை நகரசபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பயங்கரவாதத் தாக்குதல்களின் பின்னர் இடம்பெற்றிருந்த சுற்றிவளைப்புக்களின் போது ஒரு தேசிய அடையாள அட்டை இலக்கத்திற்கு 10 இற்கும் அதிகமான பெயர்களில் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டிருந்தன.

இவை மிகவும் பாரதூரமானதும் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானதுமாகும்.

இவ்வாறு பலருக்கு அதிகமான தேசிய அடையாள அட்டைகள் உள்ளன.

இதற்கு கடந்த காலத்தில் இருந்த அனைத்து அரசாங்கங்களும் பொறுப்புக்கூற வேண்டும்.



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பிரகாரம் ஒருவர் பிறக்கும் போதே அவருக்கான தேசிய அடையாள அட்டை இலக்கத்தை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்த இலக்கம் பிறப்புச்சான்றிதழுடன் இணைக்கப்படும். இதற்கான வேலைத்திட்டத்தை விரைவில் ஆரம்பிக்கவுள்ளோம்.

புதிய தொழில்நுட்பத்தின் பிரகாரம் இந்த வேலைத்திட்டத்தின் மூலம் அனைவருக்கும் ஒரு தனித்துவமான தேசிய அடையாள அட்டை இலக்கத்தை பெற்றுக்கொடுக்க 40 பில்லியன்கள் வரைதான் செலவாகும்.

அந்தத் தொகையை ஒதுக்கித் தருமாறு பிரதமரிடம் கோரியுள்ளோம்.

செலவாகும் 40 பில்லியன் ரூபா தொகையை ஒரு வருடகாலத்திற்குள் மீண்டும் ஈட்டிக்கொள்ள முடியும் என அமைச்சர் வஜிர மேலும் தெரிவித்தார். (இ-7)

# 3 வயதில் தந்தையையும் ஆறு வயதில் தாயையும் இழந்து

# வறுமையின் கோரப்பிடியில் சிக்கித் தவித்து மீண்டெழுந்த எனக்கு

# மகிந்த ஆட்சியில் துரோகத்தனத்தை வெளிப்படுத்தினார்

## யாழில் மன ஆதங்கத்தை கொட்டித் தீர்த்தார் தயாகமகே

(யாழ்ப்பாணம்)

மூன்று வயதில் தந்தையை இழந்து 6 வயதில் தாயை இழந்து வறுமையின் கோரப்பிடியில் சிக்கித் தவித்து வளர்ந்து தற்போது 43 நிறுவனங்களுக்கு அதிபதியாகவும் 50 ஆயிரம் பேருக்கு தொழில் வழங்கும் என்னை மகிந்த தனது ஆட்சிக் காலத்தில் துரோகத்தனத்தால் அடிபணிய வைக்க முயன்றார் என தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சமூக வுலுவூட்டல் அமைச்சர் தயாகமகே தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ்.மாநகர சபை மைதானத்தில் இடம்பெற்ற சமுர்த்திப் பயனாளிகளுக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

2005 ஆம் ஆண்டு அப்போதைய எதிர்க்கட்சித் தலைவரான தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்னை அரசியலில் ஈடுபடுமாறு அழைத்தார். நான் அதை ஏற்கவில்லை. இருப்பினும் அம்பாறை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளராக என்னை நியமித்தார்.

தேர்தல் இடம்பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியுற்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அரசமைத்தது.

அக்கால கட்டத்தில் மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் பழிவாங்கல்களுக்கும் துரோகத்தனத்திற்கும் என் தொழிலைப் பலிக்கடா ஆக்கினார்கள்.

வாழ்க்கையில் எவ்வளவோ துன்பங்களைச் சந்தித்து சிறிய தந்தையின் அரவணைப்பில் வாழ்ந்து வளர்ந்த எனது சீனித் தொழிற்சாலையை ஒரு இரவில்



அரச உடைமையாக்கிப் பத்திரம் வெளியிட்டனர். அது மட்டுமல்லாமல் எனது சொந்தப் பெயரில் வாங்கிய வாகனங்களை அபகரித்தார்கள், அச்சுறுத்தினார்கள், அடிபணிய வைக்க நினைத்தார்கள். அதற்கு நான் இடம்கொடுக்கவில்லை.

அப்போதுதான் யோசித்தேன் மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கு எதிராகப் போராட வேண்டு என்று. மக்களை அச்சுறுத்தி அடிபணிய வைக்கும் சம்பவங்கள் இலங்கையின் பல பாகங்களிலும் இடம்பெற்றன.

இதற்கு எதிராக மக்கள் சக்தியை ஒன்றுசேர்த்தோம். வெற்றி பெற்றோம். அதன் பாரிய பங்கு தமிழ் பேசும் மக்களையே சாரும்.

இவ்வாறு அடக்குமுறைகளுக்கு எதிராக ஆட்சிபீடம் ஏறிய எமது அரசாங்கத்தில் குறித்த அமைச்சைப் பொறுப்பேற்ற குறுகிய காலத்தில் என்னால் ஆற்றக்கூடிய பங்களிப்பை சிறந்த முறையில் ஆற்றி வருகிறேன். கடந்த காலங்களில் இன, மத கட்சிப் பாகுபாட்டால் பீடிக்கப்பட்ட சமுர்த்தி நிவாரணத்தை அனைவருக்கும் கிடைக்கக் கூடிய வகையில் ஆறு இலட்சமாக அதிகரித்துள்ளோம்.

அமரர் ரணசிங்க பிரேமதாஸவால் ஜனசமய, ஜனசக்தி வேலைத் திட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட மக்கள் நலன் சார் திட்டங்களை சமுர்த்தி வேலைத் திட்டமாக கடந்த மகிந்த ஆட்சியில் மாற்றினார்கள்.

இன்று 2019 புதிதாகச் சிந்திப்போம் முன்னேறுவோம் என்ற தொனிப் பொருளில் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக குறித்த நிவாரணத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.


எனவே மக்களுக்காக நாம் கொண்டு வரும் செயற்றிட்டங்களை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தி எதிர்காலத்திலும் பல வகையான சலுகைகளைப் பெற சகல மக்களும் எம்மோடு கைகோர்க்க வேண்டுமென அமைச்சர் தயாகமகே மேலும் தெரிவித்தார். (இ-10)

## ஹிஸ்புல்லாவுக்கு ஆதரவாக குரல் கொடுத்த உபரத்ன தேரர்

(திருகோணமலை)

தவறேதும் புரியாத ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவை பதவியிலிருந்து நீக்குவது அவசியமற்றதென மொரவெவ பிரதேச சபையின் தவிசாளர் பொல்ஹேன்கொட உபரத்ன தேரர் தெரிவிததார்.

திருகோணமலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது பொல்ஹேன்கொட உபரத்ன தேரர் மேற்



கண்டவாறு தெரிவித்தார்.

ஹிஸ்புல்லா மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு குறித்து ஆராய்ந்து பார்த்தபோது, அவர் மீது எந்தவொரு தவறுமில்லை என்பது உறுதியாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே அவரைப் பதவியிலிருந்து நீக்குவது முறையற்ற செயற்பாடாகுமெனவும் பொல்ஹேன்கொட உபரத்ன தேரர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை அமைச்சர் றிசாத் பதியுதீன், ஆளுநர்களான அசாத் சாலி, ஹிஸ்புல்லா ஆகியோரை உடனடியாக பதவி நீக்க வேண்டுமென கோரி தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் அத்துரலிய ரத்ன தேரர் ஈடுபட்டுள்ளார்.

அவருக்கு ஆதரவாக நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நேற்றுப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மட்டக்களப்பு ஊடாக அரோகரா கோஷங்கள்

### கதிர்காமம் நோக்கி பாதையாத்திரை




(ஏறாவூர்)

கதிர்காமக் கந்தனின் உற்சவம் ஆரம்பமாகவுள்ள நிலையில் கிழக்கு மாகாணத்திலிருந்து அதிகளவான பக்தர்கள் கதிர்காமத்திற்கு பாதை யாத்திரையை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டிருந்த இயல்பு நிலை வழமைக்கு திரும்பியுள்ள நிலையில் பாதை யாத்திரையில் பெருமளவான பக்தர்கள் பங்கேற்றுள்ளனர்.

வடகிழக்கின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து செல்லும் பாதை யாத்திரை குழுவினர் மட்டக்களப்பின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள ஆலயங்களுக்கு சென்று வழிபாடுகளை மேற்கொண்டதன் பின்னர் தங்களது பாதை யாத்திரைகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்கின்றனர்.

திருகோணமலை வெருகல் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் இருந்து கதிர்காமம் நோக்கி ஆரம்பமான பாதை யாத்திரை குழுவினர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பை அடைந்தனர்.

மட்டக்களப்பின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள ஆலயங்களில் வழிபாடுகளை மேற்கொண்ட அவர்கள், மட்டக்களப்பு ஆனைப்பந்தி சித்தி விநாயகர் ஆலயத்தில் தங்கியிருந்து நேற்றுத் தமது கதிர்காம யாத்திரையை தொடர்ந்ததாக அதன் ஏற்பாட்டாளர் துரைசாமி வேல்சாமி தெரிவித்தார். (இ-7)

## மும்முனை அரசியலால் நாடு சீரழியும் நிலை!

### கோடீஸ்வரன் கவலை



(நாவற்காடு)

மும்முனை அரசியல் போரால் நாடு சீரழியும் நிலை உருவாகியுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட நாவற்காடு பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'நாட்டிலுள்ள பெரும்பான்மை கட்சிகள் ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பதற்காக போட்டியிட்டுக் கொண்டிருக்கின்றன.

இது ஆரோக்கியமான செயற்பாடு அல்ல. இதனாலேயே இன்று நாட்டில் பாரிய அழிவுகள் ஏற்பட்டன. நாட்டின் புலனாய்வுத் துறையும் இராணுவமும் சிறப்பாகச் செயற்பட்டாலும் அரசியல் போட்டி காரணமாகவே அவர்களின் சேவை மழுங்கடிக்கப்பட்டது.

ஆகவே இதற்குத் தீர்வு காணப்பட வேண்டும். நாடு சுபீட்சமடைய வேண்டும். அவ்வாறு நடைபெற மூன்று தலைவர்களும் ஒன்றுசேர வேண்டும். அதன்மூலமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். அதற்காக மூவரும் விட்டுக்கொடுப்புடனும் சமதானத்துடனும் செயற்பட முன்வர வேண்டும்.

இந்த நாட்டிலே வாழ்கின்ற மக்களில் 51 வீதமானவர்கள் பெண்கள். ஆண்களைவிட பெண்களின் பங்கே நாட்டின் அபிவிருத்தியில் அதிகம். அந்த வகையில் பெண்களுக்கான அரச நிதி ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட வேண்டும்' எனவும் அவர் மேலும் வலியுறுத்தினார். (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

264

## சுதந்திரத்தின் பின் இலங்கை அரசின் அரசியல் நடவடிக்கைகளும் தமிழ்த் தேசியத்தின் எழுச்சியும் (கி.பி.1948-கி.பி.1983)

1947 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தல் முடிவுகளின் படி இலங்கைத் தமிழர் பிரதிநிதிகளாக 12 பேரும் இந்தியத் தமிழர் பிரதிநிதிகளாக 7 பேரும் பாராளுமன்றத்திற்கு சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டனர். இலங்கைத் தமிழர் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் கீழும் இந்தியத் தமிழர் இலங்கைத் தொழிலாளர் கட்சியின் கீழும் தேர்தலில் போட்டியிட்டிருந்தனர்.

தமிழர் சார்பாகத் தெரிவு செய்யப்பட்ட 20 பிரதிநிதிகளின் விபரங்களை இங்கு குறிப்பிடுவது அத்தியாவசியமாகின்றது. ஏனெனில் இவர்கள்தான் சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் முதன்முதலில் தெரிவு செய்யப்பட்டு பாராளுமன்றம் சென்றவர்களாவர்.

அத்துடன் இலங்கை 1948 இல் சுதந்திரமடைந்தபோது மேற்படி பாராளுமன்றப் பிரதிநிதிகள்தான் தொடர்ந்தும் பாராளுமன்றத்தில் இருந்தார்கள்.

இந்தியத் தமிழரின் பிரஜாவுரிமையும் வாக்குரிமையும் ஐக்கிய தேசியக் கட்சியினால் சட்டமூலம் பறிக்கப்பட்ட போது பாராளுமன்றத்தில் இருந்தவர்களும் இவர்கள்தான். அவ்வாறான மசோதாவுக்கு சாதகமாகப் பலரும் பாதகமாகச் சிலரும் வாக்களித்து அச்சட்டத்தை நிறைவேற்றத் துணைபோனவர்களும் இவர்கள்தான்.



காள்ரன் ஜே.எச். ஹேயிஸ்
Carlton J.H.Hayes

எனவே மேற்படி தமிழ்ப் பிரதிநிதிகளைப் பற்றிய விப்ரங்களைக் குறிப்பிடவேண்டியது மிக அவசியமாகின்றது. மேலதிகமாக இரண்டு தமிழ்ப் பிரதிநிதிகள் சில தொகுதிகளுக்கு நியமிக்கப்பட்டும் உள்ளனர். இந்த இருவரும் நியமன அடிப்படையில் மேலதிக அங்கத்துவம் என்ற அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டார்கள்.

மேற்படி இலங்கைத் தமிழர் பிரதிநிதித்துவம் 13 ஆகவும் இந்தியத் தமிழர் பிரதிநிதித்துவம் 7 ஆகவும் மொத்தம் 20 பிரதிநிதித்துவத்தையும் முஸ்லிம் பிரதிநிதிகள் குறிப்பாக கிழக்கு மாகாணத்திலும் கொழும்பிலுமாக மொத்தம் 6 பிரதிநிதித்துவத்தையும் பறங்கியர் ஒரு பிரதிநிதித்துவத்தையும் பெற்று மொத்தமாக 27 பிரதிநிதித்துவம் சிறுபான்மையினருக்குக் கிடைத்தது.

பெரும்பான்மைச் சிங்கள மக்களின் பிரதிநிதிகளாக 68 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். சிங்கள அமைச்சர் சபையின் நகல் திட்டத்தை ஏற்றுக்கொண்ட சோல்பரி ஆணைக்குழுவினர் அது சிறுபான்மை இனத்தவருக்குப் போதுமான பிரதிநிதித்துவத்தை வழங்குமென நம்பினார்கள். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இரண்டு கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட்டன.

முழுக்க முழுக்க எண்ணிக்கையின் அடிப்படையிலான பிரதிநிதித்துவம் அவற்றில் ஒன்றாக இருக்க ஒவ்வொரு ஆயிரம் சதுரமைல் பிரதேசத்திற்கும் ஒரு பிரதிநிதித்துவம் என்பது மற்றைய கொள்கையாக இருந்தது. இரண்டாவது கொள்கையை அவர்கள் பிரதேசங்களுக்கு முக்கியத்துவம் (Weightage to areas) வழங்குதல் என அழைத்தனர்.

இவை சனத்தொகை குறைவாகக் கொண்ட சிங்கள மாகாணங்களாக இருந்தமையால் அவர்களது பிரதேசங்களுக்கு முக்கியத்துவம் வழங்கும் கொள்கை நாடு முழுவதும் ஒரே சீராக அமுல்படுத்தப்பட்டபோது அது ஏற்கனவே மேலதிக பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருந்த சிங்களப் பெரும்பான்மை இனத்திற்கு மேலும் அதிக பிரதிநிதித்துவத்தை வழங்கியதைப் பின்னர் கண்டுகொள்ளவிருந்தனர்.

இலங்கையின் சனத்தொகையில் கால் பங்கிற்கும் அதிகமான இலங்கைத் தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் 101 பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்தில் ஆகக் குறைந்தது 25 பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டியதாக இருக்க அவர்களுக்குக் கிடைத்ததோ 20 பிரதிநிதித்துவம் மட்டுமேயாகும்.

ஆனால் இலங்கையின் சனத்தொகையில் ஏறத்தாழ 60 வீதமாக இருந்த சிங்களவருக்கு தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதித்துவத்தில் 75 வீதமும் பாராளுமன்றத்தின் மொத்தத் பிரதிநிதித்துவத்தில் 70 வீதமும் கிடைத்திருந்தது. பிரதிநிதித்துவம் கிடைக்காதவருக்கு போதுமான தொகை பிரதிநிதித்துவம் கிடைக்காதவர்களின் நலனை அனுசரித்தும் தேசாதிபதியினால் நியமிக்கப்பட்ட 6 அங்கத்தவர் சபையில் இருந்தனர். இவர்களில் 5 பேர் பிரித்தானியராகவும் ஒருவர் பறங்கியராகவும் இருந்தனர்.

(தொடரும்)

1947 தேர்தலில் பாராளுமன்றத்துக்கு தெரிவான தமிழ்ப் பிரதிநிதிகள் விபரம்

| பெயர் | தொகுதி | அரசியற்கட்சி |
|---|---|---|
| இலங்கைத் தமிழர் | | |
| பொன்னம்பலம் கணபதிப்பிள்ளை காங்கேசர் | யாழ்ப்பாணம் | தமிழ்க்காங்கிரஸ் |
| எஸ்.ஜே.வி. செல்வநாயகம் | காங்கேசன்துறை | தமிழ்க்காங்கிரஸ் |
| கனகரத்தினம் சுந்தையா | வட்டுக்கோட்டை | தமிழ்க்காங்கிரஸ் |
| குமாரசாமி வேலுப்பிள்ளை | சாவகச்சேரி | தமிழ்க்காங்கிரஸ் |
| தம்பிஜயா அல்பிரட் லியோ | ஊர்காவற்றுறை | தமிழ்க்காங்கிரஸ் |
| இராமலிங்கம் தாமோதரம்பிள்ளை | பருத்தித்துறை | தமிழ்க்காங்கிரஸ் |
| சிவபாலன் சிவசுப்பிரமணியம் | திருகோணமலை | தமிழ்க்காங்கிரஸ் |
| எதிர்மனசிங்கம் உடையார் | பரண்டிருப்பு | தமிழ்க்காங்கிரஸ் |
| சிற்றம்பலம் கதிரவேலு | மன்னார் | சுயேட்சை |
| நல்லையா வல்லிபுரம் | கல்குடா | தமிழ்க்காங்கிரஸ் |
| வன்னியசிங்கம் குமாரசாமி | கோப்பாய் | தமிழ்க்காங்கிரஸ் |
| சுந்தரலிங்கம் செல்லப்பா | வவுனியா | சுயேட்சை |
| Dr.E.M.V..நாகநாதன் | கொழும்பு | சுயேட்சை |
| இந்தியத் தமிழர் | | |
| குமாரவேலு கருப்பையா | கொட்டகலை | இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் |
| நடராசா கந்தப்பிள்ளை வேலுப்பிள்ளை | பண்டாரவளை | இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் |
| இராஜலிங்கம் காளிமுத்து | நாவலப்பிட்டி | இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் |
| இராமலிங்கம் தேசிகர் | அளுத்துவர | இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் |
| சுப்பையா சங்கரலிங்கம் முனியாண்டிப்பிள்ளை | பதுளை | இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் |
| சௌமியமூர்த்தி தொண்டமான் | நுவரெலியா | இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் |
| வேலுப்பிள்ளை கண்ணப்பன் | தலவாக்கலை | இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் |

# 9 பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம்

(கொழும்பு)

தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் அனுமதிக்கமைய, சேவை நிமித்தம் 9 பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது.

இதற்கமைய, அநுராதபுரம் பொலிஸ் தலைமையகத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஈ.எம்.எஸ். மஹாநாம கண்டி பொலிஸ் தலைமையகத்துக்கும் மன்னார் பொலிஸ் தலைமைய கத்தின் பிரதான பொலிஸ் பரி சோதகர் ஆர்.எம்.ஆர் ரத்நாயக்க அநுராதபுரம் பொலிஸ் தலை மையகத்துக்கும் இடமாற்றப்பட் டுள்ளனர்.


கிளிநொச்சி பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் எஸ். கிரிஷாந்தன் மன்னார் பொலிஸ் தலைமையகத்துக்கும் மனித வள பதில் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எம்.எம்.ஐ. ஜனக சிறுவர் மற் றும் பெண்கள் பிரிவின் பொறுப் பதிகாரியாக இடமாற்றப்பட்டனர்.

மனித வள முகாமையாளர் பிரிவிலிருந்து பிரதான பொலிஸ் பரிசோதகர் எஸ்.எஸ்.பீ. மடக்கு ம்பர மனித வள பதில் முகாமை யாளராகவும் கஹவத்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஓ. வீ. ஆர்.பீ. ஒலுகல, இரத்தினபுரி பொலிஸ் தலைமையகத்துக்கும் இடமாற்றப்பட்டனர்.

பொலிஸ் தலைமையக குற்ற விசாரணைப் பிரிவின் பிரதான பொலிஸ் பரிசோதகர் கே. ஏ.பி. பெரேரா பதில் பொறுப்பதிகா ரியாக கஹவத்தைக்கு இடமாற் றப்பட்டார்.

கொழும்பு வடக்கு பிரிவின் பிரதான பொலிஸ் பரிசோதகர் எம்.டீ.ஏ. ஜயந்த வெல்லம்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் பதில் பொறுப்பதிகாரியாகவும் மேல் மாகாண வடக்கு போக்குவரத்து பொலிஸ்பொறுப்பதிகாரி ஆர்.ஏ.எஸ். பெரேரா தெமட்டகொட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் இடமாற்றப்பட்டனர். (இ-7)

# ரத்ன தேரரின் போராட்டம் அர்த்தமற்றது என்கிறார் அமைச்சர் ராதாகிருஷ்ணன்



(கொழும்பு)

உண்ணாவிரதப் போராட்ட ங்களில் ஈடுபடுவதால் மாத்திரம் எதிர்பார்க்கும் அனைத்தையும் பெற்றுவிட முடியும் என்ற நிலைப் பாட்டை ஏற்றுக் கொள்ள முடி யாது. ரத்ன தேரரின் போராட்டம் அர்த்தமற்றது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவ ரும் அமைச்சருமான வே.ராதா கிருஷ்ணன் தெரிவித்தார்.

அத்துரலிய ரத்ன தேரரின் போராட்டம் குறித்து கருத்துத் தெரிவித்த அவர், அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமானால் அரசியல் ரீதி யான வழிமுறைகளையே பின்ப ற்ற வேண்டும். ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவையும் பிரத மர் ரணில் விக்கிரமசிங்கவை யும் நேரடியாகச் சென்று சந்தித்து தனது கோரிக்கையை முன்வை க்க முடியும். அதனை விடுத்து உண்ணாவிரதமிருந்தால் அனை வரும் அனைத்துப் பிரச்சினை களுக்கும் உண்ணாவிரதமிரு க்க ஆரம்பித்து விடுவார்கள்.

இதேவேளை ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவும் இதை வைத்து அரசியல் தான் செய்து கொண்டிருக்கின்றார். முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காகவே அவரும் இவ்வாறு செயற்பட்டுக் கொண்டி ருக்கின்றார்.

இவ்வாறு செயற்படுவதைத் தவிர்த்து ஜனாதிபதி ஏதேனு மொரு தீர்வினை வழங்க வேண் டும் என அவர் மேலும் தெரி வித்தார். (இ-7)

# 16 ஆயிரம் மருந்து வகைகளை பரிசோதிக்க விசேட ஆய்வு கூடம்

(கொழும்பு)

நாட்டில் பயன்படுத்தப்படும் 16 ஆயிரம் மருந்துகளுக்கு மிகவும் பாதுகாப்பு நடைமுறை முன்னெ டுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் அரச வைத்தியசாலைகளில் அஸ்பி ரின் மற்றும் லொசாட்டன் மரு ந்து வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டமை தயாரிப்பு மற்றும் கேள்வி விதி முறைகளின் அடிப் படையில் செயற்பட்டதனாலேயே என சுகாதார அமைச்சின் மரு ந்து விநியோகப் பிரிவுப் பணிப் பாளர் டாக்டர் ஏ.டி.சுதர்ஷன தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்படும் அனைத்து மருந்து வகைகளை யும் பரிசோதிப்பதற்கான இரசா யன கூடம் ஒன்றை அமைப்ப தற்கு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன நடவடிக்கை மேற் கொண்டதாகவும் அவர் தெரி வித்தார். (இ-7)

# இனந்தெரியாதோரால் ஹோட்டலுக்கு தீ வைப்பு



திருகோணமலையில் ஹோட்ட லொன்றுக்கு நேற்றுக் காலை தீ வைக்கப்பட்டது.

அலஸ்தோட்டம் பகுதியிலு ள்ள ஹோட்டலொன்றுக்கே இவ் வாறு தீ வைக்கப்பட்டதாக தெரிய வருகிறது.


குணரத்னம் என்பவருக்கு சொந்தமான ஹோட்டலுக்கே இனந்தெரியாதோரால் தீ வைக் கப்பட்டதாக ஆரம்ப கட்ட விசாரணை களிலிருந்து தெரியவருகிறது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1738

Search for people, places and things

### கந்தன்

நம்ம பொக்கட்ல பணம் நிறைய இருந்தாலும் எங்கையாவது சில்லறை விழும் சவுண்ட் கேட்டா நம்ம பொக்கட்டை தடவிப் பார்க்கத் தோணுது! சில்லறை புத்தி!



### விஷ்வா

பாத்ரும்ல தவறி விழுந்த சோப்பும் வாழ்க்கையில தவறவிட்ட வாய்ப்பும் ஒன்னுதான் திரும்ப கிடைப்பது ரொம்ப சிரமம்... ஒபீஸில சும்மா அருக்கும் போது யோசிச்சது



### பரத்

பைக்ல போய்கிட்டிருந்தோம் பெற்றோல் விலையை ஏத்தினாங்க... சரி பஸ்ல போகலாம்னு பார்த்தா டிக்கெட் விலையை ஏத்திட்டானுங்க... நடந்து போகலாம்னு இருக்கோம் ஏதும் குழியைத் தோண்டி போட்டுறாதீங்கடா




### கல்யாண்குமார்

வாழ்க்கையும் பாலும் ஒன்னுதான், கவனிக்காம விட்டுட்டா பொங்கிடும்



### சிந்துரன்



கணவன் செய்த தவறு

மனைவி சொல்லிக் காட் டுவது

### கௌசல்யன்

மலச்சிக்கலும் மனச்சிக்கலும் இல்லாம இருந்தா உடம்பு நல்லா இருக்கிறதா அர்த்தம்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அரசியல்வாதிகள் அளந்து பேச வேண்டும் வாயைப்பிளந்து நோயை ஏற்படுத்தக்கூடாது

## வடமத்திய ஆளுநர் அறிவுரை

(தம்புள்ள)


**அரசியல்வாதிகள் நாட்டு நலன் கருதி வாய்க்கு வந்ததையெல்லாம் உளறாமல் தமது வாய்களை கவனமாக வைத்துக்கொள்ள வேண்டும் என வடமத்திய மாகாண ஆளுநர் சரத் ஏக்கநாயக்க அறிவுரை வழங்கினார்.**

தம்புள்ள மாநகர சபையின் குப்பை மீள்சுழற்சி திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா, மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி ஆகிய இருவர் மீதும் குற்றம் சுமத்தப்படுகிறது.

எனினும் அவர்கள் இருவரும் தமது ஆளுநர் பதவியில் செயற்படும் விதத்தில் எந்தக் குறையையும் நான் காணவில்லை.

ஆளுநர் என்பவர் தான் சார்ந்த சமூகத்திற்கு மாத்திரமல்ல, முழு நாட்டுக்காகவும் குரல் கொடுக்க வேண்டும்.



சில சந்தர்ப்பங்களில் அரசியல்வாதிகள் மற்றும் பெரிய புத்திசாலிகள் எனக் கூறும் நபர்கள் வெளியிடும் கருத்துக்கள் பெரிய ஆச்சரியத்தையும், விசனத்தையும் ஏற்படுத்துகிறது.

எனினும் மக்கள் என்றும் இல்லாத அளவுக்கு இப்பொழுது இந்த முட்டாள் அரசியல்வாதிகளை விட அறிவாளிகளாக இருக்கின்றனர். இதனால், மக்கள் குழம்பிக் கொள்வதில்லை.

அரசியல்வாதிகள் இந்தச் சந்தர்ப்பத்தில் தமது வாய்களை கவனமாக வைத்துக்கொள்ள வேண்டும். வாயால் உண்ணும் உணவுகளால் சிலவேளை உடல் உபாதைகள் ஏற்படும்.

அதே வாயினால் வெளியிடும் வார்த்தைகளால் நாட்டிற்கும் சுகவீனம் ஏற்படும்.

இதனால், நாட்டு நலன் கருதி அரசியல்வாதிகள் தமது வாய்களைக் கவனமாக வைத்திருக்க வேண்டும். அப்படி இருந்தால் அது யாவருக்கும் நலமானதாக இருக்கும்" என்றும் அவர் அறிவுரை வழங்கினார். (இ-7)

# நானும் ரிசாத்தும் வேறுபட்ட அரசியல் கொள்கை கொண்டவர்கள்

## இம்ரான் விளக்கம்

(கிண்ணியா)

நானும் அமைச்சர் ரிசாத்தும் வேறுபட்ட அரசியல் கொள்கை கொண்டவர்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஃரூப் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை காப்பெற் வீதியாக புனரமைக்கப்படவுள்ள கிண்ணியா குறிஞ்சாக்கேணி வீதியின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நானும், அமைச்சர் ரிசாத்தும் வேறுபட்ட அரசியல் கொள்கை கொண்டவர்கள். அரசியல் ரீதியாக எமக்குள் பல கருத்து முரண்பாடுகள் காணப்படுகின்றன.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்களில் என்னையும் எனது கட்சியையும் தோற்கடிக்கவே திருகோணமலையில் அவர் பணியாற்றினார்.

அவர் ஆளும் கட்சி அமைச்சராக இருந்து இதுவரை அவரின் அமைச்சு மூலம் எனக்கு ஒரு ரூபா கூட அபிவிருத்திக்கு ஒதுக்கவில்லை. ஒரு வேலைவாய்ப்பு கூட எனது ஆதரவாளர்களுக்கு தரவில்லை.

ஆனால் இது அனைத்தும் எமக்குள் காணப்படும் அரசியல் ரீதியான கருத்து வேறுபாடுகளும் போட்டிகளுமே. இந்த கருத்து வேறுபாடுகளை நான் அரசியல் ரீதியாகவே எதிர்கொள்வேன்.

இப்போது எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை நான் அரசியலையும் தாண்டி எமது சமூக ரீதியான பிரச்சினையாகவே பார்க்கின்றேன்.

மற்றும் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையின் பின்னால் பின்கதவால் பிரதமர் பதவியைக் கைப்பற்றி மூக்குடைந்த எதிர்க்கட்சியினரின் பாரிய இனவாத நிகழ்ச்சி நிரலொன்று உள்ளது.

இந்த நிகழ்ச்சி நிரலின்படியே ரதன தேரர் அமைச்சர் ரிசாத் ஆளுநர்களான ஹிஸ்புல்லா, அசாத் சாலி ஆகியோருக்கு எதிராக உண்ணாவிரதம் மேற்கொண்டார். நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீரதிஸ்ஸ போன்றோர் அவர்களின் நிகழ்ச்சி நிரலையே நிறைவேற்றுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ரத்ன தேரருக்கு ஆதரவாக நீர்கொழும்பில் போராட்டம்

(நீர்கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரருக்கு ஆதரவு தெரிவித்து நீர்கொழும்பிலும் போராட்டமொன்று இடம்பெற்றது.

குறித்த போராட்டம் நீர்கொழும்பு மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இதில் தனியார் பேருந்து சங்கத்தினர், ஆட்டோ சாரதிகள் மற்றும் மக்கள் ஒன்றிணைந்து முன்னெடுத்தனர்.

இவர்கள் தங்களது சேவைகளைப் பகிஷ்கரித்து குறித்த போராட்டத்தை முன்னெடுத்தமையால் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது.

அமைச்சர் ரிசாத் பதியுதீன், ஆளுநர்களான அசாத் சாலி, ஹிஸ்புல்லா ஆகியோரை உடனடியாக பதவி நீக்க வேண்டுமென கூறி நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் நான்காவது நாளாகவும் நேற்றுப் போராட்டத்தை முன்னெடுத்தார்.


இந்நிலையில் ரத்ன தேரருக்கு ஆதரவு தெரிவித்து நாடளாவிய ரீதியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட நிலையில் நீர்கொழும்பிலும் போராட்டம் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 60 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 130 | 200 |
| தக்காளி | 150 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 160 | 80 |
| கோவா | 100 | 90 | 120 |
| கரட் | 120 | 140 | 200 |
| பூசணி | 80 | 70 | 100 |
| புடோல் | 100 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 160 | 140 | 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 110 | 120 |
| பாகற்காய் | 200 | 180 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 60 |
| பயற்றங்காய் | 150 | 140 | 80 |
| லீக்ஸ் | 140 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 100 | 100 |
| கறிமிளகாய் | 180 | 100 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 140 | 160 |
| போஞ்சி | 250 | 280 | 200 |
| கத்தரிதும்பிள்ளா | 80 | 40 | 80 |
| கீரை - 1பிடி | 40 | 25 | 20 |
| தேசிக்காய் | 350 | 450 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 180 | 160 |
| வெங்காயப்பூ | 240 | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 50 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 40 | 30 |
| ஈரப்பலா | 80 | 100 | 100 |

# அசாத் சாலியை நீக்கி விட்டு பீலிக்ஸ் பெரேராவை உடன் ஆளுநராக நியமிக்க திட்டம்





(கொழும்பு)

மேல் மாகாண ஆளுநராகவுள்ள அசாத் சாலிக்குப் பதிலாக, முன்னாள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவை நியமிக்கும் யோசனை ஒன்று ஜனாதிபதிக்கு முன்வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேல்மாகாண ஆளுநர் அசாத் சாலி மற்றும் கிழக்கு ஆளுநர் ஹிஸ்புல்லா, அமைச்சர் ரிசாத் பதியுதீன் ஆகியோரைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் எனக் கோரும் போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன.

இந்நிலையில், அசாத் சாலிக்குப் பதிலாக, மேல் மாகாண ஆளுநராக பீலிக்ஸ் பெரேராவை நியமிக்கும் யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டது.

எனினும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நெருக்கமான மூத்த அரசியல்வாதிகள் இந்த யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

மேல் மாகாண ஆளுநராக தமிழ் அல்லது முஸ்லிம்களே நியமிக்கப்படுவது வழக்கமாக இருந்துள்ளது என்றும், எனவே, அசாத் சாலியை நீக்கி விட்டு சிங்களவரான பீலிக்ஸ் பெரேராவை நியமிக்கக் கூடாது என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

1988 ஆம் ஆண்டிலிருந்து மேல் மாகாண ஆளுநர்களாக, சுவாமிநாதன், விக்னராஜா, பத்மநாதன் இராமநாதன், அலவி மௌலானா, கே.சி.லோகேஸ்வரன் ஆகியோர் பதவி வகித்து வந்த நிலையில், மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்காலத்தில் ஹேமகுமார நாணயக்காரவும் ஆளுநராக இருந்தார். அவரையடுத்தே, அசாத் சாலி மேல் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டார். (இ-7)

# அமைச்சர் ராஜிதவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை அடுத்த வாரம் சபாநாயகரிடம்

(கொழும்பு)

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவுக்கு எதிராக, கொண்டு வரத் தீர்மானித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையானது, அடுத்த வாரமளவில் சபாநாயகர் கரு ஜெயசூரியவிடம் கையளிக்கப்படவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தெரிவித்தார்.

பிரதான இரண்டு குற்றச்சாட்டுகளின் கீழ் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அமைச்சர் ராஜிதவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்குத் தேவையான தகவல்கள் சேகரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும் ரஞ்சித் சொய்சா தெரிவித்தார். (இ-7)

# சிறுவர் அரங்கம்

## சின்னு மரம்



சின்னு மரம் "உஷ் உஷ்" என்ற சத்தமிட்டபடியே இருக்கும் இந்த மரம் காட்டின் நடுவிலே இருக்கின்றது. அநேகமாக எல்லா விலங்கிற்கும் அணில் மரத்தை பற்றி தெரிந்து இருக்கும். அதன் பெயர் காரணம் தெரியாமல் போனாலும் அது எந்த இடத்தில் இருக்கிறது என எல்லோருக்கும் தெரியும். இந்த மரத்தை "சின்னு மரம்" "சின்னு மரம்" என்று தான் அழைப்பார்கள். பக்கத்துக் காட்டில் இருந்து ஏதாவது விலங்கு இந்தக் காட்டிற்கு வந்து, வழி கேட்டால் "சின்னு மரத்திற்கு முன்னால் போங்க" "சின்னு மரத்திற்கு இரண்டாம் மரம்" என மற்ற விலங்குகள் வழி காட்டும். அந்த அளவிற்கு சின்னு மரம் காட்டின் முக்கிய சின்னமாக கருதப்பட்டது.

அதுசரி அது என்ன அணில் மரம். அந்த கதை ரொம்ப சுவாரஸ்யமா இருக்குமா? முன்னொ[illegible]லத்தில் இதே மரத்தில் செம்பன், செம்பி என்று இரண்டு அணில் வாழ்ந்து வந்தது. அவர்களுக்கு சின்னு என்ற அழகான அணில் குழந்தை பிறந்தது. பிறந்த சில மாதங்களுக்கு இது மற்ற அணில்களைப் போல அமைதியாக நல்ல பிள்ளையாகத் தான் இருந்தது. ஓட ஆரம்பித்த பிறகு வால்தனம் வந்துவிட்டது. கொஞ்ச வால்தனம் எல்லாம் இல்லை, பயங்கர வால்தனம். எந்த மரத்திற்குச் சென்றாலும் கலாட்டா தான். கலாட்டா செய்தால் பரவாயில்லையே, அடாவடி செய்ய ஆரம்பித்துவிட்டது. குறும்பு செய்யும் குழந்தைகளை அனைவருக்கும் பிடிக்கும், ஆனால் அடாவடி செய்தால், அடம்பிடித்தால் யாருக்குத் தான் பிடிக்கும் சொல்லுங்க. மற்ற அணில்கள் விளையாடும் போது தான் மட்டும் தான் விளையாட்டில் வெற்றி பெற வேண்டும் என சொல்லும். வயதான காலத்திலும் செம்பனும் செம்பியும் சின்னுவிற்கு உணவினை தேடி எடுத்து வந்து தந்தனர். சின்னு ஒரு வேலையும் செய்யாமல் இருந்தது.

சின்னு என்ற பெயரை கேட்டாலே சக வயது அணில்கள் ஓடி ஒளிய ஆரம்பித்துவிட்டன. சின்னுவிற்கு நண்பர்கள் என்றே யாரும் இல்லை. இப்படி இருந்தால் எப்படி நண்பர்கள் கிடைப்பார்களாம்? பெரிய அணில்களுக்கு மரியாதையையே தராது சின்னு. இப்படி எல்லாம் செய்யக் கூடாது என சொல்லும் தன் அம்மா அப்பாவையும் சில சமயம் விட்டுவைக்காது சின்னு. இந்த கவலையில் செம்பன் செம்பி இருவரும் மனம் வருந்தி இறந்துவிட்டனர்.

சரி பெற்றோர் இறந்த துக்கத்திலாவது சின்னு சரியாகிவிடும் என நினைத்த அனைவருக்கும் ஏமாற்றம் தான். அப்பா அம்மா உயிருடன் இருந்த போது கொஞ்சமாவது அவர்களுக்கு பயந்து இருந்தது. இப்போது அட்டகாசம் தாங்க முடியவில்லை. எல்லா அணிலும் கூடி ஒரு முடிவினை எடுத்தது. "நாங்கள் அனைவரும் உனக்கு தினமும் வேண்டிய உணவினை தருகிறோம். இந்த மரத்தைவிட்டு வரவே வராதே" என்று வேண்டின. சின்னுவால் மற்ற அணில்களின் தின வாழ்கையே பாதிக்கப்படும் நிலையில் இருந்ததால் இப்படி ஒரு முடிவினை அனைவரும் எடுத்தனர்.

அதன்படி தினமும், பழம், உணவு அனைத்தும் மரம் தேடி வந்தது. எந்த வேலையும் செய்யாமல் தினசரி உணவு உண்பதே வேலையாக இருந்தது. காடே அதிசயிக்கும்படி ஒன்று நிகழ்ந்தது. சின்னுவின் வால் நாளுக்கு நாள் நீண்டு கொண்டே போனது. காட்டில் இது தான் பேச்சு. சிங்கம், புலி, யானை, மான், பாம்பு என எல்லா உயிரினமும் இந்த அதிசயத்தை காண வந்தது.

மரத்தின் உச்சியில் சின்னு இருந்தால் தரை வரை வால் நீண்டுவிட்டது. மரத்தில் உயரம் முப்பது அடி இருக்கும். பெருத்த வால் இருப்பதால் நகர்ந்து செல்வதே சிரமமாகிவிட்டது. வால் எங்காவது சிக்கிக் கொள்ளும். காட்டிலே ஒரு காட்சிப்பொருளாகிவிட்டது சின்னு, மற்ற காடுகளில் இருந்துகூட விலங்குகள் வர ஆரம்பித்துவிட்டன. முதலில் பெருமையாக இருந்தது, பிறகு அவர்களின் கேலிப் பேச்சு சின்னுவை என்னவோ செய்தது.

தன் தவறுகளை எல்லாம் எண்ணி வருத்தப்பட்டது. அப்பா அம்மா சொல்லை கேட்கவில்லையே, யாருக்கும் மரியாதை தரவில்லையே என நினைத்து அழுதது. சின்ன சின்ன வேலைகளை மெதுவாக செய்ய ஆரம்பித்தது. உணவு கொண்டு வருபவர்களிடம் மரியாதையாக நடக்க ஆரம்பித்தது. நல்ல அணிலாக மாறிவிட்டது. சில மாதங்களில் அந்த பெரிய வால் மறைந்து சின்னு மற்ற அணில்களை போன்று மாறிவிட்டது. பொறுப்பு வந்தது. எல்லோரிடமும் நல்ல பெயர் எடுத்தது. ஆனந்தமாக வாழ்ந்தது. ஆனாலும் அந்த மரத்தின் பெயர் அப்படியே நிலைத்துவிட்டது.

சின்ன அணில்களுக்கு சின்னுவின் கதை சொல்லி நல்லபடி நடக்க சொல்வது அந்த காட்டின் வழக்கத்தில் வந்துவிட்டது.

## மழலைத் தமிழில் நீ பேசு

சின்னப் பாப்பா நீ பேசு
சிரித்துச் சிரித்து நீ பேசு
கன்னித் தமிழில் நீ பேசு
கட்டிக் கரும்பே நீ பேசு

அன்பின் வடிவே நீ பேசு
அழகுத் தமிழில் நீ பேசு
வண்ண மயிலே நீ பேசு
வாழும் தமிழில் நீ பேசு

இன்பக் கனியே நீ பேசு
இதயம் மகிழ நீ பேசு
மழலை மொழியில் நீ பேசு
மனது குளிர நீ பேசு.



## அறிவியல் துணுக்குகள்

- பிளாஸ்ரிக் உடை வதற்கு 500 ஆண்டுகள் ஆகின்றன.
- உலகில் மிக கொடூரமான நில நடுக்கம் 1557இல் சீனாவில் நடந்தது. இதில் சுமார் 8 இலட்சம் மக்கள் இறந்தனர்.
- சூரியனிலிருந்து புறப்படும் ஒளி பூமியை அடைய 8 நிமிடம் 30 விநாடிகள் எடுக்கின்றது.
- சராசரியாக ஒரு மனிதன் ஐந்து முறை சிரிக்கின்றான்.

## விடுகதைகளும் விடைகளும்

- கையில்லாமல் நீந்தி கடல் கடப்பான். அவன் யார்?
  **கப்பல்**
- எண்ணத்தை விதைத்து வண்ணமாய் அறுவடை செய்வது. அது என்ன?
  **ஓவியம்**
- அவனுக்கு காவலுக்கு ஒரு வீடு, வாழ்வதற்கு ஒரு வீடு. அவன் யார்?
  **ஆமை**
- ஆரவாரம் இல்லாமல் அணிவகுப்பு, ஓயாது அவர்கள் உழைப்பு. யார் அவர்கள்?
  **எறும்புக் கூட்டம்**
- கோழிபோல் உருவம், குதிரைபோல் ஓட்டம். அது என்ன?
  **நெருப்புக் கோழி**
- நனைந்தாலும் நடுங்கமாட்டான். அவன் யார்?
  **குடை**

எதுக்கு ஓட்டைக் குடையை எடுத்துட்டு வந்திருக்கீங்க?
இல்லேன்னா மழை நின்னுடுச்சுன்னா எப்படித் தெரியும்?

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## முஸ்லிம் அரசியல்வாதிகளின் காலைக்கழுவி தீர்த்தமாக அருந்துக

2019 ஏப்ரல் 21ஆம் திகதி நாட்டில் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலை அடுத்து முஸ்லிம் மக்கள் மிகப்பெரும் இடைஞ்சல்களை எதிர்கொண்டனர்.

அதேபோன்று முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலரும் குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் எதிர் விளைவைச் சந்தித்தனர்.

அமைச்சர் ரிஷாத் பதியுதீன், ஆளுநர்களான ஹிஸ்புல்லா மற்றும் அசாத் சாலி ஆகியோர் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையுடன் அத்துரலிய ரத்தின தேரர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தார்.

இந்நிலையில் அமைச்சர் ரிஷாத் பதியுதீனைத் தனது அமைச்சுப் பதவியில் இருந்து விலகுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேட்டுக் கொண்டதான தகவல்களும் உண்டு.

இந்நிலையில் முஸ்லிம் அரசியல்வாதிகள் அரசியல் பேதம் கடந்து தமது இனத்தின் ஒற்றுமை என்ற ஒரே இலக்குடன் சிந்தித்தனர்.

மூத்த அரசியல் தலைவர் பௌஸியின் வீட்டில் சந்தித்த முஸ்லிம் அரசியல்வாதிகள் ஒற்றுமையாக ஒரு தீர்மானத்தை எடுத்தனர்.

அந்தத் தீர்மானம்; அமைச்சர்களாக, ஆளுநர்களாக, பிரதி அமைச்சர்களாக, இராஜாங்க அமைச்சர்களாக இருக்கின்ற அத்தனை முஸ்லிம் அரசியல்வாதிகளும் அந்தந்தப் பதவிகளில் இருந்து இராஜினாமாச் செய்வது என்பதாக இருந்தது.

அந்த முடிவு நேற்று அரங்கேறியபோது இலங்கை அரசு அதிர்ந்து போனது. பௌத்த தேரர்கள் திகைத்து நின்றனர்.

இலங்கை ஆட்சியில், அரசாளும் நிர்வாகக் கட்டமைப்பில் அமைச்சர்களாகவோ, ஆளுநர்களாகவோ ஏன் பிரதி, இராஜாங்க அமைச்சர்களாகவோ ஒரு முஸ்லிம் இல்லை என்று வரலாறு பேசுமளவுக்கு முஸ்லிம் அரசியல்வாதிகள் ஒற்றுமைப்பட்டு தம் இனத்தின் பலத்தை நிரூபித்துள்ளனர்.

இவ்வாறு முஸ்லிம் அரசியல்வாதிகள் எடுத்த அதிரடியான முடிவு இலங்கை அரசுக்கும் இலங்கையின் ஆட்சி நடைமுறைக்கும் பலத்த அடியாக விழுந்துள்ளது.

அத்துடன் பௌத்த தேரர்கள் அரசியலில் இறங்கி சிறுபான்மை இனத்தினர் அரசாட்சியில் பங்கேற்பதை வெட்டிச் சரிக்கின்றனர் என்ற கருத்துருவாக்கத்தையும் முஸ்லிம் அரசியல்வாதிகளின் ஒற்றுமை ஏற்படுத்தி விட்டது.

இதற்கு மேலாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு எங்களுக்குத் தேவையில்லை. உங்களின் ஆதரவில் நாங்கள் பதவி வகிக்கவும் விரும்பவில்லை. எங்கள் இனத்துக்காக நாங்கள் எங்கள் பதவிகளைத் தூக்கி எறிவோம் என்பதையும் முஸ்லிம் அரசியல்வாதிகள் நிரூபித்தும் காட்டியுள்ளனர்.

அவர்களின் ஒற்றுமையைக் கண்டுணர்ந்து, எங்கள் தமிழ் அரசியல்வாதிகளை நினைந்தபோது ........................ என்று சொல்லவே மனம் விரும்புகிறது.

(இந்த இடைவெளியில் நீங்கள் எந்தச் சொல்லை போட நினைக்கிறீர்களோ அந்தச் சொல்லைப் போட்டு உங்களை ஆற்றுப்படுத்திக் கொள்ளுங்கள்)

# ஆளுநர்கள் இராஜினாமா!

## பட்டாசு கொளுத்தி மகிழ்ச்சி ஆரவாரம்

(திருகோணமலை)

சர்ச்சைக்குரிய ஆளுநர்களான அசாத் சாலி மற்றும் ஹிஸ்புல்லாஹ் ஆகியோர் தமது இராஜினாமா கடிதங்களை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ள நிலையில் திருகோணமலை மக்கள் வெடி கொளுத்தி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மற்றும் ஆளுநர்களான அசாத் சாலி, ஹிஸ்புல்லாஹ் ஆகியோரைப் பதவியிலிருந்து நீக்குமாறு கோரி பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தார்.

இவருக்கு வலுச் சேர்க்கும் வகையில் நாட்டின் பல பகுதிகளிலும் உண்ணாவிரதப் போராட்டங்களும் கடையடைப்புப் போராட்டங்களும் பேரணிகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இந்நிலையில் திருகோணமலை மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகில் நேற்றுக் காலை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் ஆகியோர் இராஜினாமா கடிதங்களை ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

அவர்கள் நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்திற்கு சென்று தமது இராஜினாமா கடிதத்தை ஒப்படைத்துள்ள நிலையில், கடிதங்களை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டதாக ஜனாதிபதி செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் திருகோணமலை மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்கள் இந்தத் தகவலை அறிந்த நிலையில் வெடி கொளுத்தி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். (இ-7)

## உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட்ட ரத்ன தேரர் வைத்தியசாலையில் அனுமதி

உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட்ட அத்துரலிய ரதன தேரர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலையடுத்து அமைச்சர் ரிஷாத பதியுதீன் மற்றும் ஆளுநர்களான அசாத் சாலி, ஹிஸ்புல்லாஹ் ஆகியோர் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் எனக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

அந்தவகையில் குறித்த மூவரையும் பதவி விலக்குமாறு கோரிக்கை விடுத்து ரத்ன தேரர் கடந்த 4 நாட்களாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தார்.

இந்நிலையில் நேற்று ஆளுநர்களான அசாத் சாலி மற்றும் ஹிஸ்புல்லாஹ் ஆகியோரின் இராஜினாமா கடிதங்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்றுக் கொண்டதையடுத்து அவர் தனது உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டார்.

இந்நிலையில் போராட்டம் முடிவுக்கு வந்ததையடுத்து உடல்நலம் பாதிக்கப்பட்ட தேரர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (இ-7)

## அரிசிக்கான அதிகபட்ச சில்லறை விலை அதிவிசேட வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

பல்வேறு வகை அரிசிக்கான அதிகபட்ச சில்லறை விலையை நுகர்வோர் விவகார அதிகார சபை 2125/66 இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் அறிவித்தது.

அதன்படி வெள்ளை சம்பா (அவித்த அல்லது வேகவைத்த) அரிசியின் அதிகபட்ச விலை ஒரு கிலோவுக்கு 85 ரூபாயாகும்.

வெள்ளை நாடு மற்றும் சிவப்பு நாடு (அவித்த அல்லது வேகவைத்த) அரிசியின் அதிகபட்ச விலை ஒரு கிலோவுக்கு 74 ரூபாயாகும்.

கடந்த மே 31ஆம் திகதி முதல் இந்த உத்தரவு அமுலுக்கு வருகிறது.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் 2003ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க சட்டத்தின் (2015)ஆம் பிரிவின் கீழ் உள்ள அதிகாரத்தின்படி எந்தவொரு உற்பத்தியாளரோ விநியோகத்தரோ அல்லது வர்த்தகரோ மேலே கூறபட்ட அரிசிவகைகளை குறிப்பிட்ட அதிகபட்ச விலைக்கு மேல் விற்கக் கூடாது என்று வர்த்தமானி உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## நல்லூர் கந்தசுவாமி கோவில் மகோற்சவத்தை முன்னிட்டு

### காளாஞ்சி வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

விகாரி வருடம் ஆவணி மாதம் நல்லூர் கந்தசுவாமி கோவில் மகோற்சவம் தொடர்பான முன் அறிவிப்பும் காளாஞ்சி வழங்கல் நிகழ்வும் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வு நேற்று திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

யாழ் மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னல்ட் மற்றும் யாழ்மாநகர ஆணையாளர் ஆகியோருக்கு நல்லூர் கந்தசுவாமி கோவில் எசமானின் தொண்டர்களினால் ஆசார பூர்வமாக காளாஞ்சி வழங்கப்பட்டது.

நல்லூர் கந்தசுவாமி கோவில் மகோற்சவம் எதிர்வரும் ஓகஸ்ட் 3ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில கூறாவத்தை, மயிலங்காடு, ஏழாலை, குப்பிளான், கட்டுவன், கட்டுவன்புலம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் தோணிக்கல் லக்ஸபானா கிராமம் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும்.

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சரவணை மயிலப்புலம் அருள்மிகு திருப்பொலி கட்டுவன்வான் பூரணா புட்கலா சமேத ஐயனார் திருக்கோவில் பரிவார நூதன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் 6ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணி முதல் 11.50 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

இதில் எண்ணெய்க் காப்பு சாத்துதல் நாளை 5 ஆம் திகதி காலை 8 மணி முதல் இடம்பெறும். (5)

## பதவி விலகலை தேரரின் காதுகளுக்கு கொண்டு சென்ற ஆளுநர் மைத்திரி

(கண்டி)

ஆளுநர்களான அசாத் சாலி, ஹிஸ்புல்லாவின் பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்றுக்கொண்டுள்ளாரென்ற செய்தியை, மத்திய மாகாண ஆளுநர் மைத்திரி குணரத்ன, அத்துரலிய ரத்ன தேரரிடம் தெரிவித்தார்.

அத்துரலிய ரத்ன தேரரை பார்வையிடுவதற்காக நேற்று வந்தபோதே ஆளுநர் மைத்திரி குணரத்ன இதனைத் தெரிவித்தார். (இ-7)

குருநாகல்

## வைத்தியருக்கெதிராக 500 முறைப்பாடுகள்

(கொழும்பு)

கைது செய்யப்பட்டுள்ள வைத்தியர் சேகு ஷிஹாப்தீன் மொஹமட் ஷாஃபி என்பருக்கு எதிராக இதுவரை 500க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- நல்லவர்கள் செய்த தியாகத்தின் பயனை, மனிதகுலம் அனுபவித்துக் கொண்டு இருக்கிறது.
- தேவையற்ற விடயத்தில் மனம் ஈடுபட்டால், ஆக்கசக்தி விரயமாகி விடும்.
- அளவற்ற மனபலம், இரக்கமுள்ள இதயம் கொண்ட மனிதனே மகாத்மா. அவனால், உலகமே நன்மை அடைகிறது.
- எப்போதும் தன்னம்பிக்கை கொண்டிருங்கள். அது தெய்வீக சக்தியை நம்மிடம் வரவழைத்து விடும்.
- வாழ்வில் துன்பம் ஏற்படுவதற்கு நம்மிடமுள்ள அறியாமையைத் தவிர வேறு காரணம் இல்லை.

# திருநெல்வேலி கலாமன்ற ச.ச.நிலைய கிரிக்கெட் பருத்தித்துறை கொலின்ஸ் அணி சம்பியன்





திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையத்தின் 71 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, கலாமன்ற சனசமூக நிலையமும் கலாமன்ற விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்திய மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி திருநெல்வேலி முத்துத் தம்பி மகா வித்தியாலய மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணியளவில் சனசமூக நிலையத் தலைவர் இ.பகீரதன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சனசமூக நிலையத்தின் போசகர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக ந. ஆறுமுகதாஸ் கலந்து கொண்டார். கௌரவ விருந்தினர்களாக, முத்துத்தம்பி மகா வித்தியாலய அதிபர் இ.பசுபதீஸ்வரன், நல்லூர் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் க.மயூரன் மற்றும் J/114 கிராம உத்தியோகத்தர் ம.வசந்தரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக கலாமன்ற விளையாட்டுக்கழகத்திற்கும் BBK partnership அணிக்கும் இடையில் காட்சிப் போட்டி நடைபெற்றது. அதில் BBK partnership அணி வெற்றி பெற்றது. அதனை தொடர்ந்து இறுதிப்போட்டி ஆரம்பமானது.

இறுதிப்போட்டியானது 7 வீரர்கள் - ஆறு பந்து பரிமாற்ற போட்டியாக நடைபெற்றது. அதில் பருத்தித்துறை கொலின்ஸ் விளையாட்டுக்கழகமும் கொட்டடி இளங்கதிர் விளையாட்டுக் கழகமும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் நிர்ணயிக்கப்பட்ட ஆறு பந்து பரிமாற்றத்தில் மூன்று இலக்குகளை இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றது. துவாரகன் 17 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

அதனை அடுத்து 59 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய கொட்டடி இளங்கதிர் விளையாட்டுக் கழகத்தினர் நிர்ணயிக்கப்பட்ட ஆறு பந்துப் பரிமாற்றத்தில் 55 ஓட்டங்களையே பெற்றனர்.

மூன்று ஓட்டங்கள் வித்தியாசத்தில் பருத்தித்துறை கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று, வெற்றிக்கேடயத்தை பெற்றுக்கொண்டதுடன், 20 ஆயிரம் ரூபாய் பணப்பரிசிலையும் பெற்றது. இரண்டாம் இடத்தை பெற்ற இளங்கதிர் விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்திற்கான கேடயத்தை பெற்றுக்கொண்டதுடன் 10 ஆயிரம் ரூபாய் பணப் பரிசிலையும் பெற்றது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# 17 வயதுக்குட்பட்ட கூடைப்பந்தாட்டம் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றி










வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆண்கள், பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டிகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை கூடைப்பந்தாட்ட திடல்களில் நடைபெற்றன.

17 வயதுப்பிரிவு ஆண்களுக்கான இறுதிப்போட்டிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியும் தகுதி பெற்றன. இறுதிப்போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் நடைபெற்றது.

முதற்பாதியாட்டம் முடிவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி, 14:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலையில் இருந்தது. எனினும், அதன் பிறகு வீறுகொண்டெழுந்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, தொடர்ச்சியாக புள்ளிகளைப் பெற்றது.

இறுதி செக்கன்கள் வரையில் ஆட்டத்தின் முடிவில் உறுதியில்லாமல் இருந்த போதும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, சாமர்த்தியமான ஆட்டம் மூலம் 35:33 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியனாகியது.

கடைசி செக்கன்கள் வரையில் ஆட்டத்தின் முடிவில் மாற்றம் வரும் என்ற நிலையிலும் இறுதி வரையில் போராடி கிண்ணம் வென்றது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி, 66:33 என்ற புள்ளிகள் அடிப்படையில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை வீழ்த்தியது. (க-26)

# 20 வயதுப்பிரிவு கூடைப்பந்தாட்டம் யாழ். மத்திய கல்லூரி அணி மகுடம்







வடமாகாண கல்வி திணைக்களத்தின் ஏற்பாட்டில், பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆண்கள், பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டிகள், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை கூடைப்பந்தாட்ட திடல்களில் நடைபெற்றன.

20 வயதுப்பிரிவு ஆண்களுக்கான இறுதிப்போட்டிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியும் தகுதி பெற்றன.

அரையிறுதியாட்டத்தின் போது, யாழ்ப்பாணம் இந்துவின் 2 வீரர்கள் உபாதைக்குள்ளாகினர். அத்துடன், மாற்று வீரர்கள் அணியில் இல்லாமை காரணமாகவும் யாழ்ப்பாணம் இந்து இறுதிப் போட்டியில் பங்கு கொள்ள முடியாமல் வெளியேறியது. இதனால் சென்றலைட்ஸ் அணி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி, 70:45 என்ற புள்ளிகள் அடிப்படையில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை வென்றது. (க-26)



வல்வெட்டித்துறை வருத்தப்படாத வாலிபர் சங்கம் நடத்தும் உதைபந்தாட்டம் மற்றும் வலைப்பந்தாட்ட இறுதியாட்டங்கள் அண்மையில் நடைபெற்றன. வலைப்பந்தாட்ட இறுதி ஆட்டத்தில் உதயசூரியன் எதிர் நேதாஜி அணிகள் மோதின. 10:8 என்ற கோல் கணக்கில் உதயசூரியன் அணி வெற்றி பெற்று சம்பியனானது.

# இனங்களுக்கிடையில் முரண்பட்டால் நாடு அழிவை நோக்கியே பயணிக்கும்

## சமாதானத்தை பாதுகாப்பதற்கு அர்ப்பணிபுடன் செயற்பட வேண்டும் - ஜனாதிபதி மைத்திரி



**(கொழும்பு) இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்திக்கொள்வதனால் நாடு அழிவை நோக்கி பயணிக்கும் என்பதனால் சகோதரத்துவத்துடனும் ஒருவருக்கு ஒருவர் புரிந்துணர்வுடனும் நாட்டில் அமைதியைப் பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்த புரிந்துணர்வுடனும் புத்திசாதுரியத்துடனும் செயற்பட்டு பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டியது அவசியமாகும் என்பதோடு, நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

இஸ்லாமிய பக்தர்களுக்காக நேற்று பிற்பகல் கோட்டை ஜனாதிபதி மாளிகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய இப்தார் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் செய்தி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இஸ்லாமிய மதத் தலைவர்களும் பெருமளவிலான இஸ்லாமிய பக்தர்களும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர்.

நாட்டு மக்கள் ஒருவரையொருவர் குரோதத்துடனும் சந்தேகத்துடனும் நோக்கும் நிலை காணப்படும் வரையில் நாட்டில் ஐக்கியத்தினை கட்டியெழுப்ப முடியாது. அடிப்படைவாத மற்றும் பயங்கரவாத செயற்பாடுகளை முற்றாக நிராகரிப்பதோடு, சகல இன மக்களும் நியாயமான சமூகத்தில் சுதந்திரமாக வாழக்கூடிய சூழலைக் கட்டியெழுப்ப அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

முஸ்லிம்கள் பெருமளவில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் பொய்யான பரப்புரைகள் தொடர்பில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இவ்விடயம் தொடர்பான அறிக்கை ஒன்றினை தான் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி தாக்குதலின் பின்னர் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக 559 முஸ்லிம்கள் மாத்திரமே தடுத்து வைக்கப்பட்டுள்ளதோடு, உரிய விசாரணைகளின் பின்னர் பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்பற்ற அனைவரையும் விரைவில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் அனைத்து இனங்களினதும் மதங்களினதும் கௌரவத்தினை பாதுகாத்து அனைவருக்கும் நியாயத்தைப் பெற்றுக்கொடுப்பதற்காக ஜனாதிபதி மேற்கொண்டுவரும் முயற்சியினை பாராட்டிய இஸ்லாமிய மதத் தலைவர்கள், நாட்டில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கும் ஆசி வழங்கினர்.

சபாநாயகர் கரு ஜயசூரிய உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் வெளிநாட்டு தூதுவர்கள், வர்த்தக சமூகத்தினர் உள்ளிட்ட அதிதிகள் பலரும் இந்த வைபவத்தில் கலந்துகொண்டனர். (ம-3)

## நிலைமைகளை...

களாக இருந்து செயற்படுங்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் அமைச்சர்கள் சிலர் மீது தொடர்ச்சியாக அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருகின்ற நிலையிலும் அவர்கள் பதவிவிலக வேண்டும் எனவும் வலியுறுத்தி வருகின்ற நிலையில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் பிரதிநிதிகள் அனைவரும் நேற்று காலையில் கூடி ஆராய்ந்ததுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து தமது நிலைப்பாட்டினை தெரிவித்தனர். இதன் போதே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம-3)

## முஸ்லிம் அமைச்...

இன ரீதியாக முஸ்லிம்களுக்கு கடும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இதனால் நாட்டு மக்களுக்கு கடுமையான பாதிப்பு ஏற்படும் ஏற்கெனவே முஸ்லிம்களின் சொத்துக்கள் வன்முறையின் மூலம் அழிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் மீண்டும் முஸ்லிம் சமூகத்துக்கு ஒரு அழிவு ஏற்படக்கூடாது என்பதில் நான் கவனமாக உள்ளேன்.

எனவே முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு அந்த சமூகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக வேண்டியும் நான் இராஜினாமா செய்துள்ளேன் என்றும் ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

இதேவேளை முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு ஜனாதிபதியிடம் இந்த இராஜினாமா மூலம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் ஹிஸ்புல்லா மேலும் தெரிவித்தார். (ம-3)

# புதிய ஆளுநர்களாக முஸம்மில், பியதாச?



(கொழும்பு)

ஹிஸ்புல்லா, அசாத் சாலி தமது ஆளுநர் பதவிகளை இராஜினாமா செய்துள்ள நிலையில், மேல் மாகாண ஆளுநராக முன்னாள் கொழும்பு மாநகரசபை மேயர் ஏ.ஜே.எம். முஸம்மில், கிழக்கு மாகாண ஆளுநராக சுதந்திரக்கட்சியின் முன்னாள் செயலாளர் ரோஹண லஷ்மன் பியதாச ஆகியோர் நியமிக்கப்படலாமென தகவல் வெளியாகியுள்ளது. (ம-3)

# இலங்கை பௌத்த நாடு என்பதனை உலகம் ஏற்காது!

### அமைச்சர் மனோ கணேசன்

(கொழும்பு)

கௌதம புத்தரின் பெயரால், பேரினவாதம் பேசி, ஆர்ப்பரித்து, ஊர்வலம் போய், இந்நாட்டு முஸ்லிம் அமைச்சர்களை இராஜினாமா செய்யும் நிலைமைக்கு தள்ளியுள்ள பௌத்த துறவிகள், சித்தார்த்த கௌதம புத்தரை அவமானப்படுத்தி விட்டார்கள். இனியும் இந்நாடு ஒரு பௌத்த நாடு என்பதை உலகம் ஏற்றுக்கொள்ளாது என அமைச்சர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

முஸ்லிம் அமைச்சர்களை பதவி விலக கூறி ஊர்வலம் போய், ஆர்ப்பாட்டம் செய்து, உபவாசம் இருக்கும் பௌத்த துறவிகள் நாளை மீண்டும் ஒரு முறை, தமிழ் அரசியல்வாதிகளுக்கு எதிராகவும், பிறகு தமிழ்-சிங்கள கத்தோலிக்க அரசியல்வாதிகளுக்கு எதிராகவும், பின்னர் தாம் விரும்பாத சிங்கள பௌத்த அரசியல்வாதிகளுக்கு எதிராகவும், அவர்களை பதவி விலக்க கூறி சிங்கள மக்களை தூண்டி விட்டு குரல் எழுப்புவார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (ம-3)

# போராட்டத்தில் கலந்து கொண்ட 3 முஸ்லிம்கள் மீது தாக்குதல்

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரதன தேரருக்கு ஆதரவாக கண்டியில் நேற்று இடம்பெற்ற போராட்டத்தில் முஸ்லிம் நபர்கள் மூவரால் பதற்ற நிலை ஏற்பட்டது.

முஸ்லிம் அமைச்சர்களை பதவி விலகக் கோரி பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரதன தேரர் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் கடந்த சில நாட்களாக ஈடுபட்டிருந்தார்.

இந்நிலையில் அவருக்கு ஆதரவாக நேற்றைய தினம் கண்டி நகரில் பாரிய போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில், பத்தாயிரத்திற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்ட குறித்த போராட்டத்தில் தங்களது அடையாளத்தை வெளிப்படுத்த முடியாத மூன்று முஸ்லிம் நபர்கள் கலந்து கொண்டதன் காரணமாக அங்கு பதற்றம் ஏற்பட்டது.

குறித்த மூவரையும் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களை அங்குள்ளவர்கள் கேட்டபோது அவர்கள் மூவரும் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த தவறியுள்ளனர்.

இதன்காரணமாக அங்கு இருந்தவர்கள் குறித்த மூவர் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர். பின்னர் அங்கு கடமையில் இருந்து பொலிஸார் அவர்களை பொதுமக்களிடம் இருந்து அப்புறப்படுத்தியுள்ளனர்.

எனினும் பொலிஸாரிடமும் தமது அடையாளத்தை அவர்கள் உறுதிப்படுத்த முடியாத காரணத்தினால் குறித்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-3)

# பட்டப்பகலில் வீடு உடைத்து 10 பவுண் நகை, பணம் களவு

## பருத்தித்துறை தம்பசிட்டியில் சம்பவம்

வீட்டில் யாரும் இல்லாததை பயன்படுத்தி பட்டப்பகல் வேளை வீடு உடைக்கப்பட்டு அங்கிருந்த நகை மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை நண்பகல் அளவில் பருத்தித்துறை தம்பசிட்டி பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

வீட்டில் உள்ள குடும்பத்தலைவர், குடும்பத்தலைவி ஆகியோர் அரச பணி புரிபவர்களாகவும் அவர்கள் தொழில் நிமித்தம் சென்றதை சாதகமாகப் பயன்படுத்தி வீட்டின் கதவினை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 10 பவுண் தங்க நகை மற்றும் 15 ஆயிரம் ரூபாய் பணம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளதாக பருத்தித்துறை பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. (ம-60)


**கொவிசெத**

திகதி 2019.06.03
சீட்டிழுப்பு இலக்கம் 2137
ஆங்கில எழுத்து W
வெல்லப்பட்ட இலக்கங்கள் 17 36 43 49
தேசிய லொத்தர் சபை

**மஹஜன சம்பத**

திகதி 2019/06/03
சீட்டிழுப்பு இலக்கம் 3930
ஆங்கில எழுத்து K
வெல்லப்பட்ட இலக்கங்கள் 2 7 9 2 6 4
தேசிய லொத்தர் சபை

**சுப்பிரி வாசனா**

திகதி 2019/06/03
சீட்டிழுப்பு இலக்கம் 1431
எழுத்து 20
வெற்றி இலக்கம் 12 23 27 52 02 01
தேசிய லொத்தர் சபை

**மெகா பவர்**

திகதி 03/06/2019
சீட்டிழுப்பு இலக்கம் 388
வெற்றி எழுத்து Z
சுப்பர் இலக்கம் 01
வெற்றி இலக்கங்கள் 04 43 54 72
தேசிய லொத்தர் சபை

## ஒற்றுமை என்று...

பாராளுமன்றத்திலுள்ள முஸ்லிம் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் தமது பதவிகளை உடன் அமுலுக்கு வரும் வகையில் இராஜினாமா செய்துள்ளனர்.

அலரிமாளிகையில் நேற்று முஸ்லிம் பாராளுமன்ற பிரதிநிதிகளினால் நடத்தப்பட்ட விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த விடயத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கம் தெரிவித்தார்.

பிற்பகல் 4 மணிக்கு அறிவிக்கப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பு சுமார் 6 மணியளவிலேயே ஆரம்பமாகியது.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பு ஆரம்பமாவதற்கு முன்னர், ஊடகவியலாளர்களிடம் விசேட கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டது.

இந்த ஊடக சந்திப்பில் தாம் மாத்திரமே கருத்து தெரிவிப்பதாகவும், ஊடகவியலாளர்களுக்கு கேள்விகளை எழுப்புவதற்கான சந்தர்ப்பம் மறுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்ட நிலையிலேயே இந்த ஊடக சந்திப்பு ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் கருத்துக்களை வெளியிட்டார்.

தமது இராஜினாமா விடயம் குறித்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இடம்பெற்ற சந்திப்பினாலேயே, ஊடக சந்திப்பை ஆரம்பிப்பதற்கு தாமதம் ஏற்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

தமது இராஜினாமா விடயத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இறுதியில் ஏற்றுக் கொண்டதாகவும் ரவூப் ஹக்கீம் கூறினார்.

நாட்டின் நற்பெயரை காப்பாற்றுவதற்காகவும், அப்பாவி பொதுமக்களை பாதுகாப்பதற்காகவுமே இந்த தீர்மானத்தை தாம் எட்டியதாக அவர் குறிப்பிட்டார்.

ஏப்ரல் 21ஆம் திகதி நடத்தப்பட்ட தற்கொலை தாக்குதல் சம்பவத்தை தாம் வன்மையாக கண்டிப்பதாகவும் அவர் கூறினார்.

முஸ்லிம் பெயர்களை வைத்துக்கொண்டு அந்த பாதகத்தைச் செய்திருப்பதால், பாதுகாப்பு படையினருக்கு ஒத்துழைப்புக்களை வழங்கி, இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களை முற்றாக ஒழிக்கும்படி தாம் வலியுறுத்தியுள்ளதாகவும் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இந்த நிலையில், இலங்கை வாழ் முஸ்லிம் மக்கள் மீது கட்டவிழ்த்துப்பட்டுள்ள வன்முறைகளை தடுப்பதற்கு அரசாங்கம் தவறியுள்ளதாகவும், தற்போதைய சூழ்நிலையிலும் வெறுப்பு பேச்சுகளை கக்குவோர் வன்முறைகளை தூண்டி விட்டுக் கொண்டிருப்பதாகவும் அவர் கவலை வெளியிட்டார்.

நாட்டில் தற்போது காணப்படுகின்ற நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர தவறும் பட்சத்தில், எதிர்காலத்தில் பாரிய வன்முறை சம்பவங்களும், பாரிய உயிரிழப்புக்கள் மற்றும் சொத்து சேதங்களும் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், இந்த பதவி விலகலின் ஊடாக, தாம் அரசாங்கத்திற்கு வழங்கிய ஆதரவை விலக்கிக் கொள்வதாக கருதக்கூடாது எனவும் ரவூப் ஹக்கீம் கூறியுள்ளார்.

தாம் எதிர்வரும் காலங்களில் பாராளுமன்றத்தின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்களாக செயற்பட்டு, அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டு மக்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும் எனவும் இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதனாலேயே தாம் வகித்த பதவிகளை இராஜினாமா செய்ய தீர்மானித்ததாகவும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டார்.

இதேவேளை, இலங்கை மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக்குழு மீது தாம் நம்பிக்கையிழந்துள்ளதாக கூறிய ரவூப் ஹக்கீம், இந்த சம்பவம் தொடர்பில் தாம் குற்றப் புலனாய்வு பிரிவினர் மீதே நம்பிக்கை கொண்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் விரைவில் அடையாளம் காணப்பட்டு, சட்டத்திற்கு முன்நிறுத்தி, முஸ்லிம் மக்களின் இருப்பை உறுதிப்படுத்த வேண்டும் என பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக, அரசாங்கத்திடம் நேற்று கோரிக்கை விடுத்தனர்.

ஆளுநர்களான அசாத் சாலி மற்றும் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா ஆகியோரின் ராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்றுக்கொண்டுள்ளார். ஜனாதிபதி ஊடகப்பிரிவின் ட்விட்டர் தளத்தில் இந்த செய்தி வெளியிடப்பட்டுள்ளது. (ம-3)

## இரத்த ஆறு ஓட...

காணப்பட வேண்டும் எனவும் இதற்கு அமைச்சு பதவிகள் தடையாக இருக்க கூடாது என்பதனால் தாம் இந்த முடிவினை எடுத்ததாகவும் அவர் கூறினார்.

அத்தோடு முஸ்லிம் அரசியல்வாதிகள் தேசிய பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை தீவிரவாத நடவடிக்கைகளை முஸ்லிம் சமூகம் எப்போதுமே நிராகரிக்கும் என தெரிவித்த அவர் நாட்டில் உறுதியை பேண தொடர்ச்சியான விசாரணைக்கு ஆதரவு வழங்க தயாராக இருப்பாக தெரிவித்தார்.

முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் தவறியதாக குற்றம்சாட்டி நேற்று தமது அமைச்சு, பிரதி அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சு பதவிகளை இராஜினாமா செய்ததாக 9 முஸ்லிம் அமைச்சர்கள் அறிவித்துள்ளனர்.

அத்தோடு தொடர்ந்தும் பின்வரிசையில் இருந்து அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவோம் என்றும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## 2,289 பேர் இது...

விக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கைது செய்யப்பட்டவர்களில் தற்போது ஆயிரத்து 655 பேருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளதாகவும் 423 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் 211 பேர் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் மற்றும் குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினரின் தடுப்புகாவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

மேலும் இந்த சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களில் 330 சிங்களவர்களும் 139 தமிழர்களும் ஆயிரத்து 820 முஸ்லிம்களும் அடங்குகின்றனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் ஆதரவுடன் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதலில் சுமார் 250 இற்கும் மேற்பட்ட அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்ததுடன் 500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கனேடி உயர்ஸ்தா...

ஞானம் சிறீதரனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று பாராளுமன்ற உறுப்பினரின் காரியாலயமான அறிவகத்தில் நடைபெற்றது.

சமகாலத்தில் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், தமிழர்களின் தீர்வு விடயத்தில் அரசின் அசமந்தப்போக்கு ஏப்ரல் 21க்கு பின்னர் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் பாராளுமன்ற உறுப்பினர், கனேடிய உயர்ஸ்தானிகருக்கு சுட்டிக்காட்டினார்.

குறித்த சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினருடன் வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவும் கலந்து கொண்டிருந்தார். முன்னாள் கல்வி அமைச்சரினால் கனேடிய உயர்ஸ்தானிகர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். (ம-3)

## ரிஷா....

நிலையத்துக்கு முன்பாக நடைபெற்றது. இந்த போராட்டத்தினால், அப்பகுதியில் வாகன நெரிசல் ஏற்பட்டதுடன் போக்குவரத்துக்கள் அனைத்தும் முற்றாக ஸ்தம்பிதமடைந்தன. (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

வருமானப் பரிசோதகர்
விசேட இறுதிக் கருத்தரங்குகள்
புதன் (5/6) 9.00 - 3.00 மணிவரை
மொழித்திறன், உளச்சார்பு எதிர்பார்க்கை வினாக்கள்
கட்டணம்- 250/=
மாலை நேர பிரிவு
செவ், புதன், வியா
4.00 - 6.30
நடைபெறுகின்றன.
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவு



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்
ராஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: ராஜ் - 077 679 6623 (8880)

இறைச்சிக் கோழி விற்பனை
புறொய்லர், கல்பேட், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக்குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
T.P: 077 868 9500
(9023)

உல்லாசப் பயணிகள் விடுதிக்கு
பணியாளர் தேவை
● சமையலாளர் (வைத்திய சான்றிதழ் உடையவர்)
● பரிமாறுநர் (Waiter)
● முகாமையாளர்
இன்று (04.06.2019) செவ்வாய்க்கிழமை நேரில் சந்திக்கவும்
இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 5876, 077 601 6310, 077 243 1310

சிவப்பு மணல் விற்பனைக்கு
பள்ள நிலங்களை சீர்செய்வதற்கும் கட்டட அத்திபாரங்கள் நிரப்புவதற்கும், பூங்கன்றுகள் நாட்டுவதற்கும் உகந்த சிவப்பு நிற மணல் மண் விற்பனைக்கு உண்டு. தேவைப்படுவோருக்கு டிப்பர் மூலம் தங்கள் இடத்துக்கே கொண்டு வந்து மிகக் குறைந்த விலையில் இறக்க முடியும்.
077 940 0963
(C-6612)

யப்பான் சயிக்கிள்

விலை 12,500/= லிருந்து
01. லேடிஸ் சையிக்கிள்கள்
02. யென்ஸ் சையிக்கிள்கள்
03. கியர் சையிக்கிள்கள்
04. மடக்கும் சைக்கிள்கள்
05. Belt சைக்கிள்கள்
06. பாரம் ஏற்றும் சைக்கிள்
07. டிவரஞ்சர் சைக்கிள்கள்
08. LED ஓட்டோமற்றிக் லைட் சைக்கிள்கள்
இலகுவான ஓட்டம்
பாட்ஸ் தாராளமாக உண்டு
கழுவிபூட்டுதல், திருத்த வேலைகள் இல்லை
நீண்டகாலப்பாவனை (10 வருடம்)
அன்ரன் என்ரபிறைசஸ்
பலாலி றோட், கோண்டாவில். (பாம் ஸ்கூல் முன்பாக)
கிளை: மடத்தடிச் சந்தி, பருத்தித்துறை றோட், சாவகச்சேரி.
(C-6594)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி

> பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
> அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
> யாரும் படிக்கலாம். www.ambafrance-lk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

DELIVERY IN 3-5 DAYS
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS

கனடா ஹொட்டேல்துறை வேலைவாய்ப்பு!
Chefs & Waiters
Front Office Managers
Restaurant Managers
வடக்கின் முதல் & ஒரேயொரு அரச அங்கீகாரம்பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்
எமரல்ட் ஐல்
License No. 2268
077 00 38 215
0777 324 004
021 221 9 221
221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
ஷோரா புடவையகம், The Lover/Teen Girls க்கு அருகே
jaffna@emeraldisle.lk www.emeraldisle.lk